www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜன.31–பெப்.06,1999

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 294



# பெர்னாண்டஸ் திட்டம்!

## காத்திருக்கும் இழப்பு



## முன்னாள் முதல்வரின் இந்நாள் திட்டம்

## கைரேகையும் காதலரும்



படிப்பகம்

# முரசம்

## -அரசியல் பயங்கரவாதம்-

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வடமேல் மாகாண சபை
தேர்தலின்போது
நடந்துள்ள வன்முறைகள்
அச்சமூட்டுகின்றன!

இங்குள்ள ஜனநாயக
அமைப்பு முறையில்
நீதியான தேர்தல் என்பது
அழகான கற்பனை!

அவ்வாறான
தூய தேர்தல் ஒன்றை
நாம் எதிர்பார்க்கவுமில்லை!

கள்ள வாக்குகள்,
அதிகாரத் துஷ்பிரயோகம்,
கட்சிமோதல்கள்
என்பவை இல்லாத
தேர்தல் ஒன்று
இன்றுவரை இங்கு
நடந்ததும் இல்லை!

நிறைவேற்ற முடியாத
வாக்குறுதிகள் என்பது
நன்கு தெரிந்தும்
வாக்காளர்களிடம் கூறுவதும்-
இலஞ்சம்
கொடுப்பது மாதிரித்தான்!

அதனால், நீதியான
தேர்தல் பற்றிய
மாயை நமக்கில்லை!

ஆனால், எதற்கும்
ஓர் அளவுண்டு!
இம்முறை வன்முறை
வரம்பு கடந்துவிட்டது!

அதிகாரத் துஷ்பிரயோகம்
அப்பட்டமாக
அரங்கேறியிருக்கிறது!

எதிரணிகள்
பிரசாரம் செய்வதையே
நிறுத்தும் அளவுக்கு
ஆளும் தரப்பு ஆதரவாளர்கள்
அராஜகம் புரிந்துள்ளனர்!

தன் பங்குக்கு
ஐ.தே.கட்சியும்
வன்முறையில்
இறங்கத் தயங்கவில்லை!
ஆயினும் அதிகாரம்
அதன் கையிலில்லை.
ஆகவே, அதன்
வன்முறைகள்
ஒரு வரம்போடு நின்றன!

எதிரணித் தலைவரை
கொலைசெய்ய
முயற்சி நடந்துள்ளது!

கலாநிதி விக்கிரமபாகு
கருணாரத்னாவையும்
குண்டர்கள்
தாக்கியுள்ளனர்!

ஐ.தே.க. ஆதரவாளர்
சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்!
எதிரணிகளின் கொடிகள்
கட்டக்கூட
முடியாத சூழ் நிலை!

ஜே.வி.பி. கூட்டத்திலும்
குழப்பம்
விளைவிக்கப்பட்டுள்ளது!

அதேசமயம்
பொதுஜன முன்னணி
ஆதரவாளர்களும்
ஐ.தே.கட்சியினரால்
தாக்கப்பட்டுள்ளனர்!

ஆனாலும், எதிரணிகள்
தாக்கப்பட்டுள்ள
சம்பவங்களே
மிக அதிகமாயுள்ளன!

வன்முறைகள் மூளும்
என்பது முன்கூட்டியே
எதிர்பார்க்கப்பட்டது!
தற்செயலாக
ஏற்பட்ட சம்பவங்களல்ல!

அவ்வாறு இருந்தும்
வன்முறைகள்
கொடி கட்டிப்
பறந்தது எவ்வாறு?
எதிரணியினரைத்
தாக்கியவர்களோ,
துப்பாக்கிச் சூடு
நடத்தியவர்களோ
கண்டுபிடிக்கப்படவுமில்லை!

ஒழுங்காகத் திட்டமிட்டு
கட்டவிழ்த்து விடப்படும்
இதுபோன்ற வன்முறைகள்
அரசியல் பயங்கரவாதம்
என்று கூறத்தக்கவை!

இத்தகைய
அரசியல் பயங்கரவாதத்தை
விரிவுபடுத்தியதில்
ஐ.தே.கட்சிக்கு
முக்கிய பங்குண்டு
என்பதை மறப்பதற்கில்லை!

அவர்கள்
வளர்த்தார்கள் என்பதால்
இவர்களும்
அதற்குத் தீனிபோடுதல்
நியாயமில்லை!

வளர்த்த கடா
மார்பில் பாய்கிறது
என்று கூறலாம்தான்!
இன்று தீனி போடுபவர்களையும்
இந்தக் கடா
நாளை முட்டிமோதும்
என்பதையும் மறத்தலாகாது!

பயங்கரவாதத்தை
முறியடிப்பது
என்று கூறியபடி
வடக்கு-கிழக்கில்
போர் தொடர்கிறது!

தென்னிலங்கையில்
தேர்தல் களத்தில்
'அரசியல் பயங்கரவாதம்'
தலைவிரித்தாடியுள்ளது!
இதனைத் தடுக்க
ஆட்சியாளர் தவறியுள்ளனர்!

உண்மையான
பயங்கரவாதம் இதுதான்!

இது பரவுமானால்
தென்னிலங்கையில்
எதிர்காலத் தேர்தல்களில்
இரத்த ஆறு பெருகும்!

அதிகாரப் போட்டியில்
உதிரம் சிந்தத்
தயாராக உள்ள இக்கட்சிகள்,
இனப்பிரச்சனைக்கு
ஒருமித்த தீர்வைக்காண
திறந்த மனதோடு
முன்வரும் என்று
நாம் எதிர்பார்த்தால்

எமக்கு எப்போதும்
ஏப்ரல்
முதல் திகதிதான்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## ஆற்றலை வெளிப்படுத்தும் தியானம்

ஒவ்வொரு மனிதனிடமும் ஏதோ ஒரு வகையில் ஓர் ஆற்றல் ஒளிந்து கொண்டிருக்கும். சிலருடைய ஆற்றல் தானாகவே வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். ஆனால் சிலருடைய திறமை உள்ளமுங்கியே கிடக்கும். அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து உள்ளமுங்கிக்கிடக்கும் ஆற்றல் வெளிப்பட்டுவிடும்.

நம் ஒவ்வொருவரிடமும் ஒளிந்து கொண்டிருக்கும் ஆற்றலை வெளிப் படுத்துவதற்கான வாய்ப்பினை இறைவன்மீது நாம் செலுத்தும் பக்தி தருகிறது. ஐம்புலன்களையும் அகத்தே அடக்கி தியானத்திலீடுபடும்போது, நம்மை அறியாமலே சக்தி வெளிப்படுகிறது. தொடர்ந்து பயிற்சி செய்யும்போது சக்தியின் வெளிப்பாடு மிக உன்னத நிலைக்கு நம்மை இட்டுச் செல்கிறது.

தியானம் செய்வது-யோகிகள், ஞானிகள், பிரமச்சரியம் அனுஷ்டிப்ப வர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதில்லை. எல்லா மனிதர்களுக்கும் அது கைவரக்கூடியது. சம்சாரம்-பிள்ளைகுட்டிகள் ஆகியோருடன் இல்லறத்திலீடுபடுபவர்களும் தியானத்தினால் பெரும் பலனடையலாம். தியானம் எந்த மதத்தவராலும், எந்த இனத்தவராலும், எந்த நாட்டவராலும் கடைப்பிடிக்கப்படக்கூடிய ஒரு பொதுப்பழக்கம்.

சைவர்கள் பலதரப்பட்ட உருவங்களை வணங்குவதால் எந்தத் தெய்வீக உருவத்தை மனத்தில் நிலை நிறுத்தித் தியானிப்பது என்று தடுமாறத் தேவையில்லை. யார் யாருக்கு எந்தத் தெய்வத்தில் மனதைச் செலுத்த முடியுமோ, அத்தெய்வீக உருவையே மனதில் பதிய வைக்கலாம். அருவமும் உருவமுமற்ற சிவலிங்க உருவத்தின் மீது-உள்ள உணர்வு களைச் செலுத்துவது சைவ சமயிகளுக்கு நற்பலனைத்தரும்.

ஞானேந்திரன்.

## அல்லாஹ் இருப்பதை உணர்ந்த 'நாத்திகன்'

இஸ்லாமிய மார்க்க மேதை ஒருவர் மரணப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தார். அவ்வேளையில் தன்னை யாரும் பார்ப்பதற்கு அவர் அனுமதிக்கவில்லை.

ஆனால் அங்கு வந்த, எல்லாமே இயற்கை- அல்லாஹ்வே இல்லையென்ற 'நாத்திகன்' ஒருவனை மட்டும் தன்னைப் பார்ப் பதற்கு அனுமதித்தார்.

இது நாத்திகனுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதன் விளக்கம் யாதென அறிய விரும்பினான் நாத்திகன்.

மேதை அவர்களை நெருங்கிய நாத்திகன் "என்னை மட்டும் இவ்வேளையில் தங்களைப் பார்க்க அனுமதிக்கக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு மேதை அவர்கள்: "இதற்கு முன் என்னை இங்கு பார்க்க வந்தவர்கள் எல்லாம் அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்று ஈமான் கொண்டவர்கள். அவர்களை நான் இவ்வுலகில் பார்க்கத் தேவையில்லை. மறுமை நாளில் நான் அவர்களைச் சந்திப்பேன்.

நீங்களோ நாத்திகக் கொள்கையில் ஊறிப்போனவர்கள். நான் உங்களை மறுமை நாளில் சொர்க்கத்தில் சந்திக்க முடியாது. அதனால்தான் இங்கு என்னைப் பார்க்க அனுமதித்தேன்!" என்றார்கள்.

மேதையின் இப்பதிலைக்கேட்ட 'நாத்திகன்' ஈமான் கொண்டு அல்லாஹ் இருப்பதை உணர்ந்து கொண்டான்.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.291



### பரிசுக்குரிய கவிதை

### கலங்காதே....!

கடந்து வந்தது
கடினமான பாதைதான்,
கலங்காதே கண்ணே....
கரை கண்ணுக்குத்
தெரிகிறது!

எம். ஜோன்சன்-நாவலப்பிட்டி.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**பிரிவு**

வவுனியாவில் அப்பா
வாகரையில் அம்மா
நாகதீவில் நானும்....
ஒன்று சேர்வதெப்போ?

செ. வல்லிபுரம்-
கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13.

**திரும்பாதே!**

கவனம்!-உன
கைத் துணியாலேயே
அவர்கள் உனக்குத்
தூக்குக்கயிறு தயாரிப்பார்கள்!

ரவ்ஷன் ஸெயின்- கராகொடை,
யட்டியந்தோட்டை.

**ஏமாற்றாதே!**

'போரில்லை இந்நாட்டில்.....
பயமில்லை நடமாட......
குறைவில்லை எதிலும்....!'
என்றுலகை ஏமாற்ற
நம்மவர் எடுத்த 'நிழற்படம்!'

அ. சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

**நெஞ்சம் மறக்குமா?**

அக்கா கிருஷாந்தியை
நிறுத்தி விசாரித்த
சோதனைச் சாவடியை
ஆண்டுகள் மறைந்தாலும்
நெஞ்சம் மறந்திடுமா??

கிரிசாந்தி சந்திரகலா- புதியவன்னியனார் வீதி,
மட்டக்களப்பு

**கவலைப்படாதே!?**

பிரியமனமில்லையா?
கவலைப்படாதே!
மற்றொரு செம்மணியிலாவது
ஒன்று சேர்வோம்!

யாழ் நிஷாகிரி- யாழ்ப்பாணம்.

**நடை**

நடையா இது நடையா?
மிதிவெடி பயம்தான் தெரியுது!

குகன்- மட்டக்களப்பு.

**புதைகுழி**

ஷெல் வெடியால் மாண்டு விட்ட
அன்னையவள்-புதைகுழியை
சுடுகாட்டில் தனியாக
தேடுகின்றாள் இச்சிறுமி!

ஏ.எம். முஸ்தபா-
மீராகேணி மாக்கான், ஏறாவூர்.

**அம்மாவின் நினைவில்**

செம்மணி புதையலை பார்க்காதே....
சிதைந்த உடலையும் நினைக்காதே....
கருகிய கண்களால் கலங்காதே....
கண்மணி நீயும் திரும்பாதே!

தெ. லோஜனா-கொழும்பு-15.

**வேண்டுகோள்!**

செம்மணிக்குள் போய்விட்ட
அம்மாவின் ஞாபகத்திற்கு
உள்ளதெல்லாம்-இந்த
சேலைத்துண்டு ஒன்றுதான்...!


அ. நிஷாந்தன்- யாழ்
பல்கலைக்கழகம், வவுனியா.

**நாளைய விடியலுக்காய்...!**

இன்று இருளாகிவிட்ட
அம்மாவின் ஞாபகமாய்
இரத்தக் கறை படிந்த
இந்தத் துணியு(வு)டன்
நாளைய விடியலுக்காய்
நானும் போகிறேன்!

மயூரா யோகேந்திரன்-
ஆரையம்பதி-02.

## கவிதைப் போட்டி இல.294



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.02.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.294
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

### எப்படிக் கூறலாம்?

முரசே, புலிகளுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே உள்ள பிரச்சனை சகோதரப்பிரச்சனையல்ல. புலிகளை எதிர்ப்பதாகக் கூறிக்கூறியே எம் இன உரிமைகளை விட்டுக் கொடுக்கிறார்கள். எனவே, முரசு கூறியதுபோல 'சகோரப் படுகொலை' என்று கூறுவதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு அருகதை கிடையாது.

எஸ்.சம்பந்தன, மட்டக்களப்பு.

'கண்ணீரில் கரைந்த இரவு'களில் டயானாவின் பலதரப்பட்ட 'போஸ்'களில் படங்கள் வெளியாயினும், பெண்மையின் முழுமை நிலையான தாய்மையடைந்த நிலையில், அதாவது, டயானாவை ஒரு கர்ப்பிணித் தாயாய் காண நெடுநாள் ஆசை. பிரசுரிப்பீர்களா?

செல்வி ஜெ. மபாஸா,
அக்கரைப்பற்று.

முரசே!

வண்ணத் தமிழில் 'இலக்கிய நயம்' தரும் ரசிகனது ஆக்கங்களை சுவைபடச் சுமந்து வரும் உன்னை கன்னற் தமிழால் புகழாரம் சூட்டி பாராட்டுகின்றேன். அரசியல் அலசல்கள், இனிய கவிதைகள், இத்தனையும் சுமந்து தரும் உன்னை நித்தம் நினைக்க வைக்கும் இனிய முரசே! வாழ்த்துக்கள்.

அ.அரசரெத்தினம், மூதூர்.

### நிலைப்பாடு என்ன?

தீர்வுப் பொதியை நிராகரிப்பது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோருவது, இந்த இரண்டுக்கும் மாறான அரசியல் நிலைப்பாடுகள் நம் மக்களுக்கு செய்யப்படும் பச்சைத்துரோகமே. இதனை 'நாம் அறிய மாட்டோம்' என நினைத்து, அரசை எதிர்ப்பதாக தமிழ்க் கட்சிகள் சில கூறுவது நம்மை முட்டாளாக்கும் முயற்சியே!

ஆ.சோமாஸ்கந்தன், யாழ்ப்பாணம்.

### தாய்லாந்தில் தளம்

தமிழ் மக்களுக்கு வெளிநாடுகளில் உள்ள அனுதாபத்தை சீர்குலைப்பதற்கும், மேலும் ஆதரவு இல்லாமல் தடுப்பதற்கும் இலங்கை அரசு பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. அதில் ஒன்றுதான் தாயலாந்தில் புலிகளுக்குத் தளம் என்ற பிரசாரமும். நாரதர் சுட்டிக் காட்டியது கச்சிதம். 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' பெயருக்கு ஏற்ப, உள் எண்ணங்களைப் படம் பிடித்து காட்டிவிட்டது. பாராட்டுக்கள்.

சு.வதா, இலண்டன்.

### சாதனைப்பரிசு!

என் பிரிய முரசே! மௌனத்தைக் கடைப்பிடிக்கும் தமிழ்க்கட்சிகள் இருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன? தேர்தல் காலங்களில் மட்டுந்தான் தங்கள் சுயநலன்களுக்காக மக்களை நாடுவார்கள். ஆசனத்தில் அமர்ந்து கொண்டதும் நீங்கள் யாரோ நாங்கள் யாரோ. இதுதான் இவர்களின் பண்பு. ஆசனத்துக்கு ஆசைப்படும் தமிழ்க் கட்சிகள் மக்களுக்கு சேவை செய்ய ஆசைப் படுவதில்லையே! அதிசுப்ட்ச அமைதிக்காக இவர்களுக்கு சாதனைப்பரிசு கொடுக்கலாம் தான்.

அ.யாழினி, மட்டக்களப்பு.

### உண்மையை மறுத்தாலும் வெளிவரும்

முரசே!

உன் கணிப்புக்கள், செய்திகள்மீது, அவற்றால் பாதிக்கப் பட்டோர் சேறு பூசவே செய்வர். ஆனால் உண்மைகள் உறங்காது. கூட்டணிக்குள் பிரச்சனை இருப்பதை 'முரசு' கூறியது. கூட்டணி அதனை மறுத்தபோதும் உண்மை வெளியானது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்னும் தமிழ்க் குழுவின் செயலாளர் சுரேசுக்கும், அக் குழுவின் மற்றொரு பிரமுகரான வரதருக்கும் இடையே சுமுக உறவில்லை என்பதை நக்கீரன் கூற, அது பொய்ப்பிரசாரம் என்று அக்குழு கூறியது.

இப்போது வரதர் வந்த விஷயமே தெரியாமல் முழித்திருக்கிறார் சுரேஸ். "அவர் வருவதும் போவதும் பெரிய விஷயமோ?" என்று பழிப்புக் காட்டியும் விட்டாரே! முரசே! சேறு பூசுவோர் பூசட்டும். பொறாமையும், தம் ஆற்றாமையும் காரணமாகவே சேறு பூசுகிறார்கள். உன் பணி தொடரட்டும்.

எம்.குமாரவேல், ஓய்வுபெற்ற ஆசிரியர், திருமலை.



யோவ் முரசே!

தமிழ்க் கட்சிகளைத் திருத்தலாம் என்றா நினைக்கிறாய்? சூரியன் திசைமாறி உதித்தாலும் உதிக்கலாம், திசைமாறிப் போன இக்கட்சிகள் திருந்துவது நடக்காதய்யா!

சி.வாமதேவன், கனடா.

### மௌனம் ஏன்?

முரசே! தமிழ்க் கட்சிகள் தம்மை ஜனநாயக வாதிகளாகத் தம்பட்டம் அடிக்கின்றன. ஐக்கிய இலங்கைக்காக பாடுபடும் கட்சிகளாக கூறுகின்றன. அப்படியானால் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தலைதூக்கிய வன்முறைகளை இக் கட்சிகள் ஏன் கண்டிக்கவில்லை? அது தென்னிலங்கை பிரச்சனை என்று கூற முடியாது. ஏனெனில் இக் கட்சிகள் ஐக்கிய இலங்கைக் கோட்பாடு, ஜனநாயகம் என்பவற்றுக்காக மாய்ந்து பாடுபடும் கட்சிகள் அல்லவோ?!) இவர்களுக்கு ஈழத்திற்காக போராடவும் அன்று தெரியவில்லை. ஐக்கிய இலங்கை என்று தாம் கூறுவதன் அர்த்தமும் புரியவில்லை.

கோ.ரகு, அம்பாறை.

### விளம்பரக் கட்சிகள்

செம்மணியை தோண்ட யாழ் நீதி மன்றத்தில் அனுமதி கேட்கப்பட்டமை உலகை ஏமாற்றும் நாடகம். இதனைச் சுட்டிக்காட்டாது, வரவேற்று அறிக்கை விட்ட தமிழ்க் கட்சிகளது செயல் கண்டிக்கத்தக்கதே. தங்கள் பெயர் பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக, எல்லாவற்றுக்கும் முன்னே பின்னே யோசிக்காமல் அபிப்பிராயம் கூறுகிறார்கள். இந்த விளம்பர அரசியல் கட்சித் தலைமைகள், சுயநலம் இன்றிப் போராட முடியுமா? அவ்வாறு எதிர்பார்ப்பது தவறு.

சி.வாசன், கொழும்பு-06.

### யார் காரணம்

அன்புள்ள முரசுக்கு;

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவது என்பது ஒருபோதும் நடக்க முடியாதது. வேண்டுமானால் தேர்தல் காலங்களிலோ, இடைக்கிடையே மக்களை ஏமாற்றும் கூட்டறிக்கை விடவோதான் இக் கட்சிகள் தற்காலிகமாகச் சேரும். இன்றுவரை அது தானே நிலை? புலிகள்தான் ஒற்றுமைக்குத் தடை என்றால், புலிகள் தவிர்ந்த இந்த கட்சிகள் ஒன்றுசேர யார் தடை? இவர்கள் தமக்குள் மோதுவதற்கும் புலிகளா காரணம்?

மா.தெய்வநாதன், திருமலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் :- 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# பாரிய தாக்குதலுக்குப் புலிகள் தயார்!

## படையின் புலனாய்வாளர் சந்தேகம்

வன்னியில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராகி வருவதாக படைத்தரப்பின் தகவல்கள் கூறுகின்றன.

படையினரின் புலனாய்வுப் பிரிவினரே மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளனராம். ஒட்டுசுட்டான், மற்றும் மாங்குளம் பகுதிகளில் தாக்குதல் நடக்கக்கூடும் என்று புலனாய்வுத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளனவாம்.

மழைகாலம் முடிந்ததும் படையினர் மற்றொரு நடவடிக்கைக்கு ஆயத்தமாகக் கூடும் என்பதால், புலிகள் அதற்கு முன்னரே தாக்குதல் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அதேசமயம் படையினரும் தாக்குதலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிகிறது.

### தேர்தல்?

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

இதனையடுத்து பொதுத் தேர்தல் நடத்த அரசு முன்வரக்கூடும் என்று ஊகங்கள் எழுந்துள்ளன.

ஆனால் வடமேல் மாகாண சபைத் தேர்தல் பல்வேறு புகார்களுக்கு மத்தியிலேயே நடந்து முடிந்துள்ளது. இந்நிலையில் பொதுத் தேர்தலையோ, ஜனாதிபதித் தேர்தலையோ நடத்த அரசு தற்போதைக்கு முன்வரமாட்டாது. உரிய காலத்திலேயே அவை நடத்தப் படும்.

எதிர்வரும் மரர்ச் மாதத்தில் ஏனைய மாகாணசபை (வடக்கு-கிழக்கு தவிர்ந்த) தேர்தல்களை நடத்துவதாக இருந்தால், அதற்கு முன்னர் வன்னியில் மற்றொரு பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அரசு ஆணையிடும்.

பருவ மழைக்காலம் முடிந்த பின்னரே வன்னியில் நகர்வுகள் மேற்கொள்ள முடியும். இம்முறை பருவமழை காலம் தாழ்த்தியே வன்னியில் ஆரம்பித்தது. அதனால் வெள்ளம் வடிய நாளாகும்.

இவற்றைக் கருத்தில் கொண்டே மார்ச் மாதத்துக்குள் குறிப்பிடத்தக்க நகர்வு ஒன்றை மேற்கொள்ளும் காலவரையறையும், அதையொட்டி தேர்தல் யோசனையும் உருவாகி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

### புலிகள் கருத்து

வடமேல் மாகாணசபைத் தேர்தல் குறித்து வன்னியில் புலிகளது பிரசார சாதனங்களில் குறிப்பிடும்போது: "பாரிய வன்முறைகள் மத்தியில் மோசடியான தேர்தல் நடத்தப்பட்டுள்ளது," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் வன்முறைகள் பற்றிய பல்வேறு செய்திகளையும் புலிகளது பிரசார சாதனங்கள் வன்னியில் வெளியிட்டு வந்தன.

## தந்தங்கள் மாயம்

வன்னியில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பெரும் திருட்டு நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு வைக்கப்பட்டிருந்த வரலாற்றுப் பெருமைமிக்க இரண்டு யானைத் தந்தங்களே திருட்டுப் போயுள்ளவற்றில் முக்கியமானவையாகும்.

கோவிலின் வேறு பல பொருட்களும் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரிட்டன் தூதர் நியமனம்?

## பௌத்த அமைப்புக்கள் போர்க்கொடி!

இந்நாட்டின் பொருளாதாரத்துறை நிபுணரான லால் ஜயவர்தன பிரிட்டனுக்கான சிறீலங்காவின் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளார். அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த உயர் பதவிகளுக்கான தேர்வுகளை நடத்தும் பாராளுமன்றக் குழுவே இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

"திரு. லால் ஜயவர்த்தன ஒரு பௌத்த மத விரோதி. அத்தகைய ஒருவரை இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டுக்கு பௌத்த நாட்டின் பிரதிநிதியாகப் பணியாற்றுவதற்கு எவ்வாறு தேர்ந்தெடுக்க முடியும்?" என்று பல சிங்கள- பௌத்த அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இத்தகைய எதிர்ப்புக்குரல் எழுப்புவோர்களில் கலாசார விவகார அமைச்சர் லக்ஷ்மண் ஜயக்கொடி முன்னணியில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ஜயவர்த்தன, ஐ.நா. நிறுவனமான 'அபிவிருத்திக்கான பொருளாதார ஆராய்ச்சி' நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநராகக் கடமையாற்றியவர். அக்காலத்தில் எஸ்.ஜே. தம்பையா என்ற இலங்கை எழுத்தாளர் ஆங்கிலத்தில் எழுதிய 'வஞ்சிக்கப்பட்ட பௌத்தம்' என்ற நூலைப் பிரசுரிப்பதற்கான நிதியை வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளார்.

இந்நூலில், சிங்கள பௌத்தர்களுக்கும் மகாசங்கத்தினருக்கும் விரோதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது. 'இன்று இந்நாட்டில் எழுந்துள்ள சிக்கல்களுக்கு சிங்கள சமுதாயமும் பௌத்த சங்கமுமே பொறுப்பு!' என்று குற்றஞ்சாட்டப் பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இந்நூலுக்கு திரு. லால் ஜயவர்த்தன முன்னுரை வழங்கியுள்ளார்.

இந்நூல் 1996ம் ஆண்டு பொதுஜன முன்னணி அரசாங்கத்தால்- இலங்கையில் விற்பதற்கான-தடைவிதிக்கப்பட்டது.

"பௌத்தமத விரோதமான தகவல்களைக் கொண்டுள்ள இத்தகைய நூல் வெளியாவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த ஒருவரை பௌத்த நாடான இந்நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு அனுமதிக்கலாகாது!" என்று எதிர்ப்புக்குரல் எழுப்பப் பட்டுள்ளது.

திரு. தம்பையாவை 'தமிழ் ஈழநாடு அமைவதற்கான ஒரு ஆதரவாளர்' என்றும் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஆளும் கட்சி முன்வைக்கும் எந்தத் தீர்மானத்தையும் வன்மையாக எதிர்த்துவரும் எதிர்க்கட்சியினர்- குறிப்பாக முன்னாள் (ஐ.தே.கட்சி) வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத்-திரு. ஜயவர்த்தனவின் நியமனத்தை ஆதரித்துக் குரல் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது.

## பொதிக்கு பெருமாள் ஆதரவு?

## நீதியமைச்சரை சந்திக்க முயற்சி!

வடக்கு-கிழக்கு முன்னாள் முதலமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவருமான பெருமாள் நாடு திரும்பியுள்ளதை அடுத்து, அந்த அமைப்புக்குள் நிலவிய உள்பிரச்சனை வெளியாகியது தெரிந்ததே!

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பில் தற்போது நூறு பேர் வரையே உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 70 ற்கு மேற்பட்டோர் வரதராஜப் பெருமாளின் தலைமையை ஏற்க முன்வந்துள்ளனர்.

எனினும் கட்சியின் நிதி விவகாரங்கள் செயலாளரான சுரேஸிடம் இருப்பதால் வரதராஜப் பெருமாள் உடனடியாகக் கட்சியை பொறுப்பேற்கமாட்டார் என்று தெரிகிறது.

தமக்குள் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று பெருமாள் வெளியே கூறவேண்டும் என்றும், இல்லையெனில் தனக்கு அவமானம் ஏற்படும் என்று சுரேஸ் தெரிவித்துள்ளாராம். அவ்வாறு பொருமாளின் வாயால் தெரிவிக்கப்பட்ட பின்னரே நிதி விடயங்கள், கணக்கு வழக்குகள் தொடர்பாக தன்னிடம் பேசுமாறு சுரேஸ் கூறிவிட்டாராம்.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் முடியும்வரையே பெருமாள் மௌனமாக இருக்கிறார். அது முடிந்த பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உள்பிரச்சனை இல்லை என்று அவர் கூறவேண்டும் என்பது சுரேஸின் கோரிக்கை.

ஆனால், பிரச்சனை இல்லை என்று கூறினாலும், அமைப்பின் நிதி விவகாரங்கள் திருப்தியாக இருப்பதாக தன்னால் கூறமுடியாது என்று வரதராஜப் பெருமாள் மறுத்துள்ளதாக தெரிகிறது.

இதற்கிடையே நீதியமைச்சர் பீரிசை சந்திக்க பெருமாள் முயற்சித்து வருகிறார்.

தீர்வுப் பொதிக்கு ஆதரவு தெரிவித்து பணியாற்ற விரும்புவதாக அவரிடம் பெருமாள் கூறுவார் என்று தெரியவருகிறது.

## அரசின் தேர்தல் பிரசாரம்

## புலிகள் மின்மாற்றி தகர்ப்பு

வடமேல் மாகாண சபைத் தேர்தலை முன் னிட்டு புலிகள் தலைநகரில் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையே மின்மாற்றி தகர்ப்பு களாகும்.

ஒரு வாரத்திற்குள் ஐந்து மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய்கள்வரை அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

புலிகளைப் போரில் வெற்றி கண்டுள்ளதாக வடமேல் மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தில் அரசு கூறிவந்தது.

அதற்குப் பதிலடியாகவே ஒரே நேரத்தில் பல மின்மாற்றிகளை புலிகள் தலைநகரிலேயே தகர்த்தனர் என்று தெரியவருகிறது.

கடும் வீதிச் சோதனைகள் மத்தியிலும், மக்கள் நடமாட்டமில்லாத அதிகாலையில் குண்டுகளைக் கொண்டு சென்று புதைத்துள்ளனர்.

மக்கள் நடமாட்டமில்லாதபோது சுலபமாக இனம் காணப்படும் வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு இருந்தும் அதிகாலை நேரங்களிலேயே குண்டுகள் பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

தென்னிலங்கையில் உள்ள மின்மாற்றிகளுக்கு புலிகள் இலக்கு வைத்துள்ளதாக சென்றவார 'எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்' குறிப்பிடப்பட்டிருந்தது தெரிந்ததே. மேலும் மின்மாற்றிகள் தகர்ப்பு தொடரும் என்று தெரிகிறது.

## புளொட் மீது குற்றச்சாட்டு!

## பணத்தைக் கொள்ளையிட திட்டமாம்

வவுனியாவிலுள்ள 'புளொட்' அமைப்பினருக்கும் ஆயுதப் படைகளுக்குமிடையில் முறுகல் நிலை வலுவடைந்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன. இவ்வமைப்பின் உயர் மட்டத் தலைவர்களிடமிருந்து தமக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு வருவதாக இராணுவ அதிகாரிகள் கூறிவருகின்றனராம்.

இதற்கிடையில், வவுனியாவில் பணிபுரியும் படையினருக்குரிய சம்பளப் பணம் கொழும்பிலிருந்து, வவுனியாவுக்கு வந்து சேர்ந்ததும் அப்பணத்தை அபகரிக்க புளொட் திட்டமிட்டு வருவதாக நம்பிக்கையான தகவல் தமக்கு கிடைத்திருப்பதாக பாதுகாப்பு உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பான ஆவணம் ஒன்று தன்னிடம் சிக்கியிருப்பதாகவும் அவர்கூறியிருக்கிறார்.

பணத்தை அபகரித்துவிட்டு, புலிகள் தலையில் குற்றம் சுமத்தவும் திட்டமிட்டுள்ளனராம். தற்போது புளொட்டின் பாதுகாப்பிலிருக்கும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டுபேர் இப்பண அபகரிப்புத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படுவர். தாக்குதல் முடிவடைந்ததும் புலி உறுப்பினர் இருவரையும் அவ்விடத்திலேயே சுட்டுக் கொன்றுவிட்டு, 'புலிகள்தான் பணத்தை அபகரித்துள்ளனர்' என்று கூறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த ஆவணத்தில் தகவல்கள் இருப்பதாகத் தெரிகிறது.

'சண்டே டைம்ஸ்' ஆங்கில ஏடு ஜனவரி 24ம் திகதியன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

## நள்ளிரவில் தட்டப்படும் கதவுகள்!

## பீதியுடன் காணப்படும் மக்கள்!

மட்டக்களப்பு- கொம்மாதுறைப் பகுதியில் உள்ள மக்கள் தாங்கள் சமீப சில நாட்களாக ஒவ்வொரு இரவுப் பொழுதையும் பெரும் அச்சத்துடனும் பீதியுடனும் கழிப்பதாகக் கூறுகிறார்கள்.

ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் நள்ளிரவு வேளையில் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டி எழுப்பி தண்ணீர் கேட்பதுடன் மற்றும் பல வீண் தொல்லைகளைக் கொடுப்பதிலும் ஒரு ஆயுதக் குழுவினர் ஈடுபட்டு வருகிறார்கள். தட்டி எழுப்பும்போது கண்விழித்து எழத் தவறினால் இந்த ஆயுதம் தரித்த குழுவினரின் அட்டகாசங்களுக்கு உள்ளாக வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இரவில் இருந்து விடியும் வரை ஆட்சி நடத்தும் இந்தக் குழுவினரின் அட்டகாசத்தினால் அவ்வூர் மக்கள் குழம்பிப் போயுள்ளார்கள்.

சீருடையினரின் முகாமுக்கு அருகிலுள்ள பகுதியிலேயே குறித்த அட்டகாசம் நடக்கிறது. அந்தக் குழுவினர் தங்களை இனம் கண்டு கொள்ள முடியாதவாறு தனிச்சிங்களத்திலேயே உரையாடுகிறார்களாம். சீருடையினருடன் 'துணை'க்குச் செயற்படும் குழுவொன்றின் நடவடிக்கையே இது என்று நம்பப் படுகிறது.

## நெடுஞ்சாலையில் மின் கம்பங்கள்

ஹபறணையிலிருந்து மட்டக்களப்புக்கு மின் வழங்கிச் செல்லும் கம்பிகளைத் தாங்கிய மின் கம்பங்கள் கொழும்பு-மட்டக்களப்பு பிரதான நெடுஞ்சாலையின் ஓரங்களில் அமைக்கப்படவுள்ளன. இதுவரை காலமும் 33 ஆயிரம் வோல்ட்ஸ் உயர் வலுக்கொண்ட மின்சாரத்தைத் தாங்கிச் செல்லும் மின் கம்பங்கள் வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்புவரை பிரதான வீதியை விட்டு சற்றுத் தொலைவிலுள்ள காட்டு வெளியூடாகவே கொண்டு செல்லப்பட்டன.

உயர் வலுக்கொண்ட 33 ஆயிரம் வோல்ட்ஸ், 11 ஆயிரம் வோல்ட்ஸ் ஆகியவற்றுடன், குறைந்த வலுக்கொண்ட மின்விநியோகக் கம்பிகளையும் ஒருங்கே தாங்கிய ஒரு கம்பத்திலேயே பொருத்தும் நடவடிக்கைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த 33 ஆயிரம் வோல்ட்ஸ் வலுக்கொண்ட மின்கம்பங்கள் காடுகளிலும், மணல், களிப்பாங்கான பகுதிகளிலும் இருந்ததால் மின்சாரத் திருத்த வேலைகள்கூட பெரும் சிரமத்தில் நடைபெற்றன என்று இலங்கை மின்சார சபையினர் கூறுகிறார்கள்.

காட்டுப் பகுதியில் இருந்ததால்தான் அவ்வப்போது மின் கோபுரங்களைத் தகர்ப்பதில் புலிகள் ஈடுபட்டனர். என்று படையினர் கூறுகின்றனர்.

## யாழ் பயணிகள் ஏமாற்றம்!

(திருமலை நிருபர்)

யாழ் குடாநாட்டுக்குச் செல்வதற்காக காத்திருக்கும் பயணிகளது எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதுவரை பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள் யாழ் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர்.

கடந்தாண்டு 18.12.98 அன்று ஆயிரம் பயணிகளது பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. டிசம்பர் 21ம் திகதி கப்பல் வரும் என்று கூறியே பதிவுசெய்தனர். அவர்களும் பதிவு செய்துவிட்டு திருமலையில் தங்கியிருந்தனர்.

பயணிகள் தொகையாக வந்ததும் திருமலையில் விடுதிக் கட்டணங்களும் கிடுகிடுவென்று உயர்ந்துவிட்டன. குறிப்பிட்ட தினத்தன்று கப்பல் வரவில்லை. மறுபடி 7.01.99 அன்று புதிதாக மேலும் 450 பேருக்கு முன் பதிவு நடைபெற்றது. இதோ கப்பல் வருகிறது என்று கூறப்பட்டது. பல நாட்கள் தாமதித்து 25.01.99 அன்று காலை 9 மணிக்கு திருமலை துறைமுகத்திற்கு கப்பல் வந்து சேர்ந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 1370 பயணிகளுடன் கப்பல் வந்திருந்தது. கப்பல் வந்த செய்தியறிந்த பயணிகள் யாழ் புறப்படத் தயாராக இருந்தனர். ஆனால் கப்பல் பயணிகள் எவரையும் ஏற்றாது காலித் துறைமுகத்திற்கு சென்றுவிட்டது.

அங்கு 40 பஸ்கள் இருப்பதாகவும், அவற்றை இரண்டு தடவைகள் ஏற்றி இறக்கிய பின்னரே பயணிகளை ஏற்றலாம் என்றும் கூறப்பட்டுள்ளதாம். பயணிகள் காத்திருக்கின்றனர்.

## பெட்டிகள் எரிந்தது ஏன்?

## வாக்குகள் நாசமாகின

வடமேல் மாகாண சபைத் தேர்தல் வன்முறையில் வாக்குப் பெட்டிகளும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன அல்லவா? மறுதரப்புக்கு கணிசமான வாக்குகள் கிடைத்திருக்கும் என்று கருதப்பட்ட வாக்குச் சாவடிகளில் இருந்த வாக்குப் பெட்டிகளே கொளுத்தப்பட்டனவாம். இதனால் பல்லாயிரம் வாக்குகள் நாசமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் அவ்வாறு நாசமாகியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஐ.தே.கட்சியும் இரண்டு வாக்குச் சாவடிகளில் வாக்குப் பெட்டிகளைக் கைப்பற்றியது. பொலிசார் சுற்றிவளைக்க முயன்றும் அவர்கள் தப்பிச்சென்று, வாக்குப் பெட்டிகளைத் தீயிட்டு கொளுத்தினார்கள்.

## வாகனத் தொடரணிக்கு தீவிர பாதுகாப்பு!

விடுமுறைக்குச் செல்லும் படையினரையும், விடுமுறை முடிந்து கடமைக்கு வரும் படையினரையும் ஏற்றிவரும் இராணுவ வாகனத் தொடரணிகளுக்கு இதுவரை காலமும் தமிழ்ப் பிரதேசங்களில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே.

ஆனால் சமீப சில நாட்களாக இராணுவ வாகனத் தொடரணிகள் செல்லும்போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதுடன், கண்காணிப்பும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

இராணுவ வாகனத் தொடரணி மீது முஸ்லிம் பகுதிகளில் வைத்தும் இலக்கு வைக்கப்படலாம் என்ற சந்தேகமே இதற்குக் காரணமாகும் என்று கருதப்படுகிறது.

சென்ற ஆண்டு மார்ச் 09 ம் திகதி ஏறாவூர் முஸ்லிம் பகுதியில் பொலிஸ் நிலையச்சந்தியில் இராணுவ வாகனத் தொடரணி மீது தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டு இலக்குத் தவறி குண்டு வெடித்தது நினைவிருக்கலாம். அச்சம்பவத்தில் படையினருக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. பொது மக்களான மூன்று தமிழரும், இரு முஸ்லிம்களும், ஒரு சிங்களவரும் பலியானதுடன் 11 பேர் காயமுற்றனர்.

இராணுவ வாகனத் தொடரணிகள் செல்லும்போது வீதி முற்றாகத் தடை செய்யப்பட்டு விடுவதால் மட்டக்களப்பு மாவட்டம் முழுமையாக நீண்ட நேரம் ஸ்தம்பித்துப் போய்விடுகிறது.

## போக்குவரத்து விதிகள் இறுக்கம்

## புதிய நடைமுறை அறிமுகம்

(மன்னார் நிருபர்)

மன்னாரில் இருந்து நாட்டின் தென் பகுதிக்குச் செல்பவர்கள்மீது இதுகால வரையிலும் மேற்கொள்ளப்பட்டுவந்த பாஸ் கெடுபிடி நடைமுறைகள் தற்போது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் பயணம் செய்வதாயின் பயண நாளுக்கு முதல் நாள் தமது விசேட இராணுவ அடையாள அட்டையை இராணுவ புலனாய்வுப்பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பி, புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்படுபவர்.

விசாரணை திருப்திகரமானதாக இருந்தால் மட்டுமே பயண அனுமதி கிடைக்கும். இந்நடைமுறை அமுலுக்கு வந்தபின்னர் மன்னாரிலிருந்து தென்பகுதிக்குச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்ட விசேட அடையாள அட்டையைப் பயன்படுத்தி புலி உறுப்பினர்களும் தென்பகுதிக்குச் சென்று விடக்கூடாது என்பதற்காகவே இப்புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாக படையினரால் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் மாவட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட விசேட இராணுவ அடையாள அட்டைகள் வாபஸ் பெறப்பட்டு, மற்றுமொரு புதிய அடையாள அட்டை வழங்கத் திட்டமிடப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஏற்கனவே இருமுறை இந்த அட்டைகள் புதுப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து புலிகள் பலி

யாழ் தென்மராட்சியில் படை-புலிகள் மோதலில் 5 புலிகள் பலியாகியுள்ளனர். தென்மராட்சியில் பதுங்கியிருந்த படையினர் அங்கு எதிர்ப்பட்ட புலியணிகள்மீது தாக்குதல் தொடுத்தனர்.

புலிகள் திருப்பித் தாக்கியபோதும் படையினரின் கைகளே மேலோங்கின. ஐந்து புலிகள் பலியாகினர். அவர்களது உடல்களும், ஆயுதங்களும் படையினரால் கைப் பற்றப்பட்டன.

18.01.99 அன்று இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது. படையினர் தரப்பு இழப்பு விபரங்களை அறிய முடியவில்லை.

## தமிழர்களால் எமக்கு நன்மை

## நோர்வே அமைச்சர் புகழாரம்

"தமிழர்களால் பிரச்சனை என்று கூறப்படுவது உண்மையல்ல. நோர்வேயில் உள்ள இலங்கைத் தமிழர்களால் நோர்வே பயனடைகிறது." இவ்வாறு இலங்கை வந்திருந்த நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சர் லீவ்லுண்டே தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது: "இலங்கைத் தமிழர்கள் கடும் உழைப்பாளிகள். அவர்களின் உழைப்பால் நோர்வே பொருளாதாரம் தலைதூக்கியுள்ளது.

நோர்வேயில் ஒன்பதாயிரம் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் நிரந்தர வதிவிட அனுமதி பெற்றுள்ளனர். அவர்களால் எமக்கு எவ்வித பிரச்சனையும் கிடையாது!" என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வுக்கு உதவ நோர்வே தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் இல்லாத பத்திரம்

இலங்கை மின்சார சபையினர் விண்ணப்பதாரிக்கு மின் இணைப்பு வழங்கும்போது குறித்த சில உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதாக சேவை இணைப்பு உபகரணம் வழங்கல் பத்திரத்தில் (SERVICE CONNECTION MATTERIALS ISSUE ADVICE) மின் பாவனையாளரிடம் கையொப்பம் பெறுகின்றனர். ஆனால் அந்தப் பத்திரத்தில் மருந்துக்குக்கூட தமிழ்மொழி இல்லை.

தமக்குப் புரியாத மொழியில் உள்ள பத்திரத்தில் ஏதேதோ எழுதிவிட்டுக் கையொப்பம் பெறுகின்றனர். கட்டணமும் அறவிடப்படுகிறது. வடக்கு-கிழக்கு தமிழ் பிரதேசங்கள் உட்பட நாடு பூராவும் இந்தப் பத்திரம்தான் விநியோகிக்கப்படுகிறது. இலங்கை மின்சார சபையில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லையா? என்ற கேள்வி எழுகிறது. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?

அசமந்தப் போக்குள்ள தமிழ் அதிகாரிகளாலேயே தமிழ் மொழிக்கு திட்டமிட்ட புறக்கணிப்பு தொடர்ந்து வருவது கவலை தரும் விடயம்தான். தமிழ் பேசும் அதிகாரிகள் கவனத்தில் எடுப்பதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது.

தமிழ் பெரும்பான்மையாக இல்லாத பகுதியில் உள்ள சில பெரும்பான்மை அதிகாரிகள் தமிழுக்கு சில இடங்களில் அந்தஸ்து வழங்குகிறார்கள். அதற்காக ஓரளவு நிம்மதியடையலாம். ஆனாலும் அவை இவ்வாறுதான் உள்ளன. மஹியங்கனை இ.போ.ச. பஸ்களில் காணப்படும் தமிழ்க் கொலைகள்தான் இவை:

- மக குருமாருக்கு
- பென்கல் மாத்கரம்.
- மகனிப் மாத்கரம்
- புதைத்தல் கவாது.

## தொலைபேசி இணைப்புக்கள்!

அஞ்சல் தொலைத்தொடர்புகள் அமைச்சின் நடமாடும் சேவை மட்டக்களப்பு- ஓட்டமாவடியில் கடந்த 16.01.99 அன்று இடம்பெற்றது. தபால் தொலைத்தொடர்புகள் வெகுஜன ஊடகப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டார்.

தொலைபேசி இணைப்புக்களுக்காக விண்ணப்பித்து வருடக்கணக்கில் காத்திருக்கும் பல நூற்றுக்கணக்கானோரில் ஒன்பது (09) பேருக்கு இந்த நடமாடும் சேவையில் இணைப்புகள் வழங்கப்பட்டன. புதிதாக மேலும் 150பேர் தொலைபேசி இணைப்புக் கோரி அன்றைய தினம் கட்டுப்பணம் செலுத்தினர்.

## பனம் பொருள் சபை தமிழை மறந்தது ஏன்?

'பனம் பொருள் அபிவிருத்திச் சபை' இந்த ஆண்டுக்கான நாட்காட்டி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஆங்கிலம் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

முழுக்க, முழுக்க தமிழ் பேசும் மக்களின் வளத்தின் அடையாளமான பனை சார்ந்த விடயத்தில் தமிழுக்கு இடம் இல்லையா?

தமிழில் போட்டால், சிங்களமும் போட வேண்டியிருக்கும் என்ற காரணம் கூறக்கூடும். தமிழும், சிங்களமும் இடம்பெற்றிருந்தால் அதில் தவறு கிடையாது. ஆங்கிலத்தை வேண்டுமானால் தவிர்த்திருக்கலாம்.

இனப்பற்றோ, சமூகப் பற்றோ இல்லாத நிர்வாகிகளே இச் சபைகளில் உள்ளனர். தம் மொழியை விற்றுவிட தயங்காதவர்கள் இவர்கள்.

மொழி உரிமைக்காக ஆரம்பித்த போராட்டமே இன்று பல்வேறு தியாகங்களை சந்தித்துள்ளது. மொழிக்காக, இனத்துக்காக ஏராளம் உயிர்களை பலி கொடுத்துள்ளோம். இடமில்லை என்பதால் தமிழை ஒதுக்கிவிட்டு ஆங்கில மொழிக்கு அரியாசனம் கொடுப்பதா?

எம். தியாகு- கொழும்பு-10.

## மக்களின் பயங்கள் பலவிதம்
### 'அரங்க செயற்பாட்டுக் குழு' தெரிவிப்பு

'அரங்கச் செயற்பாட்டுக் குழு' என்னும் அமைப்பினர். மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் புதிய முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்கள் தம் மனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியதாக தெருவில் இறங்கி குரல் எழுப்புதல். ஆவேசத்தை தெரிவித்தல் என்று பலவிதமான நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. வடக்கு-கிழக்கில் இதற்காக பல செயற்பாட்டுக் குழுக்களை நிறுவியுள்ளனர்.

வீடுகளுக்குள் பார்வையாளர்களாக முடங்கிக்கிடந்து,விரக்தியில் துவளாமல், மக்களை வீதிக்கு கொண்டுவந்து அவர்களையும் இன்றைய அவலங்களுக்கு எதிராக போராடத் தூண்டுவதே இந்த நிகழ்வுகளின் நோக்கமாகும்.

சமீபத்தில் தேசிய சமாதானப் பேரவை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தது. அம் மாநாட்டில் கலந்து கொண்ட அரங்க செயற்பாட்டுக் குழுவினர், வடக்கு-கிழக்கில் தாம் மக்களிடம் அறிந்த கருத்துக்களைக் கூறினர்.

விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளில் மக்கள் பயத்தில் உறைந்து போயுள்ளனர். அந்தப் பயமே வாழ்வாகி விட்டது.

அந்த மக்களின் அச்சங்களை பட்டியலிட்டால், ஜனநாயகமும், மனித அடிப்படை உரிமைகளும், மனித நாகரிக உலகின் இன்றைய நினைப்புகளும் அம்மக்களுக்கு மறுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இரவானால் பயம், இரவில் வெளிச்சத்துடன் வெளியே வருவதற்குப் பயம், இரவில் உடல் உபாதைகளை கழிக்கக்கூட வெளியேவரப் பயம், உடம்பில் புண் வந்து அந்த வடு போகாமல் இருந்தால், அதை நினைத்துப் பயம், தாடி வளர்க்கப் பயம். இரட்டைப் பின்னல் பின்னப் பயம். விரும்பிய பெயர் (உ+ம்.ஈழநாயகி) வைக்க பயம், அதிக பணம் வைத்திருக்கப் பயம், பெரிய பாரம் கட்டி சைக்கிள் ஓடப் பயம்... இவ்வாறு பயங்களின் பட்டியல் நீள்கிறது.

இராணுவக் கட்டுப்பாடு இல்லாத போது மின்சாரம் இல்லை. அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் மேற்படி வசதிகள் ஓரளவு கிடைத்தும், நிம்மதி பறிபோய்விட்டது. பயமற்ற, கௌரவமான வாழ்வே தமக்கு வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களது விருப்பமாக இருக்கிறது." இவ்வாறு அரங்க செயற்பாட்டு குழுவினர் கூறினர்.

## "காணி உறுதி வேண்டும்"-தமிழ் குடும்பங்கள் கோரிக்கை

(காரைதீவு நிருபர்)

"மூதூர் பாலநகர் கிராமத்தில் 40 வருட காலமாக வாழ்ந்துவருகிறோம். நகரசுத்தி தொழில் வேலை செய்யும் 41 குடும்பங்களில், 20 குடும்பங்களுக்கு மூதூர் பிரதேசசபை 5 பேர்ச்சஸ் வீதம் காணி வழங்கப்பட்டது. 8 குடும்பங்களுக்கு அரச விடுதியில் இருக்க இடமளிக்கப்பட்டுள்ளது.

மீதி 13 குடும்பங்களுக்கு காணி வழங்கப்படவில்லை. முதலில் காணி வழங்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு இன்னும் காணி உறுதி வழங்கப்படவில்லை. அதைப் பெற்றுத் தருமாறு வேண்டுகிறோம்" என்று கூறும் கோரிக்கையை வட-கிழக்கு ஐக்கிய ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கம், மூதூர் இந்து இளைஞர் அபிவிருத்திச் சங்கம், இந்து இளைஞர்மன்றம், மாதர் சங்கம் எனும் 4 அமைப்புகள் ஈ.பி.டி.பி. செயலதிபர் டக்ளஸ் தேவானந்தா எம்.பிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## மக்களின் உதவியுடன் பொதுப்பணி துரிதம்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை பாலையூற்றைச் சேர்ந்த சமுர்த்திச் செயலணிக் குழுக்கள் அப்பகுதிக் கிராம மக்களின் உதவியுடன் வீதிப்புனரமைப்பு, பொதுக்கிணறு புனரமைப்பு ஆகிய பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர்.

இவற்றுக்குரிய நிதியாக தலா பத்தாயிரம் ரூபா சமுர்த்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த போதிலும் மக்களின் உதவி காரணமாக அதிகம் பெறுமானம் கொண்ட பணியை ஆற்றமுடிந்த தாக சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் தெரிவித்தனர்.

கோவிலடியில் பாதை புனரமைப்பை கிராம அபிவிருத்திச் சங்க ஒத்துழைப்புடன் ஊக்குவிப்பாளர்கள் சி. சுதர்ஷினி, கா. நிமலரஞ்சன் ஆகியோரும் பூம்புகார்ப் பிரிவு கிணற்றுப் புனரமைப்பை தெ. தவராணியும் முன்னின்று நடத்தினர்.


விளம்பரப் பகுதி

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (நன்மை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்)

வியாழன் விடுமுறை

**ALPHA TELE COM CARD-SWISS**

சுவிஸ் நாட்டில் அல்பா தொலைபேசி அட்டைகளின் மொத்த விற்பனையாளர் V.T. சீலன்.
சுவிஸில் ஏனைய மாநிலங்களுக்கும் விற்பனை முகவர்கள் தேவை.
18 வீதம்வரை கொமிஷன் வழங்கப்படும்.

-மேலதிக விபரங்களுக்கு-
V.T. SEELAN
MOSS SRT-01
8030 - ZURICH
SWISS.

ALFA TELE COM CARD

Tel : 01-4812521
Natel : 079/ 4322158
K. KAMAL 079/3457345

**ஸ்டூடியோ சாயா**

வீடியோ, ஃபோட்டோ, ஃபிரேமிங், லேமினேஷன், டியூரோகாட்
40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை தொ.பே.: 594492

**உலகப் பிரசித்தி பெற்ற உயர்தர (ரமி) இசைத்தட்டுகள்**

ஆங்கிலோ-இந்திய கூட்டுத் தயாரிப்பாளர்கள் EMI-RPG அமைப்புடன் RAMIY இணைந்து பழைய-புதிய பாடல்களை சர்வதேசத் தரத்தில் (CD's) இசைத்தட்டுக்களாகவெளியிட்டுள்ளனர்.
இவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில்
ஏ.கே.வி. எம்போரியம் பெருமைப்படுகிறது.
நாடெங்கும் விற்பனை முகவர்கள் தேவை.
நியாய விலையில்-சர்வதேசத் தரத்தில்-RAMIY CDS.
எமது விசேட வெளியீடு மன்னார் மடு மாதா மீதான கிறிஸ்தவ கீதங்கள்

A.K.V. EMPORIUM
F 119, PEOPLES PARK,
COLOMBO-11.
Phone:435744, 472129

சுவிற்ஸர்லாந்தில் —
RAMIY RECORDS
GMBH
KOCHLI STR-028
8004-ZURICH.
Phone: 004181252525013

RAMY CDS RAMY CDS RAMY CDS RAMY CDS

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218

**அஸ்மா நோய்க்கு வைத்தியம்**

- தொய்வு
- இளைப்பு
- மூச்சுத்திணறல்
- சளி
- தலைவலி
- இழுப்பு
- மாய்ச்சல்
- இருமல்
- மூக்கடைப்பு
- தும்மல்
- பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டாக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
[illegible]
Ph DH(Ind). M B B SCH (Cey)
Govt. Reg. No. A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்டலேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)

தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரை

தூர பாவனைத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறைநாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று வரவும்.

☎ 074-201582



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் ஜனவரி 24 முதல் 31 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு) T.P:- 338165-338166
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
கல்முனையில் பெப்ரவரி 6,7ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
வவுனியாவில் ஜனவரி 10,11,12,13,ம் திகதிகளில் சந்திக்கலாம்
(முன்கூட்டியே பதிவுசெய்யவும்) VANNi INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் வீதி, வவுனியா. T.P. 024-22074 Residend: T.P. 065-24019
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa. SRI LANKA.


## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 06 .. 10 .. 1929



மறைவு: 29 .. 12 .. 1998

**திருமதி நேசம்மா செல்லப்பா [சிறுவிளான்]**

அன்னார் காலம்சென்ற செல்லப்பாவின் மனைவியும் சந்திரசேகரம், வடிவேல், துரைரெட்ணம், சொர்னநாதன்(பரா), செல்வரெட்ணம், செல்வகுமார்(கனடா), சொர்னகிரி, செல்வராணி, சிவமலர், ஆகியோரின் அன்பு தாயாரும், சொர்னலக்ஸ்மி, செல்வராணி, சிறிகலா, பாமினி, தெய்வேந்திரராசா (உதயன்), குணசிங்கம், சிறிகேசவன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்கட்கும் கொழும்பில் இருந்து கிளிநொச்சி கொண்டு செல்வதற்கு பல உதவிகள் புரிந்த அனைவருக்கும், அனுதாப செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

தகவல்:
மகன் செல்வகுமார்
15, HILLCROFT - DR
MARKHAM - ONTARIO
L 351 R7
CANADA. T.P: 416-8185203

எஸ். சொர்ன நாதன்
467. அக்கராயன்,
கிளிநொச்சி.


**SPOKEN ENGLISH**
BY K. M. N. NALRAVI

யாருக்காக?
- தொழில் புரிபவர்களுக்காக.
- 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
- இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப்பயிற்சி. • அடிப்படையிலிருந்து இலக்கணம். • இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். • Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: • பழைய மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்.
• அலுவலக நேரம்: காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
• புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்.

NALRAVI ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatte, Colombo - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

GRAYON




படிப்பகம்

www.padippakam.com



# பொது ஜன முன்னணியின் 'ஜயசிக்குறுய்'

## சாதனை படைத்த தேர்தல்

வடமேல் மாகாண சபை தேர்தலில் எவ்வாறான முடிவு வெளியாகவேண்டும் என்பது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து வடமேல் மாகாணம் பொதுஜன முன்னணியின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

ஒரே ஒரு மாகாண சபைக்கு மட்டும் அரசு தேர்தலை நடத்த தீர்மானித்ததுக்கு சொல்லப்பட்ட காரணம் பாதுகாப்பு பிரச்சனை.

ஆனால், வடமேல் மாகாணசபை தேர்தல் பிரசாரக்கூட்டத்தில், மார்ச் மாதத்தில் ஏனைய மாகாணசபை தேர்தல்கள் நடைபெறும் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

பாதுகாப்புப் பிரச்சனைதான் ஒரே மாகாணத்தில் தேர்தல் நடத்த காரணம் என்றால், அடுத்துவரும் இரண்டு மாதத்திற்குள் அப்பிரச்சனை தீரப்போவதில்லை.

மார்ச் மாதத்தில் பல மாகாணசபை தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த முடியுமானால், ஜனவரி 25ம் திகதியே அவ்வாறு நடத்தியிருக்க முடியும்.

மாகாணசபை தேர்தல்களை பின்போட்டதற்கோ, தற்போது ஒரே ஒரு மாகாணத்தில் மட்டும் நடத்தியதற்கோ பாதுகாப்பு பிரச்சனை முக்கிய காரணமல்ல.

ஆட்சியில் உள்ள கட்சியினர் தமக்குள்ள சாதக பாதகங்களை கூட்டிக் கழித்துப் பார்த்து செய்த முடிவுகள்தான் அவை.

போர் முனையில் இருந்து டிசம்பருக்குள் வெற்றிச் செய்தி வரும் என்று எதிர்பார்த்தனர். ஜனவரியில் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம் என்று கணக்குப்போட்டனர்.

மாங்குளத்தை எப்பாடுபட்டாவது பிடித்துவிடுவோம். பின்னர் தரைப்பாதை திறந்தமாதிரித்தான் என்று படைத்தரப்பில் இருந்தும் கூறப்பட்டிருக்கலாம்.

படைத்தரப்பு மாங்குளத்தை பிடிக்கத்தான் செய்தது. ஆனால், சாண் ஏற முழம் சறுக்கிய கதையாக கிளிநொச்சியை முற்றாக புலிகளிடம் இழந்தது.

டிசம்பருக்குள் வெற்றிச் செய்திக்காக காத்திருந்த ஆளும் தரப்பின் கனவுகளை புலிகளின் ஓயாத அலைகள்–02 அள்ளிக் கொண்டு போய்விட்டது.

அதன்பின்னரே இராணுவ வெற்றி விரைவாகக் கிட்டும் என்பதில் அரசே நம்பிக்கையிழந்தது. 'ஜயசிக்குறுய்' நிறுத்தப்பட்டதாக அறிவித்ததுடன், வடமேல் மாகாண சபைத் தேர்தலும் அறிவிக்கப்பட்டது.

முதலில் ஒரே ஒரு மாகாணத்தில் தேர்தலை நடத்தி நாடித்துடிப்பறிவது. வெற்றி வாய்ப்பைப் பார்த்து பின்னர் ஏனைய மாகாணசபை தேர்தல்களை நடத்துவது என்பதுதான் அரசின்நோக்கம்.

அந்த நோக்கத்தை நிறைவேற்ற முதலில் வடமேல் மாகாணசபையை தெரிவு செய்ததுதான் மிகச் சிறந்த வியூகம்.

ஏனெனில், வடமேல் மாகாணம் ஐ.தே. கட்சியின் கோட்டை. சென்ற மாகாணசபை தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு எதிரான பெரும் எதிர்ப்பலை சுழன்றடித்தபோதும், சொற்ப ஆசன வித்தியாசத்தில்தான் அந்தக் கோட்டை ஐ.தே.கட்சியிடம் இருந்து கைநழுவியது.

வடமேல் மாகாணத்தை பொ.ஜ.முன்னணி முதலில் குறிவைத்ததுக்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. நாடெங்குமுள்ள தமது தொண்டர் படை, குண்டர் படை முழுவதையும் ஒன்று குவித்து வடமேல் மாகாணத்தை தேர்தல் முடியும்வரை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது.

2. ஐ.தே.கட்சியின் பலமான கோட்டையான வடமேல் மாகாணத் தேர்தலை ஏனைய மாகாண சபைகளுடன் இணைத்து நடத்தினால், வடமேல் மாகாணத்தில் தனித்து கவனம் செலுத்த முடியாது. அதனால் ஐ.தே.கட்சி தனது கோட்டையை மறுபடி கைப்பற்றிவிடும்.

3. ஐ.தே.கட்சியின் கோட்டையிலே பொ.ஜ.முன்னணி வெற்றி பெற்றுவிட்டது என்று தெரிந்த பின்னர், ஏனைய மாகாணங்களில் உள்ள கட்சிசார்பற்ற வாக்காளர்கள் பொ.ஜ. முன்னணிக்கே வாக்களிக்க முன்வருவர்.

வன்னிப் போர்முனையில் இருந்து படையினர் வெற்றிச் செய்தியை அனுப்பாததால், தமது கட்சியின் படை பலத்துடன் வடமேல் மாகாணத்தை போர்க்களமாக்கிவிட்டது பொ.ஐ. முன்னணி.

ஆனாலும் ஜனாதிபதி கலந்து கொண்ட கூட்டங்களுக்குக்கூட மக்கள் பெருமளவில் திரளவில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா நடந்தால் ஊர்வலம், நின்றால் பொதுக்கூட்டம் என்று கூறுமளவுக்கு ஆதரவு அலை வீசியடித்தது. இம்முறை பொ.ஐ.முன்னணி வருந்தி அழைத்தும் ஜனாதிபதியின் கூட்டங்களுக்கு மக்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வடமேல் மாகாணத்தில் உள்ள ஐ.தே. கட்சியினரை முற்றுகையிட்டது மறுதரப்பு.

பொது ஜன முன்னியின் பாராளுமன்ற உறுப்பினர் திசநாயக்கா. ஆள், அம்பு, சேனை உள்ளவர். இம்முறை வடமேல் மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன முன்னணியின் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு தளபதி அவர்தான்.

இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் பொதுஜன முன்னணியினர் வலம் வந்ததை கொழும்பின் பிரபல சிங்கள பத்திரிகை நிருபர்கள் படம் பிடித்தனர். அவர்களும் முற்றுகைக்கு உள்ளாகினர்.

'இது எங்கள் பகுதி. உங்களை அடையாளமே தெரியாமல் அழிக்கவும் முடியும். இனிமேல் இப்படியான காரியம் செய்யாதீர்கள்" என்று நிருபர்கள் மிரட்டப்பட்டனர்.

தேர்தல் வன்முறைகளை தடுக்க வேண்டும் என்று பொது ஜன முன்னணியும், அதன் தலைமையும் வாய் ஓயாது கூறிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் வன்முறை தெருவெங்கும் சுதந்திரமாக தலைவிரித்தாடியது. ஐ.தே.கட்சியின் 17 வருடகால ஆட்சியின்போது நடைபெற்ற குட்டித் தேர்தல்களில் ஐ.தே.கட்சியின் குண்டர் படையினரால் பொ.ஐ.முன்னணியினர் புரட்டி எடுக்கப்பட்டனர். அந்த 17 வருடகாலமாக அடக்கி வைத்திருந்த உணர்ச்சிதான் இப்போது வெளிப்பட்டுள்ளது என்றும் ஒரு கருத்து உள்ளது.

ஆனால், ஐ.தே.கட்சியை மக்கள் வீட்டுக்கு அனுப்பியதற்கு அவர்களது குண்டர் கலாசாரமும் ஒரு முக்கிய காரணம்.

பொதுஜன முன்னணியை மக்கள் ஆட்சியில் அமர்த்தியது ஐ.தே.கட்சியை பழிவாங்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக அல்ல.

ஆனால் பொ.ஐ.முன்னணி தொண்டர்கள் அப்படிக் கருதுவதாக தெரியவில்லை. யானைக்கு ஒரு காலம் வந்தால், நமக்கும் ஒரு காலம் வரும் என்று காத்திருந்து பாய்ந்து குதறுகிறார்கள்.

தேர்தல் வன்முறைகளை வடமேல் மாகாண சபை வாக்காளர்கள் ரசிக்கவில்லை. முகம் சுளித்தனர்.

இந்நிலையில் தேர்தல் வன்முறைகளின் உச்சக்கட்டம் ஜனவரி 25ல் அரங்கேறியுள்ளது. வாக்களிக்கச் சென்ற மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். வாக்குச் சாவடிகளில் வாக்குச் சீட்டுப் புத்தகங்களை கட்டுக்கட்டாக அள்ளி முத்திரை குத்தி பெட்டிகள் நிரபப்பட்டன.

இவ்வாறு முத்திரை குத்தி முடிப்பதற்காகவே விசேஷ பயிற்சிபெற்ற அணிகள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கொண்டு சென்று தயார் நிலையில் இருந்தன.

சிலாபம் பகுதியில் உள்ள சீருடை நிலையம் ஒன்றுக்குள் புகுந்து, உங்கள் ஆயுதங்களை எங்களிடம் தாருங்கள். பாவித்துவிட்டு மாலையில் கொண்டுவந்து தருகிறோம் என்று கேட்டனராம். அப்படிக் கேட்கும் துணிச்சல் எந்தக் கட்சி ஆதரவாளர்களுக்கு இருந்திருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மறுதரப்பின் முறைப்பாடுகளை ஏற்கக் கூடாது என்று சீருடை நிலையங்களுக்கு பலமுள்ள தரப்பினர் முன்கூட்டியே கூறிவைத்திருந்ததாகவும் தகவல்.

தேர்தல் தினத்தன்று கட்சிக் கொடிகளோ, சின்னங்களோ பொது இடங்களில் காணப்படுவது சட்டப்படி தவறானது. அவ்வாறு காணப்பட்டால் பொலிசார் அவற்றை அகற்ற வேண்டும்.

தேர்தல் தினத்தன்று நீலக் கொடிகள் பல பகுதிகளில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தன. கட்சிச் சின்னங்களும் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. பொலிசார் தொடவில்லை.

வாக்களிப்பின்போது இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் சென்று வாக்களிப்பு நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன. முகாம் தாக்குதல் போல வெகு கச்சிதமாக வாக்களிப்பு நிலையங்களை கைப்பற்றி காரியத்தை முடித்தனர்.

மொத்தத்தில் இதுவரை காலமும் நடைபெற்ற தேர்தல்களில் வன்முறைகள் அதிகம் நிகழ்ந்த தேர்தல் என்ற பெருமையை வடமேல் மாகாணசபைத் தேர்தல் தட்டிக்கொண்டுள்ளது.

கடந்த பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் பல சாதனைகளை பொ.ஐ. முன்னணி நிலைநாட்டியது. அதிக வாக்குகளை பெற்று ஜனாதிபதி சாதனை படைத்தார். உலகம் வியந்து திரும்பிப் பார்த்தது.

அதே ஜனாதிபதியின் ஆட்சியில் இப்படியொரு தோதல் நடந்திருப்பது, முன்னைய சாதனைகளது வெளிச்சத்தை மங்கச் செய்திருக்கிறது.

வடக்கு–கிழக்குக்கு மட்டுமல்ல, வடமேல் மாகாணத்திற்குகூட ஜனாதிபதியால் சமாதானத்தை வழங்க முடியவில்லை. தேர்தல் என்ற பெயரில் அரசியல் போர் ஒன்றே அங்கு நடந்து முடிந்துள்ளது.

தேர்தல் களத்தில் என்ன நடந்திருக்கும் என்பதை, அரச தகவல் தொடர்பு சாதனங்களின் போக்கை அவதானித்தாலே புரிந்துகொள்ள முடிந்தது.

முழுக்க முழுக்க பொது ஜன முன்னணியின் உத்தியோகபூர்வமான சாதனங்களாக அவை மாறியிருந்தன.

ஐ.தே.கட்சி ஆதரவாளர்களை, 'ஐ.தே. கட்சி காடையர்கள்' என்று அரச வானொலி, தொலைக்காட்சி, மற்றும் அரச பத்திரிகைகளின் செய்திகளில் குறிப்பிடப்பட்டது. இது அப்பட்டமான வரம்புமீறல். சகல விதிமுறைகளும் மீறப்பட்டு கட்சிப் பிரசாரம் நடத்தப்பட்டிருக்கிறது.

களுத்துறை சிறையில் தமிழ்க் கைதிகளை கொலை செய்தவர்களைக்கூட காடையர்கள் என்று குறிப்பிடாத அரச தொடர்பு சாதனங்கள், ஐ.தே.கட்சி ஆதரவாளர்களை காடையர்கள் என்ற நாகரிகமில்லாத வார்த்தைகளால் சாடியிருக்கிறது.

மோசடி நடைபெற்ற வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவுக்கு ஜனாதிபதி பணிப்பு என்று திரும்ப திரும்ப அரச தொடர்பு சாதனங்கள் அறிவித்துக் கொண்டிருந்தன. அது மட்டுமல்ல அவ்வாறு ஜனாதிபதி கூறியதை அரசியல் விமர்சகர்கள் வரவேற்றுள்ளனர் என்றும் அதே செய்தி அறிக்கையில் கூறப்பட்டது.

ஜனாதிபதி அவ்வாறு பணித்ததாக செய்தியே அப்போதுதான் வருகிறது, அப்படியிருக்க அரசியல் விமர்சகர்கள் அதுபற்றி எப்படி கருத்துக் கூறியிருக்க முடியும்?

அது ஒரு புறமிருக்க, ஜனாதிபதி சர்வ அதிகாரம் கொண்டவர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர, வேறு எதுவேண்டுமானலும் செய்யக்கூடிய அதிகாரங்கள் அவர் கையில் இருக்கின்றன.

அவ்வாறு இருக்கும்போது தேர்தலை வன்முறையின்றி நடத்தி முடித்திருக்க வேண்டியவர் அவர்தான். அவரே மோசடி நடைபெற்ற வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு செய்யலாம் என்று கூறுவது உறுத்தலாக உள்ளது.

தேர்தல் ஆணையாளர் மறுவாக்குப் பதிவின் அவசியம் பற்றியோ, தேர்தல் மோசடிகள் பற்றியோ அறிக்கை சமர்பிக்க முன்னரே அவசரமாக ஜனாதிபதியின் பணிப்பும், அவ்வாறு பணித்துள்ளதாக திரும்ப திரும்ப பிரசாரமும் செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 25ம் திகதியன்று இரவு அரச வானொலி செய்தியில் பொது ஜன முன்னணி பொதுச் செயலாளரின் கருத்து வெளியானது.

தமது தோல்வியை மறைக்க ஐ.தே.கட்சி பொய்யான புகார்களை கூறுவதாக அவர் கூறியதாக செய்தியறிக்கை தெரிவித்தது.

வாக்குகளே எண்ணப்பட்டு முடியாத அந்த நேரத்தில், தமது வெற்றி குறித்து அத்தனை திடமாக அவர் கூறியது புருவம் உயர்த்த வைத்த சமாச்சாரம்.

அது மட்டுமல்ல முடிவுகள் வெளியான தினமான ஜனவரி 26ல் தேர்தல் ஆணையாளர் ஒரு புகார் கூறியிருந்தார். தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் சிலர் தமது கடமையை சரிவரச் செய்யவில்லை என்று கூறியிருந்தார்.

அதாவது, மோசடிகளைத் தடுக்காது இருந்ததுடன், அதுபற்றி தேர்தல் ஆணையாளரிடமும் அவர்கள் அறிக்கையிடவில்லை என்று அர்த்தம்.

மோசடி நடந்துள்ள சாவடிகளில் தேர்தலை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி கூறி யுள்ளார். ஆனால் மோசடி நடந்ததாக அங்கு கடமையாற்றிய அதிகாரிகள் அறிக்கை கொடுத்தால்தானே ஆணையாளர் மறு வாக்குப் பதிவு நடத்தலாம்.

மறுவாக்குப் பதிவு நடத்த அரசு தயார். ஆனால் அதிகாரிகள் முறையிடவில்லையே என்று ஆகிவிட்டது. விவேகமாக காய்கள் நகர்த்தப்பட்டுள்ளன.

அப்படியே மறுவாக்குப் பதிவு நடத்துவதாக இருந்தாலும் தமக்கு ஆதரவுள்ள பகுதிகளில் உள்ள சாவடிகளில் நடத்தக்கூடியதாக செய்வதும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இயலாத காரியமல்ல.

பொதுஜன முன்னணித் தலைமையும், அரச பிரசார சாதனங்களும் கூறும் செய்திகளை மட்டும் நம்பினால், பின்வரும் முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும்.

ஐ.தே.கட்சி மட்டும்தான் வடமேல் மாகாண சபை தேர்தலில் வன்முறையில் புகுந்து விளையாடி படு அநியாயம் செய்திருக்கிறது. பொ.ஐ.முன்னணி ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டியபடி கைகட்டி நின்றிருக்கிறது.

இப்படியான முடிவுக்கு வந்தால் பலத்த சந்தேகம் ஒன்று எழுவது தவிர்க்க முடியாதது.

அங்கு கடமையில் இருந்த பொலிஸ், இராணுவம், அதிரடிப்படை போன்றவைகூட ஆளும் கட்சிக்கு அநீதி இழைக்கப்பட்டதை வேடிக்கை பார்த்துள்ளனவா? அப்படியாயின் தற்போதும் மறைமுகமாக நாட்டையாள்வதும், அதிகாரம் படைத்ததும் ஐ.தே. கட்சிதானா?

பொதுஜன முன்னணிமீது ஐ.தே.கட்சி சுமத்தும் குற்றச் சாட்டுகளை ஒதுக்கி விட்டால்கூட, ஆளும் தரப்புக்குள் உள்ள வாசுதேவ நாணயக்காரவும் பொ.ஐ. முன்னணிமீது குற்றம் சாட்டியுள்ளார். ஜே.வி.பி, புதிய இடதுசாரிகள் முன்னணி ஆகியவையும் குற்றம் சாட்டியுள்ளன.

அரசியல் கட்சிகளையும், அரசியல்வாதிகளையும் ஓரம் தள்ளிவிடலாம். கட்சி சார்பற்ற தேர்தல் கண்காணிப்பு குழுவும் பொது ஜன முன்னணிமீது குற்றம் சாட்டியுள்ளது.




இலக்கத்தகடு இல்லாத வாகனம்

அரசு தன் மீதான நம்பகத்தன்மைக்கு சாவுமணி யடித்துள்ளது என்று அக் குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் பொது ஜன முன்னணியினர் அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக கூறியுள்ளன.

தபால்மூல வாக்குகளது எண்ணிக்கையில் புத்தளத்தில் பொதுஜன முன்னணி முன்னணியில் வந்தது. ஆயினும் ஐ.தே.கட்சியைவிட 200 வாக்குகள்தான் அதிகம்.

குருநாகல் மாவட்டத்தில் ஐ.தே.க. முதலிடத்தில் வந்தது. அங்கு பொ.ஐ. முன்னணியைவிட 300 வாக்குகள் அதிகம்.

இரண்டு அணியுமே கொண்ட வாக்குகள் வித்தியாசத்தில்தான் ஒன்றையொன்று முந்தலாம் என்பதையே தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் வெளிப்படுத்தின.

ஆனால், தேர்தல் முடிவுகளின் பல்லாயிரம் வாக்கு வித்தியாசத்தில் பொது ஜன முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

**நாரதர்**

அதிலும் வடமேல் மாகாணத்தில் ஐ.தே. கட்சியின் குகையான குருநாகல் மாவட்டத்தில்கூட பொ.ஐ.முன்னணி முதலிடத்தில் வந்திருக்கிறது. தபால் மூல வாக்களிப்பில் இங்கு ஐ.தே.கட்சி முதலிடத்தில் வந்தது.

மொத்த வாக்காளர்களது மனோபாவம் தபால் மூலம் வாக்களித்தவர்களது மனோபாவம் பிரதிபலிக்கும்.

சென்ற பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களை எடுத்துக்கொண்டால் தபால் மூல வாக்களிப்புக்களிலும் பொ.ஐ. முன்னணியே அமோகமாக முன்னணியில் நின்றது. ஏனைய வாக்குப் பதிவுகளும் அதுபோன்றே அமைந்தன. இம்முறைதான் தபால் மூலமான வாக்களிப்புக்கும், சாவடிகளில் அளிக்கப்பட்ட வாக்களிப்புக்கும் இடையே நேர்மாறான தன்மை காணப்படுகிறது.

தபால் மூல வாக்களிப்பில் மோசடிகளுக்கு இடமில்லை என்பதும் குறிப்பிடத்தக்க அம்சம்.

மொத்தத்தில் பார்த்தால், வடமேல் மாகாண சபையில் பொது ஜன முன்னணி வென்றுள்ளது. ஆனால் ஜனாதிபதியினதும், அரசினதும் மதிப்பு உள்நாட்டிலும், உலக அரங்கிலும் சேதமாகியுள்ளது. ■

### தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் விபரம்

| புத்தளம் மாவட்டம் | |
|---|---|
| பொ.ஐ.மு. | 1469 |
| ஐ.தே.க. | 1287 |
| ஜே.வி.பி. | 132 |
| முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி | 12 |
| புதிய இடதுசாரி முன்னணி | 11 |
| சுயேச்சை I | 3 |
| சிறீலங்கா முற்போக்கு முன்னணி | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 2915 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 80 |
| செலுத்தப்பட்ட மொத்த வாக்குகள் | 2995 |

| குருநாகல் மாவட்டம் | |
|---|---|
| ஐ.தே.க. | 5715 |
| பொ.ஐ.மு. | 5482 |
| ஜே.வி.பி. | 505 |
| புதிய இடதுசாரி முன்னணி | 52 |
| சுயேச்சை I | 16 |
| முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி | 6 |
| லிபரல் கட்சி | 4 |
| செல்லுபடியான வாக்குகள் | 11780 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 392 |
| செலுத்தப்பட்ட மொத்த வாக்குகள் | 12172 |

## அதிரடி அய்யாத்துரை



***தேர்தல் நடைபெற்ற*** பகுதியில் இருந்த சீருடை நிலையம் ஒன்றுக்கு சென்றவர்கள் கேட்டனராம்: "உங்களிடம் உள்ள துப்பாக்கிகளைத் தருகிறீர்களா? மாலையில் திருப்பித் தருகிறோம்." பவ்வியமாக மறுத்துவிட்டனராம் சீருடையினர். எத்தனை பேருக்கு இடமாற்றம் வருமோ? என்று யோசனையாகவும் இருக்குதாம்.

***"உங்கள் வாக்கு*** எங்களுக்கே. நீங்கள் வாக்குப்போடாவிட்டால், உங்கள் வாக்குகளை நாங்களே போடுவோம்!" இதுதான் தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் போடவேண்டிய உண்மையான கோஷம். ஆனால் அவை சொல்வதை செய்வதுமில்லை. செய்வதைச் சொல்வதுமில்லையே. சில பகுதிகளில் வாக்குப்போடச் சென்றவையை மிரட்டி திருப்பி அனுப்பியிருக்கினம். "அதெல்லாம் பெட்டி நிரம்பியாச்சு போங்கோ!" என்று கூறப்பட்டதாம். அங்கு அப்படி நடந்துகொண்டிருக்க, அரச வானொலி என்ன கூறியது தெரியுமோ? பச்சை அணிதான் வாக்குப் போடாமல் தடுப்பதாகக் கூறியது.

***அவுஸ்திரேலியாவில்*** கிரிக்கெட் மைதானத்தில் 'இனப்படுகொலை' என்று விமானத்தின் புகையினால் எழுதிக் காட்டப்பட்டது தெரிந்ததுதானே? அவ்வாறு எழுதிக் காண்பிக்க விமான ஓட்டிக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமோ? ஆயிரத்தி ஐநூறு டொலர்கள்.

***முன்னைய முதலமைச்சரின்*** வருகை அந்த அமைப்பின் செயலாளருக்குத் தெரியாது என்று 'முரசு' செய்தி போட்டதல்லோ? அதனால், தனக்குத் தெரிந்துதான் வந்தவர்: பாதுகாப்பு காரணத்துக்காக சொல்லவில்லை என்று அசடு வழிகிறாராம் செயலாளர். அப்படியானால் பி.பி.சி. பேட்டியில் பத்திரிகைகள் பிழையான தகவலை மக்களுக்கு கொடுப்பதாக ஏன் கூறினவராம்? சகல பத்திரிகைகள்மீதும் அவதூறு கூறியதும் பாதுகாப்பு காரணம் என்று கூறப்போகிறாரோ? அதுமட்டுமில்லை, தங்களுக்குள் பிரச்சனை என்று சில பத்திரிகைகள் கதை கட்டுகிறதாம். ஹி.ஹி.ஹி. தாம் ஏதோ பெரும் கட்சிபோலவும், தம்மை பிரிக்க சதி நடப்பதுமாதிரியும்.....ஹி.ஹி.ஹி.

***"தலைநகரில் கைதான தமிழ்*** தொழிலதிபரை ரெண்டு எழுத்தாருடன் முடிச்சுப்போடுவது முறையோ?" என்று அதிகாரத் தரப்பாரின் கூட்டத்தில் சக்தியானவரிடம் கேட்கப்பட்டதாம். கேட்டவரும் அதிகாரம் உள்ள பொறுப்பு வகிப்பவர்தான். "ரெண்டு எழுத்தாருடன் தொடர்பு இருப்பது உண்மைதான்" என்று சக்தியானவரே உறுதிபடக் கூறினாராம். வியாபார போட்டியில்தான் மேற்படி தொழிலதிபர் சிக்க வைக்கப்பட்டதாக சிங்களப் பத்திரிகைகளே செய்தி போட்டுள்ளன.

***அவுஸ்திரேலியாவில்*** கதிரர் சென்ற இடமெல்லாம் எதிர்ப்புக் காட்டப்பட்டிருக்குது. அந்த மன உளைச்சலில் கொஞ்சம் கடுமையாகவே அங்குள்ள தமிழ் அமைப்புக்களை சாடியிருக்கிறார். அதனால் ரெண்டு எழுத்தாருடன் பெரிதாகச் சாராத சிலர்கூட இப்போது சார்ந்து நிற்கினமாம். "அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் பலரை ஒன்று படுத்திவிட்டார். அதுக்கு நன்றி சொல்ல வேண்டும்!" என்று அங்குள்ள நண்பர் ஒருவர் தொலைபேசியில் 'ரெல்லி'னார்.

**இவ்வாரப் பொன்மொழி:**

**"தீய செயல் குறித்து**
**தெய்வத்தின் முன்னால்**
**வெட்கப்படாதே!**
**மனிதன் முன்பாக**
**வெட்கப்படு!**
**அப்பொழுதே உனக்கு**
**விமோசனம் ஆரம்பம்!"** ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# ரஞ்சன் விஜயரத்தினா கொலைக்கு பின்னர் புலிகள் கூறிய கருத்து!

**1991** ஜூன் மாதத்தோடு பிரேமதாசா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் மூண்ட ஓராண்டு பூர்த்தியானது.

இந்த ஓராண்டுக்குள் புலிகளால் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா கொல்லப்பட்டார்.

இத்தாக்குதல் பற்றி முன்னரே இங்கு விபரித்தாகிவிட்டது.

ரஞ்சன் விஜயரத்தினாமீதான தாக்குதலுக்கு இன்றுவரை புலிகள் நேரடியாக உரிமை கோரவில்லை.

எனினும் தம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை ஏதோ ஒருவகையில் புலிகள் வெளிப்படுத்திவிடுவர்.

ரஞ்சன் கொலைக்கு பிரேமதாசாமீது தற்போது குற்றம் சாட்டப்படுகிறது. விசாரணைக் கமிஷன் நிறுவாமல் விட்டது ஆச்சரியம்தான். அப்படியொரு கமிஷன் போட்டிருந்தால், பிரேமதாசாதான் காரணம் என்று கூறப்பட்டிருந்தாலும் ஆச்சரியமில்லைத்தான்.

அரசியல் காரணங்களுக்காக நியமிக்கப்படும் கமிஷன்கள், யார் ஆட்சியில் இருக்கிறார்களோ, அவர்களது விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே முடிவுகளை அறிவிக்கும்.

1991 ஜூன் மாதத்தோடு பிரேமதாசா அரசுடன் மூண்ட போர் ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு புலிகள் தமது கருத்தைக் கூறியிருந்தனர்.

ரஞ்சன் விஜயரத்தினா கொலை நியாயமானது என்பதை அதில் புலிகள் மறைமுகமாக குறிப்பிட்டிருந்தனர்.

"1991 ஜூன் மாதத்தில் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையின் முக்கியமான பகுதிகள் இவை;

1991 ஜூன் மாதம் 11ந் திகதியுடன் இரண்டாவது தமிழீழப் போர் ஒரு வருட காலம் பூர்த்தியடைந்துவிட்டது.

இந்திய இராணுவ வருகைக்கு முன்னர் ஸ்ரீலங்காவுக்கும் தமிழர்களுக்கும் நடந்த யுத்தத்தை முதல் போர் என்றும், இந்திய




கள் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டதுடன், பலம் பொருந்திய பல இராணுவ முகாம்கள் புலிகளால் தாக்கிக் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில் தமது இராணுவ முகாம்களையே பாதுகாக்க முடியாத ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு, வட பகுதியைக் கைப்பற்றுவது முடியாத காரியமாகவே போய்விட்டது.

போரின் ஆரம்பத்தில் பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது விமானக் குண்டுகளை வீசி, பொதுமக்களுக்கு உயிர் அச்சத்தையும் உருவாக்கினால், விடுதலைப்போரை நசுக்கலாம் என்று ஸ்ரீலங்கா தரப்பினர் போட்ட கணக்குகளும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

தமிழ் மக்கள் தமது சுய பாதுகாப்புப் பணிகளை நன்கு சீரமைத்துக் கொண்டதுடன் குண்டு வீச்சுக்களின் மத்தியிலும் சாதாரணமாக வாழத் தொடங்கிவிட்டனர்.

சமீபத்தில் நடந்த தாக்குதல்களில் வவுனியாப் பகுதியிலும், மன்னார் பகுதியிலும் இராணுவத்தினர் பலத்த இழப்புடன் தோல்வியையே தழுவிக் கொண்டனர்.

தற்போது தாம் வடபகுதியைக் கைப்பற்றி வைத்திருக்க கூடிய பலம் தம்மிடம் இல்லையென்றும், வடபகுதியைக் கைப்பற்றுவதற்காக தாம் நடவடிக்கை எடுக்கவில்லை, விடுதலைப் புலிகளை அழிக்கவே தாம் தாக்குதல்களை நடத்துவதாகவும் அரச தரப்பினர் அறிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இதன் மூலம் ஒரு வகையில் வட பகுதியைக் கைப்பற்ற முடியாது என்பதை வெளிப்படையாக ஸ்ரீலங்கா அரசே ஒப்புக் கொண்டுவிட்டது.

வெல்வது என்பது எப்போதும் முடியாத காரியமாகவே இருக்கும்.

கடந்த ஒரு வருடத்தில் புலிகளின் பலம் பலவகையிலும் அதிகரித்து உறுதியாக உள்ளது. இந்நிலையில் கடந்த ஒரு வருட யுத்தத்தில் ஸ்ரீலங்கா எந்த இராணுவ வெற்றியையும் பெறவில்லை என்பதும், படிப்படியாக தோல்வியடைந்து வருகின்றது என்பதுமே உண்மை.

அரசியல் ரீதியிலும் இரண்டாவது தமிழீழப் போர் ஆரம்பித்தவுடன் ஸ்ரீலங்காவுக்கு சார்பான நிலை சர்வதேச மட்டத்தில் நிலவிய போதிலும் இறுதிப் பகுதியில் சர்வதேச அபிப்பிராயங்கள் ஸ்ரீலங்காவிற்கு பாதகமாகவே அமைந்து வருகின்றன.

ஆரம்பத்தில் பிரேமதாசா தன்னை ஓர் சமாதான விரும்பியாகக் காட்டிக் கொண்டு புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்து வந்த போதிலும், புலிகள் பகிரங்க அழைப்புக்களை விட்டபோது, ஸ்ரீலங்கா நிபந்தனைகளையே விதித்தது.

## போர் நிறுத்தம்

1991 ஜனவரி மாதம் புலிகள் தாமாகவே 29 நாட்கள் போர் நிறுத்தம் செய்து ஸ்ரீலங்காவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர்.

ஆனால் ஸ்ரீலங்கா ஏற்க முடியாத பல நிபந்தனைகளை விதித்து, 10 நாட்களுடன் தானாகவே போர் நிறுத்தத்தை முறித்து தாக்குதலை ஆரம்பித்தது.

நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இனப்பிரச்சனையைத் தீர்த்து ஓர் சமரச தீர்வை ஏற்படுத்த விருப்பம் தெரிவித்தபோது, விடுதலைப்புலிகள் அப்போதும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்பதைத் தெரிவித்தனர்.

சில சர்வதேச அமைப்புக்களும் சமரச முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் தற்போது ஸ்ரீலங்கா அரசு நிபந்தனைகளை விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

விடுதலைப்புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கையில் ஸ்ரீலங்கா ஏதேதோ காரணங்களைக் கூறி

வாத நடவடிக்கை என்று தான் கூறி வருகின்றதே தவிர, இதுவரைக்கும் இனப்பிரச்சனையை தீர்க்க கூடியவகையில் எந்த அறிகுறியையும் வெளிக்காட்டவில்லை.

ஸ்ரீலங்காவில் அரசியல் வாதிகளால் தமது சுயலாபம் கருதி தூண்டி வளர்க்கப்பட்ட சிங்கள பௌத்த இன வாதம் இன்று விசுவரூபம் பெற்று வளர்ந்து நிற்கின்றது.

இன்றைய நிலையில் அரசியல் வாதிகள் இனப்பிரச்சினையை தீர்க்க முயன்றால், அவர்



தொடர்பு மூலமாகவும், பல்முனைச் சந்திப்பு மூலமாகவும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும், தமிழ் ஈழ விடுதலைப்புலிகளையும் போரை நிறுத்தி மீண்டும் பேச்சு வார்த்தைக்குத் திரும்புமாறு வற்புறுத்தியுள்ளது.

அரச படைகளினால் நடைபெறும் குற்றங்களைக்களைய வேண்டிய தேவை பற்றியும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளது.

மாசி 91ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 47வது தொடரில் அவுஸ்திரேலிய அறிக்கை ஸ்ரீலங்காவில் தொடர்ந்து நடைபெறும் வன்முறையையும், இரத்தக் களரியையும் பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

செனட்டர் இவான்ஸ் மிக அண்மையில் சித்திரை 16ம் திகதி ஸ்ரீலங்காவில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் குரல் கொடுத்துள்ளார்.

சண்டையின் நடுவில் அகப்பட்ட பொதுமக்களின் துன்பத்தைப் போக்குவதற்காக 450,000 டொலர்கள் அவசர உதவி நிதியாக அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்த நிதி உதவியை அவுஸ்திரேலிய அரசால் சர்வதேச நிறுவனங்கள் அதாவது

படை வெளியேற்றத்தின் பின் ஆரம்பித்த தமிழீழ யுத்தத்தை இரண்டாவது போர் என்றும் அழைக்கப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்தை நாம் நன்கு அவதானித்துப் பார்த்தால் ஸ்ரீலங்கா அரசு படிப்படியாக தோல்வியடைந்து வருவது நன்கு புலனாகத்தான் செய்கின்றது.

## சூழுரை

இரண்டாவது போர் ஆரம்பித்த வேளையில் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர், விடுதலைப் புலிகளை அழித்து வடகிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றி விடுவேன் என்று பல முறை சூழுரைத்தார்.

அவருடன் சேர்ந்து டென்சில் கொப்பேகடுவ போன்ற மூத்த இராணுவ அதிகாரிகளும் மூன்று மாதத்திற்குள் வடக்கு-கிழக்குப் பகுதியை கைப்பற்றி விடுவோம் என்று கங்கணம்கட்டி நின்றனர்.

விடுதலைப்புலிகளை அழிப்பதாகக் கூறிக் கொண்டு தமிழ் மக்களின் மீதான ஒருமுழு அளவிலான போர் நடவடிக்கையையே ஸ்ரீலங்கா அரசு நடத்தி வந்தது. ஆனாலும் ஸ்ரீ லங்கா இராணுவ அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நினைத்தது போன்று வடக்கு-கிழக்கைப் பிடிக்க முடியவில்லை.

'புலிகளின் மழலைப் பட்டாளத்தை முற்றாக அழித்து விடுவேன்' என்று பல முறை சவால் விடுத்த ரஞ்சன் விஜேரத்னா ஒரு வருடத்திற்குள் காணாமல் போய்விட்டார்.

மடுப்பகுதியில் தங்கியிருந்த 23 ஆயிரத்துக்கு அதிகமான அகதிகளை அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு கூறி, அப்பகுதி இராணுவ நடவடிக்கைக்காகப் புறப்பட்டு சென்று கொண்டிருந்த வேளையில் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் கொல்லப்பட்டமை நிச்சயமாக ஏதோ வகையில் தமிழ் மக்களுக்கு ஒரு புதுத் தென்பைக் கொடுத்தது என்பது மறுக்க முடியாததாகும்.


அதேவேளை வடக்கு-கிழக்குப் பகுதியைக் கைப்பற்றுவோம் என்று கூறிக் கொண்டு இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியையே தழுவிக் கொண்டன.

வட பகுதியிலிருந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாம்

கிழக்கிலும் நகர்ப் பகுதிகளைச் சூழ உள்ள பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் அனைத்தும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன.

மொத்தத்தில் தமிழீழத்தின் 75 வீதத்துக்கும் அதிகமான பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

மேலும் விடுதலைப்புலிகள் அடிக்கடி புதிய, புதிய முறையில் தமது தாக்குதல் நடவடிக்கைகளை வடிவமைத்துக் கொள்வதாலும், பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் தாக்குதல்கள் நடத்தப்படுவதால் விடுதலைப்புலிகளை



DEPARTMENT OF FOREIGN AFFAIRS AND TRADE

CANBERRA A.C.T.

24 June 1991

President
World Tamil Movement (Ontario)
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5
CANADA

Dear Mr Inpanayagam

Thank you for your letter of 25 May 1991 to the Prime Minister concerning the human rights situation in Sri Lanka. The Prime Minister forwarded your letter on to the Minister for Foreign Affairs and Trade, Senator Evans, who has asked me to reply on his behalf.

The Australian Government is deeply concerned by events in Sri Lanka and by consequent loss of life, particularly in the north of the country.

Through bilateral contacts, as well as in multilateral forums, the Australian Government has urged both the Sri Lankan Government and the Liberation Tigers of Tamil Eelam to end the fighting and return to the negotiating table. The Australian Government has emphasized repeatedly to the Sri Lankan Government the need to curb abuses committed by its security forces, although the Government realizes that the abuses which are occurring are not the sole responsibility of any one party to the conflict. The Australian Statement at the 47th Session of the United Nations Commission on Human Rights in February 1991 underlined Australia's concerns over the continuing violence and bloodshed in Sri Lanka.

Senator Evans has continued to speak out against the human rights violations occurring in Sri Lanka, most recently in the Australian Parliament on 16 April 1991.

Since July 1990 Australia has contributed a total of $450,000 in emergency assistance to help alleviate the suffering of Sri Lankan civilians caught up in the hostilities. This assistance has been channelled through Australian and international organizations such as Australian Catholic Relief, Save the Children Fund and Community Aid Abroad.

The Australian Government will continue to urge the Sri Lankan Government to pursue expeditiously and flexibly all avenues for a peaceful settlement, including the Commonwealth initiative Prime Minister Hawke and Senator Evans raised with President Premadasa last year. The Government is keeping in touch with Sri Lankan Government on the issue, and would consider assisting any viable proposal for a peaceful solution to what is undoubtedly a tragic situation in Sri Lanka.

Yours sincerely

(Brian Goodwin)
Acting Assistant Secretary
South East and South Asia Branch

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரின் கடிதம்

பேச்சுவார்த்தையை தவிர்த்து வருவதை சர்வதேச நாடுகள் உணரத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் சர்வதேச நாடுகள் ஏதோ வகையில் சில அழுத்தங்களை ஸ்ரீலங்கா அரசு மீது போடத்தான் செய்கின்றன.

கடந்த வாரத்தில் தென் பகுதியில் நடந்த கூட்டமொன்றில் பிரேமதாசவின் பேச்சு இதை தெளிவாகக் காட்டுகின்றது. "எந்த வெளிநாட்டுச் சக்திகளின் அழுத்தத்துக்கும் பயந்து நான் பேச்சுவார்த் தைக்கு போக முடியாது என்னை யாரும் மிரட்டி பேச்சுவார்த்தைக்கு இழுக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

இவ்வாறு பிரேமதாசா கூறுவதாவது ஏதோவிதத்தில் வெளிநாடுகளின் அழுத்தங்கள் உள்ளன என்பதையே காட்டுகின்றன.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் எதுவும் விதிக்காதபோது ஸ்ரீலங்கா அரசினரும் நிபந்தனைகளை விதிக்காமல் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்றே சர்வதேச நாடுகளும், தமிழ் மக்களும் விரும்புகின்றனர்.

புலிகளைப் பொறுத்தவரை நிபந்தனையற்ற முறையில் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராகவே உள்ளனர்.

தமிழர்கள் ஓர் தேசிய இனம் என்ற அடிப்படையிலும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அடிப்படையிலுமே இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று புலிகள் அடிக்கடி கூறிவருகின்றனர்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்றும் புலிகள் அடிக்கடி கூறி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு இப்பிரச்சினையை ஓர் பயங்கர

கள் இனவாத பூதத்துக்கு பலியாகிவிடும் சூழ்நிலை இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

அதனால்தான் பிரேமதாசாகூட இராணுவத்தீர்வில் நம்பிக்கை வைத்துள்ளார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணு ரீதியில் நசுக்கிவிட நினைக்கின்றார். இந்நிலையில் விடுதலைப்புலிகளும் சமரசத் தீர்வுக்கு தாம் எதிரானவர்கள் இல்லை என்பதை வெளிக்காட்டிக் கொண்டு, இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தமிழீழப் பகுதியை ஸ்ரீலங்காப் படைகளிடம் இருந்து மீட்க வேண்டிய கடமையும், ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து தமிழ் மக்களைக் காக்க வேண்டிய கடமையும் விடுதலைப்புலிகளையே சூழ்ந்து நிற்கின்றது.

தமிழீழத்தின் முழுப் பகுதியையும் புலிகளின் கட்டுப்பாட்டில் எடுத்து, ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமிழீழப் பகுதியில் இயங்க முடியாத ஓர் ஸ்தம்பித நிலையைக் கொண்டு வருவதன் மூலமே ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களின் உரிமையை மதிக்க செய்ய முடியும். இவ்வாறு புலிகள் தெரிவித்திருந்தனர்.

## அவுஸ்திரேலிய அக்கறை

வெளிநாடுகளில் பதவியில் உள்ள அரசாங்கங்களைப் பொறுத்தும் அந்த நாடுகளது சர்வதேசக் கண்ணோட்டங்கள் மாறுபடும்.

1991ல் அவுஸ்திரேலிய அரசுக்கு உலகத் தமிழர் இயக்கத்தினரால் இலங்கைத் தமிழர் நிலை குறித்து உருக்கமான கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.

உடனடியாக அக் கடிதத்திற்கு அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு பதில் கொடுத்தது.

அக் கடிதத்தில் அன்றைய அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"ஸ்ரீலங்காவின் மனித உரிமை நிலைபற்றி நீங்கள் பிரதம மந்திரிக்கு 1991 மே மாதம் 25ம் தேதியிட்ட மடலுக்கு நன்றி.

பிரதம மந்திரி அதை வெளிவிவகார வர்த்தக மந்திரியிடம் சமர்ப்பித்தார்.

வெளிவிவகார வர்த்தக மந்திரி செனட்டர் இவான்ஸ் அவர்கள் அம்மடலுக்குத் தனது சார்பாகப் பதிலளிக்குமாறு என்னை வேண்டியுள்ளார்.

ஸ்ரீலங்காவில், குறிப்பாக வட மாகாணத்தில் நடக்கும் உயிரிழப்புக்கள் பற்றி அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆழ்ந்த கவலைக்குள்ளாகியுள்ளது.

நடைபெறும் குற்றங்களுக்கு ஒரு தனிக் கட்சி மட்டும் பொறுப்பல்ல என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் உணர்ந்திருந்தும், நேரடித்

கத்தோலிக்க நிவாரணம் குழந்தைக் காப்பு நிதி. சமூகவெளிநாட்டு உதவி போன்றவை மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பொது நல நாடுகளது மகாநாட்டில் பிரதமர் HAWKEம் செனட்டர் இவான்ஸ்சும் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆட்சேபனையை தெரிவித்தனர். சமாதானத் தீர்வுக்குத் தேவையான அத்தனை வழிகளையும் விரைவாகவும் வளைந்து கொடுத்தும் செயற்படுத்தும்படி அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்தும்.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தோடு தொடர்ந்தும் தொடர்பு கொள்வதோடு சந்தேகத்திற்கிடமின்றி தீர்வு காண்பதற்குத் தேவையான உதவியையும் கொடுப்பது பற்றிச் சிந்திக்கும்.

*உங்கள் உண்மையுள்ள*
*(பிறயன் கட்வின்)*
*பதில் உதவிச் செயலாளர்*
தென்கிழக்கு, தென் ஆசிய கிளை.

என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத் தொடர் எழுதப்படும்போது பதவியில் உள்ள அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசுக்கு முழுச் சார்பானது.

இன்றைய அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர்தான் தமிழ்க் கட்சிகள் தீர்வுப் பொதியை ஏற்க வேண்டும் என்று தனது இலங்கை விஜயத்தின்போது கூறியிருந்தார்.

## மத்தியஸ்தம்

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் வகிக்கத் தான் தயாராக இருப்பதாக இ.தொ.கா. தலைவர் தொண்டமான் அறிவித்தார்.

தனது விருப்பத்தை தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பினார்.

அக்கடிதத்திற்கு பிரபாகரன் பதில் எழுதவில்லை. மாத்தையாவே பதில் அனுப்பினார்.

'முதலில் இங்கு வந்து நிலைமைகளை பாருங்கள். இங்கு வந்து எம்முடன் பேசுங்கள்' என்று மாத்தையா அழைத்திருந்தார்.

'யாழ் செல்லுவேன்' என்று தொண்டா கூறியபோதும் அங்கு அவர் போகவேயில்லை.

இக் கால கட்டத்தில் பெரும் திருப்பமான சந்திப்பு ஒன்று இரகசியமாக நடந்தது.

*(தொடர்ந்து வரும்)*



படிப்பகம்

www.padippakam.com

# சேது சமுத்திர திட்டம்! காத்திருக்கும் இழப்பு!

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் கையில் எடுத்துள்ள புதிய திட்டம் ஒன்றால், இலங்கை அரசு பாரிய இழப்பொன்றை எதிர்காலத்தில் சந்திக்கவுள்ளது.



பெர்ணாண்டஸ்

1860 ஆம் ஆண்டு ஆங்கிலேய கடற்படைத் தளபதி ஏ.டி.டெய்லர் என்பவரால் தீட்டப்பட்டதுதான் சேது சமுத்திரத் திட்டம்.

கிட்டத்தட்ட 130 ஆண்டுகளாக முதலில் பிரிட்டிஷ் அரசும், பின்னர் இந்திய அரசாங்கங்களும் அத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தவறியிருந்தன.

அத்திட்டத்தைத்தான் தற்போது தேடி எடுத்து உயிர்கொடுக்க முன்வந்துள்ளார் இந்தியப் பாதுகாப்பமைச்சர்.

இத்திட்டத்தால் இலங்கை அரசுக்கு எத்தகைய பாதகம் ஏற்படும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், சேது சமுத்திரத் திட்டம் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரைக்கும், இலங்கையின் வடபகுதிக்கும் இடைப்பட்ட கடற்பகுதியே சேது சமுத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

இராமர் தன் வானரப்படைகளுடன் இப்பகுதியில் இருந்தே தலை மன்னாருக்கு பாலம் அமைத்துக் கடந்ததாக இதிகாசக் கதையில் கூறப்பட்டிருக்கிறது.

சேது சமுத்திரம் பகுதி ஆழம் குறைந்த கடல் பகுதியாகும். சில இடங்களில் மணல் மேடுகளும் தெரிகின்றன. ஆழம் 12 அடிக்கும் குறைவாக இருப்பதாலும், மணல் மேடுகளும், பாறைகளும் இருப்பதாலும் இந்த வழியாக பெரிய கப்பல்கள் செல்ல இயலாது.

இதனால் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கையை சுற்றிக்கொண்டுதான் இந்தியாவின் துறைமுகங்களுக்குச் செல்ல வேண்டும்.

அது மட்டுமல்ல, மும்பாயிலிருந்து கல்கத்தா செல்லும் இந்தியக் கப்பல்கள்கூட இலங்கையைச் சுற்றித்தான் செல்ல வேண்டும்.

இதனால் அக் கப்பல்கள் கொழும்பு, காலி ஆகிய துறைமுகங்களில் சிறிது நேரம் தரித்துச் செல்லுகின்றன. அதன் மூலம் இலங்கை அரசுக்கு வருமானம் கிடைப்பதோடு, மேற்படி துறைமுகங்களுக்கு கேந்திர முக்கியத்துவமும் அதிகமாகியுள்ளது.

இலங்கையில் அமெரிக்கத் தலையீடு அதிகமாகிவருவதால், இலங்கையைச் சுற்றி இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு கப்பல்கள் சேவைகள் நடைபெறுவதும் பாதுகாப்பானதல்ல என்ற கருத்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சில் எழுந்திருக்கிறது.

இதில் முக்கியமான இன்னொரு விடயம் யாதெனில், 3500 கடல்மைல்கள் நீளமுள்ள இந்தியக் கடற்பரப்பின் பாதுகாப்புக்காக வலம்வரும் இந்தியக் கடற்படைப் போர்க் கப்பல்கள்கூட இலங்கையைச் சுற்றித்தான் செல்ல வேண்டியுள்ளது.


இலங்கையில் அமெரிக்கா கடற்தளம் அமைக்குமானால், இந்தியப் போர்க் கப்பல்கள் இந்தியக் கடற்பகுதியை வலம்வருவதும் பாதிக்கப்படலாம். இந்தியக் கடற்படைப் பலத்துக்கே இது மிகப் பாதகமான விடயமாகும்.

இந்தியாவின் தெற்கே உள்ளது டியேகோகார்சியா தீவு. அங்கு அமெரிக்காவின் கடற்படைத் தளம் இருக்கிறது. தென்னாசியாவில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட இத்தீவில் அமெரிக்கா காலூன்றி நிற்கிறது.

இந்தியக் கடற்படைக் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி செல்லும்போது, டியேகோகார்சியாதீவில் இருந்து அமெரிக்கக் கடற்படை தாக்குதல் நடத்துவதும் சுலபம்.

டியேகோகார்சியா தீவில் அமெரிக்கத் தளம் அமைக்கப்பட்டிருப்பதாலேயே மாலைதீவை இந்தியா தன் கண்காணிப்பில் வைத்திருந்து வருகிறது. அங்கு தனியான அரசு இருந்தாலும்கூட இந்தியாவின் மறைமுகமான பிடியில்தான் மாலைதீவு இருந்து வருகிறது.

அணுக்குண்டு விடயத்தில் அமெரிக்கா இந்தியாவை மறைமுகமாக மிரட்டியதையடுத்து இந்தியா தனது பாதுகாப்பில் மேலும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது.




இதன் காரணமாக மாலைதீவில் இந்தியாவின் கடற்படை தளம் அமைக்கும் திட்டமும் இன்றைய பாரதிய ஜனதா அரசால் சிரத்தையோடு நோக்கப்பட்டுவருகிறது.

சீனாவின் அச்சுறுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்று இவற்றை இந்தியா வெளியே கூறினாலும், அமெரிக்க அச்சுறுத்தலையும் கருத்தில் கொண்டே பாதுகாப்பு வியூகங்களையும், புதிய ஆயுதத் தயாரிப்புக்களிலும் இந்தியா ஈடுபடத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில்தான் கனவாக இருந்த சேது சமுத்திரத் திட்டத்தையும் இந்திய அரசு நனவாக மாற்ற முன்வந்திருக்கிறது.

இலங்கை அரசு தம்மை மீறி அமெரிக்காவுக்கு இங்கு தளம் கொடுக்காது என்ற நம்பிக்கையிலேயே சேது சமுத்திரத் திட்டத்தை இந்திய அரசு கடந்த ஐம்பது வருடங்களாக கிடப்பில் போட்டிருந்தது. அதற்கு முன்னர் இரு நாடுகளுமே தன் பிடியில் இருந்தமையால் பிரிட்டிஷ் அரசும் அத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்திருக்கவில்லை.

இலங்கையில் அமெரிக்கா தளம் காண்பதை நிறுத்துவதே இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக அமைந்திருந்தது.

இலங்கையை சுற்றியே தனது கடற்போக்குவரத்தை நடத்தும் நிலையில், இலங்கை அரசை முற்றாக பகைக்க முடியாத நிலையிலேயே இந்தியா இருந்தாகவேண்டியுள்ளது. அதேசமயம் இலங்கை அரசுக்கும் வர்த்தக நலன்கள் இப் போக்குவரத்தால் கிடைத்து வருகின்றன.

இத்தகைய வர்த்தக நலன் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதாலும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இந்தியா மறுபடி நட்புக் கரம் நீட்டிவிடக்கூடாது என்பதற்காகவுமே இலங்கை அரசு அமெரிக்காவுக்கு தலையையும், இந்தியாவுக்கு வாலையும் காட்டும் வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

இந்தியா அணுக்குண்டு தயாரித்தபோது அமெரிக்கா இந்தியாமீது பொருளாதாரத் தடை விதித்தது. மிக மென்மையான வார்த்தைகளாக தேடிப்பிடித்து இலங்கை அரசு அமெரிக்காவின் செயலை பட்டும்படாமல் விமர்சித்திருந்தது.

இந்தியாவையும் அதிருப்திப்பட வைக்கக்கூடாது, அமெரிக்காவையும் ஆத்திரப்பட வைத்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையுடனேயே இலங்கை அரசு தன் கருத்தைக் கூறியிருந்தது.

இவ்வாறான நிலையில்தான் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் சேது சமுத்திரத்திட்டத்தை கையில் எடுத்திருக்கிறார்.

இந்தியாவின் பாதுகாப்பு நலன், வர்த்தக நலன் என்பவை இத்திட்டத்தில் இருப்பதால், அதனை யாரும் குறைகூறவும் முடியாது. இலங்கைக்கு எதிரானது என விமர்சிக்கவும் இயலாது.

ஆனால், இலங்கை அரசின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள்மீது தனக்குள்ள அதிருப்தியை வெளியே கூறாதிருக்கும் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், சேது சமுத்திர திட்டத்தை உயிர்கொடுப்பது மூலம் இலங்கை அரசுக்கு பலத்த வருவாய் இழப்பொன்றை ஏற்படுத்த வழிகோலியுள்ளார்.

ஆயிரத்தி இருநூறு கோடி ரூபாய் சேது சமுத்திரத் திட்டத்துக்கு தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆறு ஆண்டுகளுக்குள் இத் திட்டம் பூர்த்தியாகும் என்று கணித்துள்ளனர்.

திட்டம் ஏற்கப்பட்டு, நிதி ஒதுக்கீடும், வேலைகளும் ஆரம்பமாகிவிட்டால் அரசாங்கம் மாறினாலும் பணிகள் தொடர்ந்து நடக்கக்கூடியதாகவிருக்கும்.

பாரதிய ஜனதா அரசும், பிரதமர் வாஜ்பேயும் இத் திட்டத்தை ஏற்றபின்னரே, அது பற்றி வெளியே பிரஸ்தாபித்துள்ளார் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ்.

இலங்கை அரசுடன் அண்மையில் வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் இந்தியா கையெழுத்திட்டது. அதேசமயம் இலங்கையின் வர்த்தக நலனை பாதிக்கக்கூடிய சேது சமுத்திர திட்டத்தையும் இந்தியா கையிலெடுத்துள்ளது.

வர்த்தக உடன்படிக்கையில் பிரதமர் வாஜ்பேயி கையெழுத்திட்டதால், இலங்கை அரசை இந்தியா முழுமையாக நம்புகிறது என்ற வாதம் இதன் மூலம் அடிபட்டுப்போயிருக்கிறது.

சேது சமுத்திர கால்வாயின் மொத்த நீளம் சுமார் 100 கடல் மைல்கள். (ஒருகடல் மைல் 1.85 கிலோ மீட்டர்) இதனை 31 முதல் 37 அடிவரை ஆழமாக்கப் போகிறார்கள். இரண்டு கட்டமாக இத் திட்டம் நிறைவேறும்.

இத் திட்டம் நிறைவேறினால் இலங்கையின் கொழும்பு, காலி துறைமுகங்களின் வருவாய் பலத்த பாதிப்புக்கு உள்ளாகும்.

யாழ் குடாநாட்டிலுள்ள காங்கேசன் துறைமுகத்தை நவீனப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

சேது சமுத்திர கால்வாய் வழியாக செல்லும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கைக்கான வர்த்தக பொருட்களை கொழும்பில் இறக்குவதைவிட, அக்கால்வாய்க்கு அருகிலுள்ள காங்கேசன் துறைமுகத்தில் இறக்கிவிட்டுச் செல்வதே சுலபமாக இருக்கும்.

வடபகுதியில் உள்ள துறைமுகத்தை கேந்திர முக்கியத்துவம் உள்ளதாக நவீனமயப்படுத்த இலங்கை அரசு முன்வருமா? என்பது கேள்விக்குரிய ஒன்றேயாகும்.

எவ்வாறு இருப்பினும் சேது சமுத்திரத் திட்டம் இலங்கை அரசுக்கும், அதன் தென்னிலங்கை துறைமுகங்களுக்கும் பாரிய இழப்பையே ஏற்படுத்தப்போகிறது.

இத்திட்டத்தை கைவிடுமாறு இலங்கை அரசு கோருவதும் முடியாத காரியம். இதுவரை காலமும் இந்திய அரசுகள் இத்திட்டத்தையிட்டு மெத்தனமாக இருந்தமையால் இலங்கை அரசே பலன் அடைந்து வருகிறது.

ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் ஒரு கல்லில் பல மாங்காய்களை குறிவைத்திருக்கிறார் என்பது இலங்கை அரசுக்கும் தெரிந்திருப்பினும், அதனை வெளிப்படையாக கூறமுடியாது.

ராமர் விட்ட ஒரே ஒரு அம்பு ஏழு மரங்களை சாய்த்தது என்று இராமாயணக்கதையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர், ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தொடுத்துள்ள சேது சமுத்திரத்திட்டம் என்னும் அம்பும் பல இலக்குகளை குறிவைத்தே எய்யப்பட்டுள்ளது.

## அலசுவது- இராஜதந்திரி

## நாம் தமிழர் இயக்கமும் சேது சமுத்திர திட்டமும்

"உலகத் தமிழரே ஒன்று சேருங்கள்!" என்று குரலெழுப்பியவர் 'தமிழர் தந்தை' என்றழைக்கப்பட்ட சி.பா. ஆதித்தனார் அவர்கள், தமிழர்களுக்கென்றோர் தனி நாடு அமைக்க வேண்டும்; உலகனைத்தும் செறிந்து வாழும் தமிழ் மக்களனைவருக்கும் வழிகாட்டியாக தமிழ் நாடு இருக்க வேண்டும் என்று பறைசாற்றினார்.

இந்தியாவிலுள்ள தமிழ் நாடு மாநிலத்துடன் தமிழ ஈழத்தையும் இணைக்க வேண்டும் என்பது அவருடைய திட்டம். தமிழ் நாடும் இலங்கையின் வடபகுதியும் இணைந்தால் வர்த்தகத்துறையில் பெரும் சாதனைகளை நிலை நாட்டலாம் என்று முழங்கினார்.

இந்த இலட்சியத்தை நிலை நாட்டவே 'தினத்தந்தி', 'மாலை முரசு' ஆகிய காலை மாலைத் தினசரிப் பத்திரிகைகளைத் தொடங்கினார். 1960ம் ஆண்டுகளில் அனைத்திந்தியா முழுமைக்கும் ஆகக்கூடுதலாக விற்பனையாகும் தினசரிகள் என்ற இடத்தை இவை கைப்பற்றியிருந்தன.

உலகனைத்துமுள்ள தமிழின மக்களை ஒன்றிணைப்பதற்காக 'நாம் தமிழர்' இயக்கம் என்ற அமைப்பை நிறுவினார்.

பெரியார் ஈ.வே.ரா., தமிழறிஞர் கி.ஆ.பெ.விஸ்வநாதம் ஆகியோரும் நாம் தமிழர் இயக்கத்துக்கு ஆதரவளித்தனர்.

'தினத்தந்தி' பத்திரிகையில் 1958ம் ஆண்டின் மத்தியில்-முன் பக்கத்தில் ஒரு கார்டூண் (கருத்துப்படம்) வெளியாகி இருந்தது. அதில் தமிழ் நாட்டில் ஒரு காலும் இலங்கையின் வடக்கில் மறுகாலும் ஊன்றிய வண்ணம் (தமிழர்) ஒருவர் குனிந்து நிற்கிறார்.

அவரின் கீழ்ப்புறத்தே-சேது சமுத்திரத்தினூடாக பல அந்நிய நாட்டுக் கப்பல்கள் போய்க் கொண்டிருக்கின்றன.

இக்கப்பல்களில் வருவோர் அமெரிக்க டொலர் முட்டைகளையும் பிரிட்டிஷ் பவுண் முட்டைகளையும், குனிந்து நிற்கும் தமிழரின் கைகளில் கொடுத்து விட்டுச் செல்கின்றனர்.

'தமிழ் நாடு தனி நாடானால், சேது சமுத்திரத்திட்டம் அமுல் நடத்தப்படும் அவ்வாறானால் அந்நிய நாட்டுக் கப்பல்கள் வீணாக இலங்கையைச் சுற்றிவளைத்துக் கொண்டு போகாமல், பாக்கு நீரிணைக்கு ஊடாகப் பயணம் செய்யும். தமிழ் நாட்டுக் கரையோரத்துறைமுகங்களும் வட இலங்கைத் துறைமுகங்களும் அந்நிய நாட்டுச் செலாவணியை கூடுதலாகப் பெறும் வாய்ப்புக்கிட்டும்!'

இக்கருத்தை உணர்த்துவதாக அக்கார்டூண் அமைந்தது.

இந்தக் கார்டூண் அப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

### புலி எதிர்ப்பு — அரசு ஆதரவு

### பெருமாள் வருகை

வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள் நாடு திரும்பியிருக்கிறார். எட்டு வருட காலமாக எட்டத்தில் உள்ள ராஜஸ்தான் மாநிலத்தில் அஜ்மீரில் இருந்தார்.

அங்கிருந்தபோதும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்பை வைத்திருந்தார்.

இந்தியப் படை காலத்தில் உச்சிக் கொம்பில் இருந்த கட்சி, இப்போது துரும்பாக இளைத்துக் கிடக்கிறது. கட்சி உறுப்பினர்கள் பலர் இந்தியாவில் அகதி முகாம்களில் கந்தல் துணிகள்போல கசங்கிக் கிடக்கின்றனர்.

பலர் கூலிவேலை செய்து தங்கள் குடும்பங்களை காப்பாற்றுகிறார்கள். அப்படியும் வறுமைதான்.

இந்த உறுப்பினர்களையிட்டு கட்சித் செயலாளர் சுரேஸ் கவனம் செலுத்துவதில்லை என்ற குறை இருந்து வருகிறது.

உறுப்பினர்கள் பலர் ஈ.பி.டி.பி., புளொட் போன்ற அமைப்புகளுக்கு சென்றுவிட்டனர். கட்சி தங்களை கைவிட்டுவிட்டது என்று குற்றம் சாட்டுகின்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். பேச்சாளராகவும், மத்திய குழு உறுப்பினராகவும் இருந்தவர் கேதீஸ் லோகநாதன். கட்சிச் சொத்துக்களை பொதுவாக்கி அறக்கட்டளை ஒன்றை நிறுவவேண்டும். கணக்குகள் காட்டப்பட வேண்டும். நிதிப் பொறுப்பை செயலாளரே வைத்திருக்காமல் இன்னொருவரிடம் தரவேண்டும் என்று வாதாடினார். அதற்கு சுரேஸ் இணங்க மறுத்ததால் கட்சியை விட்டே வெளியேறினார்.

இந்தியா, கொழும்பு, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் பல கோடி ரூபாய்களுக்கு சொத்து இருக்கிறது. இந்திய அரசு கொடுத்த பணத்தில் ஒரு பகுதியை வைத்து வாங்கப்பட்ட சொத்துக்களே அவை. எனினும் தனியார் பெயர்களிலேயே அவை வாங்கப்பட்டன.

வடக்கு-கிழக்கு மாகாணசபை நிதியமைச்சராக இருந்த கிருபாகரன் பல சொத்துக்களை வாங்கியிருந்தார். கொழும்பிலும் அவர் பெயரில் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்து இருக்கிறது. கிருபாகரன் உயிரோடு இல்லாததால் அச் சொத்தை விற்பனை செய்வதில் சட்டச்சிக்கல்கள் தோன்றியுள்ளன.

கட்சிக்கு என்று பொதுவான அறக்கட்டளை நிறுவி, அதன் பெயரில் இவற்றை வாங்கியிருந்தால் இன்று சட்டச் சிக்கல்கள் எழுந்திருக்காது. எனவே தற்போது சுரேஸ் பெயரில் உள்ள கட்சிச் சொத்துக்களையும், பணத்தையும் அறக்கட்டளை அமைத்து பொதுவாக்க வேண்டும் என்ற கோரிக்கை ஈ.பி.ஆர்.எல்.எஃப்.க்குள் எழுந்துள்ளது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் விழுந்த வாக்குகளில் 13 சத வீத வாக்குகளே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.க்கு கிடைத்தது.

இதன் பின்னரே வரதராஜப் பெருமாளை எப்படியாவது இங்கு வரவழைப்பது என்று சுரேஸ் தவிர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் முடிவு செய்தனர். முக்கிய உறுப்பினர்கள் சிலர் இந்தியா சென்று பெருமாளுடன் பேசினர்.

யாழில் 13 சதவீத வாக்கு கிடைத்ததே பெரிய காரியம். நீங்கள் வந்து வேலை செய்தால் அடுத்த பொதுத் தேர்தலில் சில ஆசனங்களாவது கிட்டும். எமக்கும் உற்சாகமாக இருக்கும் என்று அழைத்திருக்கின்றன.



வரதராஜப் பெருமாள்

யோசித்துக் கூறுவதாக அவர்களை அனுப்பிவைத்த பெருமாள், புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக இலங்கை அரசுடன் தொடர்பு கொள்ள முயன்றிருக்கிறார். இரண்டு அமைச்சர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

இக் கட்டத்தில்தான் ஒரு திருப்பம் ஏற்பட்டது. வை.பி.சில்வா மரணத்தால் பொதுஜன முன்னணியில் எம்.பி. வெற்றிடம் ஒன்று ஏற்பட்டது.

வரதராஜப் பெருமாளுக்கு அப் பதவியை பெற்றுக் கொடுக்க ஒரு அமைச்சர் முயற்சித்திருக்கிறார்.

'ஜனாதிபதி இந்தியா வருகிறார். அவரைச் சந்தித்து பேச முயற்சியுங்கள்' என்று பெருமாளுக்கு தகவல் தரப்பட்டது. அதன்படி பெருமாளும் முயன்றிருக்கிறார்.

'பெருமாள் இந்தியாவில் இல்லை' என்று ஜெயின் கமிஷன் முன்பாக கூறவிட்டதால், இந்தியாவில் வைத்து ஜனாதிபதி சந்திரிக்காவை சந்திக்க அனுமதிக்க இயலாது என்று இந்திய அதிகாரிகள் மறுத்து விட்டனர். இவ்விடயம் இலங்கை தூதரகம் ஊடாக ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், அதனையடுத்து இந்திய அதிகாரிகளுடன் பேசிய ஜனாதிபதி, பெருமாளை அவர் விரும்பினால் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு கோரியதாக தெரிகிறது.

இதனையடுத்தே பெருமாளை கொழும்புக்கு அனுப்பும் ஏற்பாடுகள் துரிதகதியில் நடந்தன. இந்தியாவிலிருந்து அதன் நெருங்கிய நட்பு நாடொன்றுக்கு கொண்டு சென்று அங்கிருந்தே கொழும்புக்கு அனுப்பி வைத்தனர்.

விமான நிலையத்தில் வி.ஐ.பி.க்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதியூடாகவே பெருமாள் வந்தார். முன்கூட்டியே அவர் வரும் தகவல் விமானநிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கூறப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபை தேர்தல் முடியும்வரை அமைதியாக இருக்க வேண்டும். தேர்தல் முடிந்த சூட்டோடு எம்.பி பதவி வெற்றிடம் நிரப்பப்படலாம். ஆகவே ஜனாதிபதியை சந்திக்க வேண்டிவரும். தயாராக இருக்கவும். தேர்தல் முடிந்ததும் பகிரங்கமாக தோன்றலாம், என்றும் குறிப்பிட்ட அமைச்சர் ஒருவரால் கூறப்பட்டதாம்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற குழுக்களுக்குள் இரகசியங்களைப் பாதுகாப்பது நடக்கிற காரியமா? பெருமாள் வந்த தகவல் உடனடியாக வெளியாகியது. ஆனால் இதில் ஆச்சரியம் என்னவென்றால், கட்சியின் செயலாளர் சுரேசுக்கு பெருமாள் வந்த விடயம் நான்கு நாட்களாக தெரியவே இல்லை. அவர் மறுத்தது மட்டுமல்லாமல், பத்திரிகைகள் பிழையான தகவலை எழுதுவதாக பி.பி.சிக்கு பேட்டியும் கொடுத்து மூக்குடைந்து போனார்.

பெருமாளின் உடனடித் திட்டங்கள் பின்வருமாறு:

1) கட்சித் தலைமையை ஏற்று அடுத்த தேர்தலுக்கு கட்சியைத் தயார்படுத்துவது.

2) எம்.பி.பதவியை அரசிடம் வாங்கி, அதனை ஒரு அங்கீகாரமாக பயன்படுத்துவது.

3) கட்சி சொத்துக்களை பொதுமைப்படுத்துவது.

கட்சியைவிட்டு விலகியுள்ள கேதீஸ் லோகநாதன் போன்றோரை மறுபடி கட்சிக்குள் கொண்டு வரும் எண்ணமும் பெருமாளுக்கு உண்டாம்.

புலி எதிர்ப்பு, அரசிற்கு முழு ஆதரவு என்ற கொள்கைகளை முன்வைத்தே தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தப் போவதாக பெருமாள் கூறியுள்ளாராம்.

"நிதி பற்றியோ, அரசின் உதவிகள் பற்றியோ யோசிக்கவே தேவையில்லை. அவை தாராளமாக கிடைக்கும்" என்று தன் உறுப்பினர்களிடம் கூறி வருகிறாராம்.

ஆனால் வரதராஜப் பெருமாள் என்றதும் இந்தியப் படைகால நினைவுகள் மக்கள் மனதில் எழப்போவதுதான் பெருமாளுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப்.புக்கும் தலைவலியாக இருக்கப்போகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

## உண்மைத் தொடர்
## அதிர் இடி 46

**கடந்தவாரம்**

**வெளிநாட்டமைச்சராக எலிஜபெத் பகாயாவை நியமித்த அமீன் அவளை அடைய ஆசைப்படுகிறான். பகாயா அமீனை ஏமாற்றி தப்பிக்க திட்டம் போடுகிறாள். ஐ.நா. சபையில், உகண்டாவில் மனித உரிமை மீறல்கள் கிடையாது என்று உரையாற்றிவிட்டு நாடு திரும்புகிறாள்.**

இனி....

எலிஸபெத் பகாயா நாடு திரும்பியதும் அமீன் உடனடியாக அழைப்பு விடுத்தான். ஆனாலும் பகாயா ஓய்வு எடுத்து தாமதித்தே சென்றாள்.

பகாயா எதிர்பாராதவிதமான வரவேற்பு அமீனின் அலுவலகத்தில் காத்திருந்தது. பகாயாவை திக்குமுக்காடச் செய்ய வேண்டும் என்பதற்காக அமீன் செய்த ஏற்பாடுதான் எல்லாம் என்பது பகாயாவுக்குத் தெரியும்.

அமீன் தன்னை வேட்டையாட மிக ஆவலாக உள்ளான் என்பதை உணர்ந்து, அதற்கேற்ப எப்படி நடந்து கொள்வது என்பதையும் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

அமீனின் பிரமாண்டமான அலுவலக அறைக்குள் புகுந்ததும், அமீன் முகமெல்லாம் பல்லாக அவளை வரவேற்றபடி எழுந்து வந்தான்.

பகாயாவுக்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது. உஷாரானாள். ஒப்புக்காக புன்னகைத்தாள். அடுத்து அமீன் என்ன செய்யப்போகிறானோ? என்று படபடப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள்.

நெருங்கிவந்த அமீன் அவளை ஆரத் தழுவினான். மரியாதை கலந்த தழுவல் என்பதால் மறுக்கவும் முடியவில்லை. மறுப்பது புத்திசாலித்தனமும் இல்லை என்பதால் அனுமதித்தாள்.

கன்னத்தில் முத்தமிட்ட அமீன், அவள் அதற்கு அனுமதித்ததை இணக்கமாக கருதி, அவள் முகத்தை தன் இரு கைகளிலும் ஏந்தினான்.

அடுத்த வினாடியே அவளின் மென்மையான இதழ்கள் அமீனின் முரட்டுத் தனமான உதடுகளால் கவ்வப்பட்டன.

பகாயா திமிறியிருக்கலாம். தன் முகத்தை பின்னே இழுத் திருக்கலாம். திமிறவில்லை. இழுக்கவில்லை.

அவள் மரக்கட்டைபோல நின்றாள். அவள் முதுகை வருடிய அமீனின் கரம், அப்படியே கிழிறங்கிறது.

"இங்கு வேண்டாம். இன்றுவேறு நான் களைப்பாக இருக்கிறேன்" என்றாள் பகாயா.

"வேறு எங்கு வேண்டும்?" என்றான் கையை அகற்றாமலேயே.

பகாயா அவனுக்கு நம்பிக்கை தரும் விதமாக உற்சாகமாகப் பேசினாள்.

"செக்ஸ் என்பது தாகத்திற்காக அவசரத்தில் தண்ணீர் குடிப்பதுமாதிரி இருந்தால் சுவையாக இருக்காது. சுகமாகவும் இருக்காது. செக்ஸ் அணு அணுவாக ரசனையுடன் ரசனையான பொழுதொன்றில் வெகு இயல்பாக அனுபவிக்க வேண்டியது!" என்றாள்.

என்றவள், இன்னொன்றையும் சொன்னாள்.

"எனக்கு ஆண்கள் இப்படி அவசரப்படுவது பிடிக்காது!"

சட்டென்று அவளைவிட்டு விலகினான் அமீன். "நான் இதுவரை சந்தித்தவர்களில் வித்தியாசமான பெண் நீதான்!" என்றான்.

"வித்தியாசமாக இருக்கத்தான் எனக்கு விருப்பம்!" என்றாள்.

தன் கதிரையில் சென்று அமர்ந்துகொண்ட அமீன், அவளை அமருமாறு கைகாட்டியபடியே, "மிக மென்மையான இதழ்கள். அதற்கு நேர்மாறான மிகக் கடினமான இதயம்" என்று சிரித்தான்.

"பெண்களை மென்மையானவர்கள் என்று எண்ணித்தான் ஆண்கள் பலர் ஏமாறுகிறார்கள். தம் இஷ்டம் போல ஆட்டுவிக்கிறார்கள்." என்றாள்.

"அந்தப் பலரில் நானும் உண்டா?" என்று கேட்டான் அமீன்.

"இல்லை" என்று கடைந்தெடுத்த பொய் கூறிச் சிரித்தாள்.

அந்தப் பொய்யை இன்பமாக இரசித்தான் அமீன்.

"ஐ.நா.சபையில் எமது நாட்டுக்காக நீ ஆற்றிய சேவைக்காக நன்றி. என் நம்பிக்கையை காப்பாற்றிவிட்டாய். உகண்டாவின் எதிரிகள் முகத்தில் கரி பூசி விட்டாய்" என்று புகழ்ந்தான்.

"என் கடமைதானே அது. உங்கள் புகழ்ச்சிக்கு நன்றி" என்றாள் பகாயா.

பகாயாவின் நாகரிகமான பேச்சும், புத்திசாலித்தனமும் அமீனை கவர்ந்து விட்டது. அவளைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும்போன்று இருந்தது.

தன் மனதில் உள்ளதை அவளிடம் மறைக்காமல் கூறிவிட நினைத்தான். "பகாயா! உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. என் மனம் முழுக்க நிரம்பிக் கொண்டிருக்கிறாய்" என்றான்.

பேச்சு விபரீதமான திசைக்கு செல்வதை உணர்ந்த பகாயா, அமீனை திசை திருப்புவதற்காக, "முன்னாள் வெளிநாட்டமைச்சரின் மரணம் தொடர்பாகத்தான் ஐ.நா.சபையில் பலரும் விசாரித்தனர். அநேகமானோர் சந்தேகப் பார்வையோடு தான் கேட்டனர்" என்றாள்.

"நீ அவர்களுக்கு என்ன பதில் கூறினாய்?" என்று கேட்டான் அமீன்.

"ஆர்ப்பாட்டக்காரர்கள் கொன்று விட்டனர் என்று சொன்னேன்!" கூறிவிட்டு அமீனின் முகத்தை உற்று நோக்கினாள்.

"பொய் சொன்னதற்கு நன்றி. அழகான பெண்கள் பொய் சொன்னால்கூட செவியில் ஏறுகிறது. என்னை மாதிரி ஆண்கள் உண்மை சொன்னாலும் எவரும் நம்ப மறுக்கிறார்கள்" கட கடவென்று சிரித்தான் அமீன்.

"பொய்யா? என்ன பொய்?" என்றாள் ஒன்றும் தெரியாததுபோல.

"அழகான பெண்கள் பொய் கூறலாம். அழகான பெண்களிடம் பொய் கூறக்கூடாது" என்று சிரித்தவன் சொன்னான்: "முன்னாள் வெளிநாட்டமைச்சர் மைக்கேல் ஒண்டேகாவை கொன்றது நான்தான். திமிர் பிடித்தவன் அவன். இந்த அமீனை பகைத்



துக்கொண்டு உயிர் வாழலாம் என்று தப்புக் கணக்கு போட்டான். அவன் கணக்கையே முடித்துவிட்டேன்" என்று சிரித்தான். பயங்கரமான கொலைகாரச் சிரிப்பு.

பகாயாவுக்கு முன்னரே தெரியும் என்றாலும், புதிதாக அறிந்து கொள்வதுபோல ஆச்சரியக்குறி காட்டினாள். அவள் ஆச்சரியப்படும் அழகை உள்ளூர இரசித்தான் அமீன்.

அவளுக்கும் தன்னிடம் ஒரு பயம் இருக்க வேண்டும் என்பதற்காகவே அமீன் அந்த உண்மையைச் சொன்னான். பகாயா விடைபெறும் போது அமீனுக்கு இன்னொரு தடவை அவளை முத்தமிட வேண்டும் போலிருந்தது.

அமீன் எழுந்தபோது, திடீரென்று பகாயா அந்தக் கோரிக்கையை தூக்கிப் போட்டாள்.

"என் குடும்பத்தினருக்கு நீங்கள் பாதுகாப்பளித்ததுக்கு நன்றி. ஆனாலும் பாதுகாப்பு இருப்பது அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்துகிறது. அதனால் பாதுகாப்பு வேண்டாம் என்று நினைக்கிறேன்." என்றாள்.

"அப்படியா?" என்ற அமீனுக்கு அவளை முத்தமிடும் அவசரம். தன் மேசையில் இருந்த தொலைபேசியில் எண்களை சுழற்றினான்: தொடர்பு கிடைத்ததும், "வெளிநாட்டமைச்சர்



மாண்புமிகு பகாயா வீட்டிற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை உடனடியாக விலக்கிக் கொள்ளுங்கள். தேவை ஏற்பட்டால் நான் சொல்கிறேன்!" என்றான்.

பகாயாவுக்கு தன் திட்டங்கள் பலிப்பதை நினைக்க உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது. மாட்டுப்பட்டுக் கொண்டால் அமீன் மிருகமாகி விடுவான் என்பதை நினைக்க பயமாகவும் இருந்தது.

அவள் அருகே வந்துவிட்ட அமீன், "இதற்கு மட்டும் அனுமதி உண்டுதானே, நீ கூறிய தினம்வரை உன் நினைவாக இருக்க வேண்டாமா? அதற்குத்தான்!" என்றபடி அவள் இதழ்களை தன் உதடுகளால் இம்சித்தான்.

பகாயா வெட்கப்படுபவள்போல விலகிக் கொண்டாள். வீட்டுக்குச் சென்றதும் முதல் வேலையாக வாயைக் கழுவவேண்டும் என்று நினைத்தாள். இரத்தம் குடிக்கும் பிசாசு என்றே அமீனைப் பற்றிய அவளது மதிப்பீடு இருந்தது.

அமீனுக்குத் தன்மீது நம்பிக்கை ஏற்பட்டு விட்டதால், தனது குடும்பத்தினருடன் நாட்டைவிட்டு தப்பியோடுவதற்கான ஏற்பாடுகளை மிக இரகசியமாக மேற்கொண்டாள் பகாயா.

கென்யா நாட்டின் முக்கியமான அமைச்சர் ஒருவருடன் தொடர்பு கொண்டாள். புகலிடம் தருமாறு பகாயா விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டது கென்யா அரசாங்கம்.

அமீன் முட்டாளல்ல. தன்னை நம்புவது போல நாடகமாடிக்கொண்டு இரகசியமாக கண்காணிக்கவும்கூடும் என்று பயந்தாள்.

அதனால் தொடர்ந்து ஒருவார காலமாக வெளிநாட்டமைச்சு பணிகளில் மூழ்கியது போல நடித்துக் கொண்டிருந்தாள்.

அமீன் ஒருநாள் தொலைபேசியில் அழைத்து, "பகாயா, உன் கடமை உணர்ச்சி என் பொறுமையைச் சோதிக்கிறது. எப்போது நாம் அந்த இரசனையான தினத்தை அனுபவிப்பது?" என்று குழைந்தான்.

மேலும் நாட்களை இழுத்துக் கொண்டிருந்தால் அமீனுக்கு சந்தேகம் வரும் என்பதால், கென்யாவுக்கு தப்பிச் செல்லும் ஏற்பாடுகளை செய்த பகாயா ஒருநாள் நள்ளிரவு தன் குடும்பத்தினரை நாட்டைவிட்டு அனுப்பி வைத்தாள்.

அதற்காக இராணுவ அதிகாரி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் இலஞ்சமாக கொடுக்கவேண்டியிருந்தது.

மறுநாள் நள்ளிரவு பகாயா தனியாகப் புறப்பட்டு, அந்த இராணுவ அதிகாரியின் காரிலேயே எல்லைவரை சென்றாள்.

அந்த இராணுவ அதிகாரி இராணுவ எல்லைப் பாதுகாப்பு படையில் உயரதிகாரி. அமீனின் பெயரைக் கூறிக்கூறியே இலஞ்சத்தில் திளைத்தவர்களில் ஒருவர்.

எல்லையில் கெடுபிடிகளை அதிகரிக்குமாறு அமீனுக்கு ஆலோசனை கூறுவார்.

அவ்வாறு கெடுபிடிகள் அதிகமானதால் சாதாரண பயணிகள்கூட இராணுவ அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்தால்தான் எல்லைகளை கடக்க அனுமதிக்கப்படுவர்.

தாம் உழைப்பதற்காகவே எல்லைப்புறத்தில் போக்குவரத்து கெடுபிடிகளை இராணுவ அதிகாரிகள் தொடருகின்றனர் என்பது அமீனுக்குத் தெரியாதது அல்ல. "அவர்களும் பிழைத்துக் கொண்டால்தான் இந்த ஆட்சி சொல்கிறபடி கேட்டார்கள். இல்லாவிட்டால் என்னையே கவிழ்த்து விட்டு சம்பாதிக்க நினைப்பார்கள்" என்று தன் செயலாளரிடம் கூறியிருந்தான் அமீன்.

பகாயா நாட்டைவிட்டுப் போய் விட்டதை அறியாத இடி அமீன், அவளது அலுவலகத்திற்கு போன் செய்தான். வரவில்லை என்று தெரிந்ததும் வீட்டுக்கு போன் போட்டான். மணியடித்தபடி இருந்தது. எவரும் எடுக்கவில்லை.

அமீனின் மூளைக்குள் சந்தேகப் பொறி சுட்டியது. தன் பாதுகாவலர்களை பகாயாவின் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, குட்டிபோட்ட பூனைபோல தன் அறைக்குள் அங்குமிங்கும் நடந்து கொடிருந்தான்.

பகாயா வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்கள் திரும்பிவந்தார்கள். "வீடு பூட்டியிருந்தது. உடைத்தோம். எதுவும் இல்லை. எவரும் இல்லை. போய் விட்டனர்" என்றனர்.

இது அமீன் எதிர்பார்த்தது தான். தன்கோபத்தை எப்படி வெளிப்படுத்தலாம் என்று யோசித்தான்.

தன்னை திட்டம் போட்டு ஏமாற்றியவளை பழிவாங்கும் யோசனையாக தன் மூளைக்குள் தேடினான்.

கிடைத்தது. யோசனை. மறுநாள் உகண்டா வானொலி உட்பட சகல செய்தி நிறுவனங்களும் ஒரே செய்தியைக் கூறின.

"உகண்டாவின் வெளிநாட்டமைச்சர் பதவியில் இருந்து எலிஸபெத் பகாயா நீக்கப்பட்டுள்ளார்."

அமைச்சர்கள் நீக்கப்படுவதும், புதிதாக நியமிக்கப்படுவதும் அமீன் ஆட்சியில் மக்களுக்கு புதிய விடயமல்ல. ஆனால் பகாயா பற்றி கூறப்பட்ட குற்றச்சாட்டுத்தான் கொடூரமாக இருந்தது.

அமீனால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தான் அந்தக் குற்றச்சாட்டு கூறப்பட்டிருந்தது.

"நியூயோர்க்கிலிருந்து நாடு திரும்பும் வழியில் பாரிஸ் நகரில் உள்ள கோல் விமான நிலையக் கழிப்பிடத்தில் பாலியல் உறவு கொண்டார் பகாயா. அவருடன் சென்ற அதிகாரி ஒருவரை கட்டாயப்படுத்தியே உறவு கொண்டிருக்கிறார்.

இத் தகவல் கிடைத்ததும் அவரை விசாரணைக்காக அழைத்தேன். குற்றம் நிரூபிக்கப் பட்டுவிடும் என்பதனால் நாட்டைவிட்டு தப்பியோடிவிட்டார்." என்று அறிக்கையில் விளாசியிருந்தான் அமீன்.

(இடி தொடரும்)

## தருவது ரசிகன்

## இறுதி மரியாதை



தந்தை இறந்து விட்டால் இறுதிச் சடங்குகள் செய்து வழி அனுப்புவது மகனின் கடமை ஆகும். ஆனால் இந்த மகன் செய்த கடமை வித்தியாசரகம். இவர் தனது தந்தையின் உடலை மோட்டார் சைக்கிளில் அமர்த்திக் கொண்டு தனியாக ஊர்வலம் சென்றுள்ளார். இச் சம்பவம் டென்மார்க்கில் நடந்தது.

அந்த மகனின் பெயர் டேன் பிளமிங் பீட்டர்சன். இவரது 86 வயது தந்தை இறக்கவே அவருக்கு அழகாக ஆடைகள் அணிவித்து மோட்டார் சைக்கிளில் அமர்த்தினார்.

தந்தையின் கைகளை காற்சட்டை பையில் விட்டபடி தலையில் ஹெல்மட் மாட்டினார். அவர் மகிழ்ச்சியாக இருந்த இடங்களுக்கெல்லாம் மோட்டார் சைக்கிளிலேயே கொண்டு சென்றார். சுமார் 30 கிலோ மீட்டர் பயணம் செய்துள்ளார்.

ஆனால் பலரும் அவர் பிணத்தோடு பயணம் செய்வதை கண்டுபிடிக்கவே இல்லை.

ஒரு கடற்கரையில் தந்தையின் பிணத்தை இறக்கி வைத்து விட்டு அவர் பியர் குடித்தார். தந்தை அருகிலேயும் ஒரு பியர் போத்தலை வைத்தார். பார்த்தவர்கள், இருவரும் பியர் குடிப்பதாகவே நினைத்தார்கள்.

"என் தந்தையை வழியனுப்ப இதைத் தவிர சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை," என்கிறார் பீட்டர்சன். கடைசியில் பொலிஸில் தந்தையின் பிணத்தை ஒப்படைத்தார் மகன்.

## பணம் குப்பையிலே

பணத்தை தண்ணீராகச் செலவழிப்பது என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். குப்பையாக எரிப்பது பற்றி இப்போது கேள்விப்படுங்கள்.

விஞ்ஞானத்தில் சாதனை படைத்த பெண்மணியான மேரி கியூரியின் உருவம் பதித்த புதிய பண நோட்டுக்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. ஃபிரான்ஸ் அரசே மேற்படி பண நோட்டுக்களை வெளியிட்டது. 500 பிராங்க் நோட்டுக்களே வெளியிடப்பட்டன.



ஆனால், 'கிரெடிட் கார்ட்' மூலம் பணம் தரும் இயந்திரத்தினுள் இவைகளை வைத்தால் இரண்டிரண்டு தாள்களாக வர ஆரம்பித்தன. புதிதாக அச்சிட்ட நோட்டுக்கள் மெல்லியதாக இருந்ததே காரணம்.

உடனடியாக புதிய நோட்டுக்கள் அனைத்தையும் குப்பையாகப்போட்டு எரித்தனர்.

அவ்வாறு எரிக்கப்பட்ட நோட்டுக்களை அச்சிட செலவான தொகை சிட்டத்தட்ட 13 கோடி ரூபாய்கள். பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே என்று வருத்தப்படுவோருக்கு இது குட்டிச் சந்தோசமான செய்திதானே!

## ரஜினியின் விடுதி

கோடி கோடியாக ஊதியம் வாங்கும் நடிகர் ரஜினிகாந்த் பணத்தை பல வழிகளிலும் முதலீடு செய்து வருகிறார்.

ஏற்கனவே கல்யாண மண்டபம் கட்டினார். அந்த நவீன கல்யாண மண்டபத்தில் உயர்ந்த கட்டணமே அறவிடப்பட்டு வருகிறது.

தற்போது நவீன சொகுசு விடுதி ஒன்று கட்டியிருக்கிறார். சென்னை கோடம்பாக்கத்தில் 'ஹொட்டல் அருணாச்சல' என்ற பெயரில் இந்த விடுதி 21.01.99 அன்று திறந்துவைக்கப் பட்டது.

பலகோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த விடுதியை ரஜினியின் குருநாதரான இயக்குநர் பாலசந்தர் திறந்து வைத்தார்.

குடும்பத்துடன் சென்று தங்கக் கூடிய முறையில் இரட்டை படுக்கை அறை, சமையல் அறை போன்றவற்றுடன் 23 குடியிருப்புக்களும், எட்டு குடில்களும் இதில் உள்ளன.



அருணாச்சல விடுதி

இதன் திறப்பு விழாவின்போது 'ஓம்' என்ற ஓங்கார ஒலி விடுதி முழுவதும் எதிரொலிக்குமாறு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

## மாத்திரை விளம்பரம்



வயாக்ரா மாத்திரையால் மரணம் ஏற்படலாம் என்று எச்சரிக்கைகள் வெளியானதால், அதனை. பாவிப்போர் தொகை சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் வயாக்ராவை விளம்பரப் படுத்த பல உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன.

ரோம் நகரில் 1998-99ம் ஆண்டின் இலையுதிர்காலம், குளிர்காலம் தொடர்பான ஃபாஷன் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

இக் காட்சியில் தோன்றிய பெண் ஒருவர் ஆணுறை போன்ற மெல்லிய துணியில் ஆடை அணிந்து வந்தார். அந்த ஆடையில் வயாக்ரா மாத்திரையும் பதிக்கப்பட்டு இருந்தது.

இந்த வித்தியாசமான விளம்பரத்தால் பார்வையாளர்கள் பலர் கிறங்கிப் போனார்களாம்.

## குண்டு துளைக்காத கார்

இந்தியாவில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி விளையாடுவதற்கு சிவசேனை கடும் எதிர்ப்புக் காட்டியது. இந்தியப் பிரதமர் வாஜ்பேய் வளைந்து கொடுக்கவில்லை. இறுதியில் எதிர்ப்பைக் கைவிட்டது.

எனினும் இந்தியாவில் ஆடும் பாகிஸ்தான் வீரர்களுக்கு மட்டுமன்றி இந்திய வீரர்களுக்கும், துப்பாக்கிக்குண்டு துளைக்காத கார்கள் வழங்கப்பட்டுள்ளன. இக் கார்களில்தான் மைதானத்துக்கு போய் வருகின்றனர்.

மும்பாயில் சிவசேனை படு வீழ்ச்சி கண்டுவருகிறது. அதிலிருந்து தப்பத்தான் இப்படியான எதிர்ப்புக்கள் என்று ஏனைய கட்சிகள் கூறியுள்ளன.

## நான்தான் வாரிசு

ஜப்பானின் காலஞ்சென்ற பேரரசர் ஹிரோஹிடோவின் மகள் எனக் கூறி 1 கோடி யென், மோசடி செய்த தாக 59 வயதுப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.



மேற்கு ஜப்பான் பகுதியைச் சேர்ந்த இப்பெண்ணின் பெயர் அகிகோ இகேதா. இவர் 1992ம் ஆண்டில் 52 வயது பெண்மணி ஒருவரை அணுகி, தான் மன்னர் ஹிரோஹிடோவிற்கு முறைதவறிப் பிறந்த மகள் என்று கூறி அறிமுகம் செய்து கொண்டார். பின் னா பல்கலைக் கழகம் ஒன்றுக்கு நன் கொடை அளிக்கவுள்ளதால் தனக்குக் கடனுதவி செய்யும்படியும் கோரியுள்ளார்.


"விரைவில் சொத்துக்கள் வரவுள்ளது. வந்ததும் கடனை அடைத்து விடுகிறேன்" என்றும் இவர் கூறியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனால் இகேதாவை பொலிஸார் புதன்கிழமை கைது செய்தனர். இதனிடையே தன் மீது சுமத்தப்பட்ட புகாரை இகேதா மறுத்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## மனித ஏணி

இந்த மனித ஏணியை அமைத்துக் காட்டியவர்கள் இந்திய இராணுவத்தினர்.

இந்திய இராணுவதின பொன் விழாவை முன்னிட்டு ஜனவரி 11ம் திகதி இந்த சாகசம் நிகழ்த்தப்பட்டது. மனிதரை வதைத்தால்தான் தப்பு. வெறுப்பு வரும். இப்படி வளைத்துக் காட்டலாம் தப்பில்லை. வியப்பு வரும்!

## பெரும் கொழுப்பர்

சூடான் நாட்டிலுள்ள 'டிங்கா' இன மக்களிடம் ஒரு வகைப்போட்டி வருடாவருடம் நடைபெறுகிறது. அதிகமான கொழுத்த மனிதர்களுக்கான போட்டிதான் அது. டிங்கா பெண்களும் அதிக 'கொழுப்பர்'களைத்தான் தங்கள் கணவர்களாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

தங்கள் உடலைக் கொழுக்க வைப்பவர்கள் பெரும்பாலும், அவ்வினத்தைப் பொறுத்தவரையில், செல்வந்தர்களாகக் கணிக்கப்படுகின்றனர். அவர்களிடம் பெருந்தொகையான பணம், கால் நடைகள் இருக்கும்.

மாட்டுப்பாலை அதிகமாகக் குடிப்பதால் உடம்பில் கொழுப்பு அதிகரிக்கும். வெறும் பாலை மட்டுமல்ல, அதனுடன் மாட்டின் சிறுநீரையும் கலந்தே பருகுவார்களாம் (உவ்வே வருகிறதா? என்ன செய்வது அவர்கள் பழக்கம் அப்படி)

டிங்கா இனத்தைச் சேர்ந்தவர்தான் இன்றைய உலகப் புகழ்பெற்ற சூப்பர் மொடல் அழகி அலெக்வெக். இவர் ஒரு மண் குடிசையில் பிறந்து வளர்ந்தவர். இலண்டன் மாநகரில் இவருடைய 'மொடலிங்' தொழிலுக்கு நாளொன்றுக்கு சராசரி 16 ஆயிரத்தி 600 டொலர். (சுமார் 11 இலட்சத்து 28 ஆயிரத்தி 800 ரூபா வழங்கப்படுகிறதாம்) தான் சார்ந்த இன மக்கள் தமது பாரம்பரிய வழக்கத்தைக் கைவிடாமல் தொடர்ந்து பேணுவதற்காக (தேகத்தை வளர்ப்பது) தனது உறவினர்களுக்கு தனது வருமானத்தில் ஒரு பகுதியை அனுப்பிவருகிறாராம்.



'அதிக கொழுப்பானவர்' போட்டியில் கலந்து கொள்ளும் ஒரு போட்டியாளர், தனது கொழுத்த உடம்பை அசைப்பதற்கு ஊன்றுகோலின் உதவியை நாடுகிறார் பாருங்கள். கோல் தாங்குமா?

## உயர வாழை



"என் வீட்டுத் தோட்டத்தில் மட்டும் வேறு எங்குமில்லாத உயர வாழைக் குலை பாருங்கள்" என்று பூரிக்கிறார்.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் ஆயஞ்சேரி என்னும் இடத்தில் உள்ள தோட்டத்தில் இந்த உயர வாழைக் குலை பிரசவமாகியுள்ளது. பூரித்து நிற்கும் விவசாயியின் பெயர்: நாணு.

## அவருக்கு கால் அழகு



யானைக் கால் நோயாளிகளுக்கு சதாரணமாக கால்கள் பெரிதாக இருக்கும். இவ்வியாதி இல்லாத எவருக்கும் கால்களோ பாதங்களோ பெருப்பதில்லை. ஆனால் அதற்கு விதிவிலக்கும் உண்டு. அதுதான் ஆச்சரியம்.

அமெரிக்க பென்சில்வேனிய மாநிலம் வெசசெஸ்டர் நகரில் வசிக்கும் மத்தியு மக்ரோரி என்பவருக்கு சிறு வயதிலிருந்தே அவருடைய பாதங்கள் மட்டுமல்ல தோற்றமும் வளரத் தொடங்கிவிட்டது. இப்பொழுது 25 வயதாகிறது. 2.29 மீட்டர் (7 அடி 6 அங்குலம்) உயரம் வரை வளர்ந்துவிட்டார்.

மத்தியுவின் பாதங்களுக்கெனப் பிரத்தியேகமாக சப்பாத்துக்களை 'கொன்வேஸ்' என்ற நிறுவனம் தயாரித்துக் கொடுக்கிறது.

அமெரிக்க அளவுப்படி இச்சப்பாத்தின் அளவு 28. நமது நாட்டு அளவின்படி 28 1/2.

மத்தியுவின் தாயாரான திருமதி மௌரீன் மக்ரோரி-டாசே என்பவர்தான் இவருக்கான காலுறைகளைத் தன் கைகளினாலேயே பின்னுகிறார்.

மத்தியுவின் பாதத்தின் அளவையும் பாதணியின் அளவினையும் படங்களில் காண்கிறீர்கள். உலக சாதனைப் பாதமாக இன்றுவரை இருப்பது மத்தியுவின் பாதம்தான்.



## பெரிய வாசிப்பு

புல்லாங்குழலை வாசித்து கேட்போரை பிரமிக்கவைத்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் காதுக்கின்பம் கொடுத்தவர்கள்.

காதுக்கும், கண்களுக்கும் ஒரு சேர இன்பம் கொடுத்த புல்லாங்குழல் சாதனையாளர் இவர்தான். இதுவரை உலகில் எங்கும் இல்லாதளவு மிக நீளமான புல்லாங்குழல் இது. இதனை உருவாக்கி வாசித்துக் காட்டுபவர் தினேஷ் சாண்டில்யா. இந்தியாவைச் சேர்ந்தவர். பொறியியலாளராக இருக்கிறார். எந்தப் பெரிய புல்லாங்குழலானாலும் சுலபமாக வாசித்து அசத்தும் புதிய உத்தியை கண்டுபிடித்துள்ளதாகக் கூறுகிறார் சாண்டில்யா.

இதன் நீளம் 5 அடி. சுற்றளவு 3.5 அங்குலம். கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற விண்ணப்பித்திருக்கிறார். புல்லாங்குழலா புல்'லோங்'குழலா?



## வசூல் மழை



ஹொலிவுட் திரைப்பட நிறுவனமான 'வோர்ணர் பிரதேர்ஸ்' 1989ம் ஆண்டு 'பாற்மான்' (வௌவால் மனிதன்) என்றொரு திரைப்படத்தை வெளியிட்டது.

இப்படத்தைத் திரையிடுவதற்கான அனுமதிப் பத்திரங்கள் விற்பனை செய்வதில் மட்டும் இந் நிறுவனம் 5 கோடி டொலரை வசூலித்தது. (340 கோடி ரூபாய்கள்)

இப்படத்தின் மூலம், மேற்படி தொகையைத் தவிர 25 கோடி டொலர் படம் பார்ப்பவர்களிடமிருந்து கிடைத்துள்ளது. (1700 கோடி ரூபாய்) இது உலக சாதனையாக அப்போது பதியப்பட்டது.

இதே 'வோர்ணர் பிரதேர்ஸ்' நிறுவனம் 'பாற்மான் அண்ட் ரொபின், என்றொரு படத்தை 1997ல் வெளியிட்டது. அப்படத்தில் வௌவால் மனிதனாக வேடம் புனைந்துள்ள ஜோர்ஜ் குளூனியின் தோற்றம் இது.

## தொப்பியோடு மட்டும்

பல்வேறு நாடுகளிலும் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்குச் சிகரம் வைத்தாற்போல் பிரிட்டனில் ரோயல் அஸ்கொட் குதிரைப் பந்தயங்கள் வருடாவருடம் நடைபெறும். தொடர்ந்து 4 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றியீட்டும் குதிரைக்கு தங்கக் கோப்பை பரிசு வழங்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 1997 ஜூன் மாதத்தில் நடைபெற்ற ரோயல் அஸ்கொட் பந்தயத்தின் மூன்றாவது நாளன்று 77 ஆயிரத்தி 543 பேர் கலந்து கொண்டனர். குதிரைப் பந்தயப் போட்டியில் இது ஒரு உலக சாதனை.

அன்றைய தினம் தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பிரத்தியேகப் பகுதிக்குள் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தங்கள் வசீகரமான தொப்பிகளுடன் காணப்படுகின்றனர். இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் சகல பெண்களும் தொப்பி அணிந்திருக்க வேண்டும் என்பது அவசியமாம்.

தொப்பியோடு மட்டுமே பெண்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி இது என்பதால், இதனையும் உலக சாதனையாக பதிவு செய்துள்ளனர்.



தகவல் பெட்டி


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் (88)

# வாய்ப்புக்கள் வந்து குவிந்தன

## அனுமதி மறுத்த எம்.ஜி.ஆர்.

தமிழ்நாட்டிலிருந்து மயன்

இப்போது முன்னணியில் உள்ள நடிகைகளில் ஒருவர் அவர். தமிழ்ப்பட உலகுக்கு வந்த புதிதில் அவரது அனுசரிப்பான போக்கால் படங்கள் குவிந்தன.

படப்பிடிப்பின்போது கதாநாயகர்களையும், இயக்குநர்களையும் தொட்டுப் பேசுவார். காட்சிகளில் இயக்குநர் எதிர்பார்ப்பதற்கும் மேலாக நாயகனை நெருங்கி நடிப்பார்.

அவரின் தாராளமான கொள்கையால் பயன் அடைந்தோர் பலர். ஆனாலும் பசை அதிகமாக இருக்கும் நட்சத்திரங்களுடன் மட்டுமே ஆழமாக நெருங்குவார். ஏனையோருடன் தொட்டுப் பேசுவதுடன் நிறுத்திக் கொள்வார்.

நான்கெழுத்து இளம் நடிகரும் மூன்றெழுத்து இளம் நடிகர்கள் இருவரும், ஆறெழுத்து முன்னணி நடிகர் ஒருவரும் நடிகையின் வலையில் வீழ்ந்து படாதபாடு பட்டனர்.

அதிலும் இரண்டு நடிகைகளிடம் காதல் தோல்வி கண்ட ஆறெழுத்து நடிகர் இந்த நடிகையிடமும் தன் பணத்தில் ஒரு பகுதியைப் பறிகொடுத்தார்.

துபாய் பணக்காரர்கள் சிலர் நடிகையிடம் வந்து போய்க்கொண்டிருந்தனர். ஆறெழுத்து நடிகர் ஒருமுறை நடிகை வீட்டுக்குச் சென்றபோது துபாய் ஆசாமியோடு உள்ளே இருந்திருக்கிறார் நடிகை.

அன்றோடு வணக்கம் போட்டுவிட்டார் ஆறெழுத்து கம்பீர நடிகர்.

அதன் பின்னர்தான் நடனத்தோடு தொடர்புடையவரை தன் காதலராக வரித்துக்கொண்டார் நடிகை.

### மறுத்தார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். பற்றிய சமீபத்தில் வெளியான ஒரு தகவல். தனது இமேஜை காப்பாற்றுவதற்கு எம்.ஜி.ஆர். எடுத்துக்கொண்ட முயற்சி இதில் தெரியும்.

சிவாஜிகணேசனின் குடும்ப டாக்டரான ராதாகிருஷ்ணனுக்கு எம்.ஜி.ஆரை நன்கு தெரியும். எம்.ஜி.ஆர் நடிக்கும் படப்பிடிப்பொன்றை அவர் காண விரும்பினார்.

எம்.ஜி.ஆருக்கு நெருக்கமானவர்கள் மூலம் ஸ்ருடியோவுக்குச் சென்றார். அவர் வந்திருக்கும் தகவல் எம்.ஜி.ஆருக்கு கூறப்பட்டது.

படப்பிடிப்பு தளத்துக்குள் அவரை அழைக்காமல் தானே வெளியே வந்து நலம் விசாரித்தார்.

"எங்கே இவ்வளவு தூரம்?" என்று கேட்டார்.

"உங்கள் சூட்டிங் பார்க்கத்தான் வந்தேன்!" என்றார் டாக்டர்.

"சூட்டிங்கா. அதெல்லாம் நாங்கள் அனுமதிப்பதில்லையே. யார் உங்களை இப்படி அழைத்து வந்தது?" என்று எம்.ஜி.ஆர். கேட்டார்.

"ஏற்கனவே பலரது சூட்டிங் பார்த்துள்ளேன். உங்கள் சூட்டிங்தான் பார்க்கவில்லை. அதனால்தான் விரும்பி வந்தேன்!" என்று டாக்டர் கூறினார்.

"எங்கள் தொழில் உங்களுக்குப் புரியாது. நாங்கள் நடிப்பதைப் பார்த்து உங்களுக்கு ஒன்றும் ஆகாது. நீங்கள் திரையரங்கில் பார்ப்பதுதான் சரி..." என்று புன்சிரிப்பு மாறாமல் பேசிய எம்.ஜி.ஆர். தொடர்ந்து: "இப்ப நாங்கள் உங்கள் இடத்துக்கு வந்து ஒப்பரேஷன் செய்வதை பார்க்க முடியுமா? நாங்கள் விரும்பினாலும் நீங்கள் அனுமதிப்பீர்களா? நீங்கள் அனுமதித்து நாங்கள் பார்த்தாலும் எங்களுக்கு என்ன புரியும்? அதனால் வருத்தப்படாது போய்வாருங்கள்!" என்று கூறி அனுப்பி வைத்தார்.

### மனோரமா குமரியா?

1979இல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்து சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கு விருது வழங்கினார். நடிகை மனோரமா அங்கு பேசும்போது, எம்.ஜி.ஆரது இளமையை பாராட்டினார். இன்றைக்கு இருக்கிற சின்ன பசங்ககூட அவரோடு நடிக்கலாம்" என்று கூறினார்.

மனோரமாவின் இளமை ஒப்பீடு எம்.ஜி.ஆருக்கு பிடிக்கவில்லை. தனது பதிலுரையில், "மனோரமா என்ன கிழவியா? குமரியா? பேபியா? திருமதியா? புரியவில்லையே?" என்றார். அது மனோரமாவுக்கு கஷ்டமாகி விட்டது.

தன் வயதை சுட்டிக்காட்டுவது எம்.ஜி.ஆருக்கு பிடிக்காது.



மாதுரி டிக்ஷித்

### மாட்டியது பிலிம் சுருள்

நெப்போலியன் நடித்துவரும் படம் சாமி கொடுத்த வரம். இப்படத்தின் படப்பிடிப்பு தமிழ் நாட்டில் காரைக்குடியில் நடந்தது. படப்பிடிப்புக் குழுவினர் விடுதி ஒன்றில் தங்கியிரு...தனர்.

தங்கியிருந்த கட்டணம் எவ்வளவு தெரியு... மூன்று இலட்சம் ரூபாய். அதனை கொ... முடியாமல் பட அதிபர் திணற, படப்பிடி... குழுவினர் நைசாக நழுவினராம்.

விழித்துக்கொண்ட விடுதி உரிமையா... எடுத்த பிலிம் சுருளையும், காரையும் ... விட்டார். பணத்தை கொடுத்தால்தா... வெளியாகும்.

### தாடிக்கு டாட்டா

'மருதநாயகம்' படம் ஒத்திவைக்கப்பட்ட செய்தியை முன்பே கூறிவிட்டோம். படத்திற்காக வளர்த்த தாடிக்கு டாட்டா காட்டிவிட்டார். தலை முடியையும் குறைத்துவிட்டார்.

கமல் நடிக்கப்போகும் அடுத்த படத்தின் இயக்குநரும் அவர்தான். தமிழ், தெலுங்கு இந்தி ஆகிய மும்மொழிகளிலும் படம் தயாராகப்போகிறது.

கதாநாயகியாக மீனா நடிப்பார் என்று தகவல். மும்பாயில் இருந்து இன்னொரு கலக்கல் நாயகியும் உண்டாம்.

## சினி விசிட்




பிரபுதேவா-ரம்பா

### ரம்பாவிடம் ரஜினி கேட்ட ரகசியம்

'அருணாச்சலம்' படத்தில் ரஜினியுடன் நடித்தவர் ரம்பா. ரஜினியுடன் தனக்கேற்பட்ட சுவையான அனுபவங்களை கூறுகிறார்:

"உள்ளத்தை அள்ளித்தா" படம் பார்த்தேன். ரொம்ப நல்லா பண்ணியிருந்தீங்க. அருணாச்சலம் படத்தில் என்னுடன் வரும் ஒரு பாத்திரம். ஒரு தலைக் காதல். ஆனால் எனக்கு நீங்கள் ஜோடியில்லை" என்றார் ரஜினி.

"என்ன சார் முதல் படம் அதுவும் இத்தனை வருசம் கழித்து உங்களோடு சேர்ந்து முதன் முதலாக நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஜோடி இல்லை என்று சொல்லிவிட்டீர்களே?" என்றேன்.

உடனே ரஜினி, "எனக்கு நீங்க ஜோடி இல்லை. ஆனால் ஜோடி மாதிரித் தெரியும். உங்களுக்கும் எனக்கும் டூயட் பாட்டும் உண்டு!" என்றார்.

படப்பிடிப்பில் ஒருமுறை "ரம்பா, நான் ஒண்ணு கேட்பேன். நிஜமா, இல்லையா என்று மட்டும் சொன்னால் போதும்," என்றார்.

"பெரிசா என்ன சேர் கேட்கப் போகிறீர்கள், கேளுங்களேன்" என்றேன்.

"பக்கத்தில் இப்போ நிறையப் பேர் இருக்காங்க. யாரும் இல்லாத சமயம் பார்த்துக் கேட்கிறேன்!" என்று நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்.

எனக்கு டென்ஷனாகிவிட்டது. "என்ன சேர் நீங்க, மெதுவா கேளுங்க. என் காதில் மட்டும் விழுந்தால் போதும்" என்றேன்.

மெதுவாக கிசுகிசுத்தார். "பத்து இலட்சம் ரூபாய்க்கு உங்கள் தொடைகளை காப்புறுதி செய்ததாக கேள்விப்பட்டேன். எங்கே, எப்போது செய்தீர்கள்?" என்றார்.

எனக்கு திடீரென்று வெட்கம் வந்துவிட்டது. பலரும் பலதும் பேசுவாங்க சேர். நீங்கள் கேள்விப்பட்டதில் உண்மையில்லை" என்று கூறினேன்.

### நக்மாவுக்கு காப்புறுதி

தமிழ்ப் பட உலகில் இதுவரை இளையராஜாதான் அதிக தொகைக்கு காப்புறுதி செய்திருந்தார். இந்திய மதிப்பில் இரண்டு கோடி ரூபாய்க்கு காப்புறுதி செய்திருந்தார்.

அவரை மிஞ்சிவிட்டார் நக்மா. நாலு கோடி ரூபாய்க்கு காப்புறுதி செய்திருக்கிறார். ஹொலிவூட் நடிகைகள் போல முக்கியமான அங்கங்களுக்கும் சேர்த்தே காப்புறுதி செய்திருக்கிறார்.

சரத்குமார் தரப்பால் ஆபத்து ஏதும் நிகழலாம் என்ற பயம் இன்னமும் விலகவில்லை. அதுதான் முன்னெச்சரிக்கையாக பெரும்தொகைக்கு காப்புறுதி செய்துள்ளார்.

### சிம்மாசனம்

விஜயகாந்த் அடுத்து நடிக்கவுள்ள படம் 'சிம்மாசனம்'. இரட்டை வேடத்தில் நடிக்கிறார். விஜயகாந்தின் சொந்தப் பட நிறுவனமே இதனை தயாரிக்கப் போகிறது. ஏனைய விடயங்கள் விவாதத்தில் உள்ளனவாம்.

### மீனா மறுத்தார் குஷ்பு இணைந்தார்

'சுந்தர புருஷன்', 'சொல்லாமலே' படங்கள் பெரு வெற்றி பெற்றதால் லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நீடிக்கிறார். அப்படியிருந்தும் இவருக்கு ஜோடியாக நடிக்க மீனா மறுத்திருக்கிறார்.

தன் தகுதிக்கு ஏற்ற கதாநாயகன் அல்ல என்று கூறிவிட்டாராம். அதனை அறிந்து வருத்தப்பட்டார் லிவிங்ஸ்டன்.

லிவிங்ஸ்டனுடன் ஜோடி சேர்ந்திருக்கிறார் குஷ்பு. வி.சேகர் இயக்கும், 'விரலுக்கு கேத்த வீக்கம்' படத்தில் இருவரும் ஜோடி சேருகின்றனர்.

ஊர்வசி, கனகா, நாசர், சந்திரசேகர், வடிவேலு, கோவை சரளா உட்பட பலர் நடிக்கின்றனர். பாடல்கள்: வாலி. இசை: தேவா.

வி.சேகர் இயக்கிய "வரவு எட்டணா, செலவு பத்தணா' படம் நம்நாட்டு தொலைக்காட்சியில் சமீபத்தில் காண்பிக்கப்பட்டு பலரையும் கவர்ந்தது.

### உண்மை... தமி...

சத்ய... உறவினர... பட்டி சி... மகனை ... னாக ... படம் ... சத்யன் ... நடிக்கிற... என்று ... சூட்டியு...

சத்ய... விழாவில்... இருவரு... கள்.

அங்... விஜயகார... என்று ... காந்த். "... என்று தி...

### எங்...

ஜனவ... கொண்ட... தேதியன்... என்று ... விட்டார...

விஜ... ஒதுங்குவ... அந்த ... கேள்வி.

### மினி சினி

* பிரீத்தி ஜிந்தா, வெங்கடேஷ் ஜோடியாக நடித்த தெலுங்குப் படம் ஒன்று வெற்றிகரமாக ஓட அதை 'நேசிக்கிறேன்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றி வெளியிடுகிறார்கள்.
* அருண்குமார்-மந்த்ரா ஜோடியாக நடித்த 'கங்கா கௌரி' படத்தை இயக்கிய மாதேஸ்வரன், அடுத்து சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* தமிழ்-மலையாளம் ஆகிய மொழிகளில் பிஸியாக நடித்து வரும் கௌசல்யா முதல் முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.
* பாக்யராஜ் பாணியில் 'ஊமைக்குயில்' போன்ற படங்களை இயக்கி நடித்த யோகராஜ், நீண்ட காலத்திற்குப்பின் ஒரு படத்தை இயக்கி நடிக்கிறார்.
* தமிழில் தோல்வியடைந்த விஜயகாந்த்தின் 125வது படமான 'உளவுத்துறை', தெலுங்கில் 'கேப்டன் பரத்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடுகிறது.
* 'பொன்மனம்', 'என் உயிர் நீதானே' போன்ற படங்களை இயக்கிய எஸ்.பி.ராஜ்குமார், அடுத்து இயக்கும் படத்திற்கு 'உன் நினைவே போதுமடி' என்று பெயரிட்டுள்ளார்.
* மணிரத்னம் இயக்கிய 'மௌனராகம்' படம் 'சந்திரோதயா' என்ற பெயரில் கன்னடத்தில் தயாரிக்கப்படுகிறது. இதில் ரமேஷ் அரவிந்த்-பிரேமா-சிவராஜ்குமார் ஆகியோர் நடிக்கிறார்கள்.
* 'லவ்டுடே' படத்தை இயக்கிய பாலசேகரன் இப்போது 'சொல்லிவிடு' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதையடுத்து இவர் இயக்கும் படத்தில் நெப்போலியன் நாயகனாக நடிக்கிறார்.
* லிவிங்ஸ்டன் நடிக்கும் 'என்றும் ஆனந்தம்' படத்தை தயாரிப்பவர் நடிகை பாலாம்பிகா. இவர் ராம்கியை வைத்து 'என் ஆசை தங்கச்சி' படத்தைத் தயாரித்து அதில் நாயகியாகவும் நடித்தவர்.
* 'பூவேலி' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரசாந்த் மற்றும் அர்ஜூன் கதாநாயகர்களாக நடிக்கும் இரண்டு படங்களை இயக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார் செல்வா.


www.padippakam.com

www.padippakam.com

## ..கே. 47

தலைப்பை பார்த்ததும் பயந்து விட்டீர்களா? இது ஒரு படத்தின் பெயர். சாய்குமார் நடித்து கன்னடத்தில் வெளியான படம் ஒன்றே 'ஏ.கே.47' என்ற பெயரில் வெளியாகிறது.

சாய்குமார் நடித்த மொழிமாற்றுப் படமான 'ஈஸ்வர அல்லா' சமீபத்தில் வெளியாகி சுமாராக ஓடியது. மத ஒற்றுமையை வலியுறுத்தும் சண்டைப் படம்.

சி னி வி சி ட்



புதுமுகம் ஊர்வசி
படம்: காமா

## காதோடு சொல்லுகிறோம்

இரண்டெழுத்து 'பூ' நடிகையும் அவரது மணியான இயக்குநரும் பிரிந்ததும், பின் மீண்டும் இணைந்ததும் தெரிந்த கதை. இப்போது புதியகதை உலாவுகிறது. இருவரும் சண்டை போட்டுக்கொண்டதுபோல நடித்தனராம். ஜோசியர் ஆலோசனைதான் அப்படி நடித்ததுக்கு காரணமாம்.

'**பா**ர்த்திப' நடிகர் சமீபத்தில் தனது திருமண விழாவை விமரிசையாக கொண்டாடினார். நட்சத்திரங்களுக்கு மட்டுமே அழைப்பு. பிரபல விடுதியில் கொண்டாட்டம். பலரும் தண்ணியில் மிதந்தனராம். பெண் நட்சத்திரங்களும் அதில் அடக்கம்.

**ர**சிப்போடு தொடர்புடைய பெயர் கொண்ட முன்றெழுத்து நடிகை அவர். 'பாண்டிய' நடிகருடன் ராசியாக இருந்தவர். அவர் இப்போது வேறு ஒரு நடிகையை ஓரம் கட்டியிருப்பதால், முன்றெழுத்து நடிகையும் வேறுபுறம் திரும்பினார். விநாயகரின் பெயர் கொண்ட இளம் நடிகருடன் ஒட்டிக்கொண்டுள்ளாராம். ஏற்கனவே பல நடிகைகளுடன் பேசப் பட்டவர் அந்த நடிகர்.

**க**ஸ்தூர நடிகை தமிழிலும் கவர்ச்சி காட்டத் தொடங்கியதோடு, அவரை நாடி பெரும்புள்ளிகளும் படையெடுக்கத் தொடங்கியுள்ளனராம். எப்போதுமே பிஸியாம்.

**சூ**ப்பர் ஸ்டாரை தாஜா பண்ணி பேசிப் பேசியே, அவரை அரசியலுக்கு வராமல் பார்த்துக்கொள்கிறார் முக்கிய தலைவர் ஒருவர். 'குமார' நடிகரை வளர்த்துவிடும் வேலையும் மறைமுகமாக நடக்கிறதாம். அதனை 'குமார' நடிகர் மறுத்துள்ளார். மறுப்புகள் எல்லாம் உண்மையாகுமா?

## இயக்குநருக்கு எதிர்ப்பு

அசோக்குமார் இயக்கும் படம் 'காமா'. இதில் நெருக்கமான காட்சிகளுக்கு பஞ்சமேயில்லை.

மும்பாய் நடிகைகளை வைத்து எப்படியும் படம் எடுக்கலாம் என்ற நம்பிக்கையில், சற்று அத்துமீறியிருக்கிறார் இயக்குநர்.

புதுமுகமான மும்பாய் இறக்குமதி நடிகை ஒருவரது இரண்டு தோளிலும் தேனை ஊற்றிய இயக்குநர், அதை அப்படியே மெது மெதுவாக வழித்து விடுவதுபோல கையை நெஞ்சில் வைத்திருக்கிறார். உடல் முழுக்க தேன் தெரிய வேண்டும் என்றாராம்.

அவ்வளவுதான், அந்த நடிகை பொறுமை இழந்துவிட்டார். மேற்கொண்டு நடிக்கமாட்டேன் என்று கூறிவிட்டு போய்விட்டார். அந்த நடிகையின் பெயர் காஷ்மீரா ஷா. பின்னர் இயக்குநர் கெஞ்சிக்கூத்தாடி நடிக்க வைத்தாராம்.

ஆனால் 'காமா'வில் நடிக்கும் இன்னொரு நடிகையான புதுமுகம் ஊர்வசி எள் என்றால் எண்ணெயாக நிற்கிறாராம். இந்தப்படத்தின் முலம் ரசிகர்களின் தூக்கத்தை கெடுப்பதுதான் ஊர்வசியின் ஆசையாக்கும்.

## செல்வாக்குள்ள நடிகர் யார்?
## இண்டர்நெட் கருத்துக் கணிப்பு

இன்று உலகளவில் அதிக செல்வாக்கு உள்ள தமிழ்ச் சினிமா நட்சத்திரம் யார்? இண்டர்நெட்டில் உள்ள Tamil Cinema Com என்ற பகுதியில் இந்தக் கருத்துக் கணிப்பு நடந்து வருகிறது.

இந்தக் கருத்துக் கணிப்பில் வாக்களிப்பவர்கள் பெயர், சொந்த ஊர், ஈமெயில் முகவரி ஆகியவற்றை தெரிவித்துவிட்டு வாக்களிக்கலாம்.

சிறந்த நடிகர், நடிகை, வில்லன், இசையமைப்பாளர், பாடகர், பாடகி, இயக்குநர் போன்ற பல பிரிவினரை தெரிவு செய்து வாக்களிக்கலாம். அதற்கேற்ப பல பகுதிகள் கம்பியூட்டரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. உங்களிடம் இண்டர்நெட் இருப்பின் நீங்களும் இங்கிருந்தே வாக்களிக்கலாம். முகவரி Http://WWW Tamil Cinema Com.

சிறந்த நடிகர் நடிகை தேர்வுக்காக 13 நட்சத்திரங்களை பட்டியலிட்டுள்ளனர். முதல் கட்ட வாக்குப் பதிவில் நடிகர் விஜய் முதலிடத்தில் உள்ளார். நடிகைகளில் சிம்ரான் முதலிடம். இசையமைப்பாளர்களில் ஏ.ஆர்.ரகுமான்.

நடிகர்களில் முதல் கட்ட வாக்குப் பதிவில் முதல் ஐந்து இடத்தில் உள்ள நடிகர்கள் விபரம்:

| நடிகர் | சத வீதம் |
|---|---|
| விஜய் | 29.90% |
| கமல் | 15.23% |
| ரஜினி | 13.71% |
| கார்த்திக் | 13.33% |
| சிவாஜி | 6.66% |

## மன்சூர் மீது வழக்கு

பெண் ஒருவரை ஏமாற்றி உறவு வைத்தது. அந்த உறவில் பிறந்த குழந்தைக்கு தான் தந்தை இல்லை என்று கூறியது. இப்படி குற்றச்சாட்டு பட்டியலில் மாட்டியுள்ளார் மன்சூர் அலிகான்.

ஏற்கனவே இந்த விவகாரம் சூடாக அடிபட்டது. பின்னர் அந்தப் பெண்ணை பணம் கொடுத்து சமாளித்தார் மன்சூர்.

சமீபத்தில் தமிழக அரசை திட்டித்தீர்த்ததால், பழைய கேஸை கிளறியுள்ளனர் பொலிசார். வழக்கும் போட்டுள்ளனர். மனம் உடைந்து நிற்கிறார் மன்சூர்.

அப்படியும் நக்கல் போகவில்லை. தமிழகப் பொலிசாரைப் பற்றி கூறியபோது: "இந்த பொலிஸ்காரர்கள் காட்டுக்குப் போய் வீரப்பனிடம் அடிவாங்கிக் கொண்டு வருகிறார்கள். வீரப்பனாக நடித்த என்னைப் போட்டு வதைக்கிறார்கள்!" என்கிறார்.

## நடிகையின் மைந்தன்

அந்தக் காலத்தில் ரசிகர்களை ஜொள்ளுவிட வைத்தவர் வைஜந்திமாலா. பின்னர் அரசியலில் குதித்து எம்.பி.யானார். அதன் பின்னர் திரையுலகை திரும்பிப்பார்க்கவில்லை.

வைஜந்திமாலாவின் மகன் சுரேந்திரா திரையுலகில் எட்டிப்பார்க்கிறார்.

இவர் கதாநாயகனாக நடிக்கும் படத்திற்கு 'கண்ணோடு காண்பதெல்லாம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். சுரேந்திராவுக்கு ஜோடியாக புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார். இயக்குநரும் புதுமுகம். பெயர்: பிரபு. இவர் சுந்தர், அகத்தியன் ஆகியோரிடம் உதவியாளராக இருந்தவர். இசை: தேவா.

## கும்மிப்பாட்டு

பிரபு, தேவயானி நடித்து வெளியான படம் 'என் உயிர் நீதானே'.

அடுத்து இதே ஜோடி சேரும் படம் 'கும்மிப்பாட்டு'. இவர்களுடன் சிவகுமார், ஆனந்தராஜ், வடிவேலு, ரஞ்சித், மனோரமா, ராதிகா ஆகியோர் நடிக்கின்றனர்.

கிராம இயக்குநர் என்று பெயர் எடுத்துள்ள கஸ்தூரி ராஜா இப்படத்தை இயக்கவுள்ளார். இப்படத்திலும் குஷ்பு கிடையாது. இசை: இளையராஜா.

## முகப்பில்

காதல் / இந்து




பாபுகணேஷ்–ரஸிகா
படம்: கெஸ்ட் ஹவுஸ்

## அப்பாவி ரஜினி
## ஏமாற்றும் நாசர்

'படையப்பா' படத்தின் கதையில் கொஞ்சம் வெளியே கசிந்திருக்கிறது.

ரஜினியின் அப்பா சிவாஜி பெரிய பணக்காரர். ரஜினியும், நாசரும் அண்ணன், தம்பிகள். அப்பா சொத்துக்களைவிட்டு போய்விட, அண்ணன், தம்பிக்குள் சொத்துப் பிரச்சனை. அப்பாவி ரஜினியை ஏமாற்றுகிறார் அண்ணன் நாசர்.

'மாட்டை இரண்டாக பிரிக்கலாம். முன்பக்கம் உனக்கு, பின்பக்கம் எனக்கு. மரத்தை இரண்டாகப் பிரிக்கலாம், அடிப்பாகம் உனக்கு மேல்பாகம் எனக்கு...' என்று நாசர் பங்கு பிரிக்கிறார்.

ரஜினி கஷ்டப்பட்டு உழைப்பார். மாட்டுக்கு தீனிபோடுவார். மரத்துக்கு உரம் போடுவார். சந்தோசமாக பால் கறப்பார் நாசர். காய்களைப் பறிப்பார் நாசர். விளைச்சல் இல்லாத நிலமாக ரஜினியின் தலையில் கட்டி விடுவார்.

அந்த நிலத்தில் ரஜினிக்கு கிரனைட்கல் கிடைக்கிறது. அதுவரை அப்பாவி ஆறுபடையப்பனாக இருந்த ரஜினி, புத்திசாலியான 'படையப்பா'வாக மாறுகிறார். நாசரை இருத்தி எழுப்புகிறார். ரஜினி பாணியில் நகைச்சுவை கலந்து அட்டகாசமாக இயக்கியுள்ளார் கே.எஸ். ரவிக்குமார்.

பாடல்கள் தவிர ஏனைய காட்சிகள் யாவும் படமாக்கி முடிந்துவிட்டதாம்.

## பேய் ரசிகா

காதல் படங்கள் திகட்டியதால் 'குரு பார்வை' பிய்த்துக்கொண்டு ஓடியது. மாறுதலான படங்களும் இடைக்கிடையே வந்தால் தான் காதல் படங்கள் திகட்டாமல் இருக்கும்.

'கெஸ்ட்ஹவுஸ்' என்றொரு படம் ரசிகர்களை மிரட்டப் போகிறது. இதில் பேயாக நடிக்கப் போகிறார் ரசிகா. கவர்ச்சியான பேயாக இருப்பார் போலிருக்கிறது.

இரவு நேரங்களிலேயே படப்பிடிப்பு நடப்பதால், தூக்கம் இல்லாமல் தவிக்கிறாராம் ரசிகா.

...ஜின் ...மாதம் ...ார் தன் ...ாநாயக ...கவைத்து, ...ரிக்கிறார். ...ற பெயரில் ... இளையவன் ...திற்கு பெயர் ...ார்.

...அறிமுகப்படுத்தும் ...பராஜ், விஜயகாந்த் ...ராகி வாழ்த்தினார்

...திரிகையாளர் ஒருவர் ...ம் 'ஹப்பி நியூ இயர்' ...ாராம். உடனே விஜய ...ில் வாழ்த்துக் கூறுங்கள்" ...தினார்.

## ...க? என்ன?

...தலாம் திகதியை இலண்டனில் ...னார் விஜய். ஜனவரி முதல் ...ன்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ...ாராம் ஒரு நிருபர். வெட்கப்பட்டு ...விஜய்.

...ந்த ஆண்டில் சினிமாவை விட்டு ...ன்று ஒரு ஜோசியர் கூறியிருக்கிறாராம். ...யரை விஜய் ரசிகர்கள் தேடுவதாகக்

www.padippakam.com

## அட்டைத் தமிழ்

துணிந்தொரு கோவிலில் கும்பிடப் போகையிலும்
அணிந்திரு அடையாள அட்டை
***
காசின்றிக் கடைத்தெரு போனாலும் ஐடெண்ரி
பேசிற்குள் பேணிடப் பழகு.
***
இருமொழி பொறித்ததோர் அடையாள அட்டை
பெருமிடர்க் காக்கிடும் பகை.
***
பொலிஸ் ஏட்டுப் பதிவோடு அடையாள அட்டையும்
கலிகாலக் காவல் நம் குடிக்கு.
***
பாவனைத் தேய்வும் படமுக மாற்றமும்
தீவினைக் கேதுவாம் தினம்.
***
தூக்கக் கனாவிலும் கடன் காரத் தட்டலாய்
கேட்கும் ஐசியைப் படை.
***
என்னாட்டு மாந்தரே ஆனாலும் கடிவர்
உள்நாட்டு ஐசியைக் கேட்டு.
***
விண்ணப்பம் போட்டபின் வராது வந்திடும்
பின்னாற் போய் கையூட்டற் பின்
***
உடமையாம் இதனை எங்கெல்லாம் கோருவர்
கடமையில் கள்வரும் கேட்பர்!
***
செக்பொயின்ற்றில் ஈதின்றி இன்னலாம் பணம் கொண்ட
பிக்பொக்கற் காரனும் புரிவான்.

மாவை வரோதயன்.

## உளத்தால்......?

அடக்குதல் நின்றால் ஆம், சமாதானம்!
நடக்குமா? இன்றேல் நடக்கும் அறப்போர்!

கொடுப்பதும், எடுப்பதும் குவலயத்தில்லை!
தடுப்பது நின்றால் சமாதானந்தான்!

பெரிதும் சிறிதும் பிறப்பிலே இல்லை!
உரிமை எவர்க்கும் உள்ளதே என்றும்!

பறிப்பதும்-பறிக்கப் பார்ப்பதும் தவறே!
வெறிப்பதும்-தண்டம் விதிப்பதும் தவறே!

'உன்போல் பிறர்' என உளமா சின்றி
அன்பால் மக்களை ஆள் நிலைவந்தால்
வெண்புறாப் பறக்கும்! வெம்போர் நிற்கும்!
கண் ஒளி வீசும்! கனிவாய் மலரும்!
எல்லாம் உளத்தால் ஏற்படும், அல்லால்
சொல்லால் வாரா! தொடரும் துயரே!

'அகதிக் கவிராயர்'-
திரு/இலிங்கநகர்.

## அகழ்வு

அகழ்ந்து
கண்டெடுத்ததாகக்
கூறப்பட்ட- என்
நகரத்தினைப் பார்க்கப் போனேன்!
நூற்றாண்டுகள் கழித்து
வரப்போகும் ஒருவனுக்காகக்
காலத்தில் காத்திருந்தது-
சில காலத்துக்கு முன்னர்
சிதைந்து போன
அந்த நகரம்!
**
புதைந்த கட்டடங்களோடு
புதைந்துபோன- ஆயிரம்
கனவுகளையும்
தாண்டியபடி நடந்தேன்.
**
ஒரு சிறு பிறழ்ச்சியில்
வேடிக்கையாவதறியாது
இறுமாப்போடு நின்ற
இராவணன் சிலை-
உடலில்லாத தலையும்
விரலில்லாத கையுமாக
'இனம் காண'ப்பட்டிருந்தது!
**
சிதைந்திருந்த சிவன்கோவிலில்
சிதறிக்கிடந்த நாணயங்கள்
பளபளத்தன.
தூளாகியிருந்த சிவலிங்கம்
பாவப்பட்ட பாதங்களில்
மிதிபட்டது!
**
வியர்வையும் எதிர்பார்ப்பும் கொண்டு
ஆசையோடு கட்டிய வீடுகளில்
பாம்புப் புற்றுக்களும்
கரையான் குடியிருப்புக்களும்...!
பார்க்கும்போது
ஒவ்வொரு இரத்த அணுவும்
சில்லிட்டு-பின்னர் கொதித்தது!
**
திரும்பும் போதுதான் பார்த்தேன்
அந்த பெயர்ப்பலகையில்
'அழிந்த நகரம்' என்றிருந்தது...
அதெப்படி?
இது...
அழிக்கப்பட்ட நகரமல்லவா?,

அனுஷன்-அக்கரபத்தனை.

## உன்னை நினைத்து...

உன்னைப் போல்
ஒருவருமே
இல்லாததால்
உன்னிடமே
என் யாத்திரை
தொடர்கிறது...!
..
இன்னொரு 'நிலவு'
கண்டுபிடிபடும் வரை
நீதான்
என் முதலும் முடிவும்!
..
பௌர்ணமி
நிலவுடன்
என் 'மனதும் காயும்!'
..
உன் மடியில்
முகம் கிடத்தி
கன்னத்தில்
இதழ் பதித்து
அன்று
இருவரும் பார்த்த
அதே நிலவுதான்!
..
அண்ணாந்து
பார்க்கும் போதெல்லாம்
'எச்சில்'
காறித்துப்புகின்றது!
..
நிமிர்ந்து
நடக்கக்கூட
நாதியில்லாமல்
நிலைதடுமாறுகின்றேன்...
உன்னை நினைத்து!
..

மாரிமுத்து யோகராஜன்-
மட்டக்களப்பு.

## தேன்கிண்ணம்

## எதிர்ப்பலைகள்

நிலவு
ஒரு நீண்ட
கடிதத்தை
இந்தப் பூமிக்கு
எழுதி விட்டது!

நீல் ஆம்ஸ்ரோங்கைக்கூட
அமெரிக்கன் என்றபடியால்
இனி
நம்ப முடியாது!

ஏ. ரவிஷங்கர்-
மட்டக்களப்பு.

## அந்தநாள் ஞாபகம்



▲ கலைஞர் கருணாநிதியின் இளமைத் தோற்றம். அவர் அருகே அமர்ந்திருப்பவர் யார் தெரிகிறதா? கலைஞரின் அக்கால ஆருயிர் நண்பர் எம்.ஜி.ஆர். யேசுநாதராக நடித்த ஒப்பனையோடு அமர்ந்திருக்கிறார்.

▼ சிவாஜிகணேசனின் மகள் சாந்தியின் திருமணத்தில் வெள்ளைச் சிரிப்போடு ஆசிர்வதிக்கிறார் எம்.ஜி.ஆர். மணமக்களின் பின்புறம் ஒரு பையன் நிற்கிறார் பாருங்கள். யார் தெரிகிறதா? சாட்சாத் பிரபுவேதான்.



## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.எச்.எம்.அஸார்,
வயது: 24
முகவரி: SINGAPORE FASHION, P.O BOX NO.31260, DOHA-QATAR.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்,
கிரிக்கெட் விளையாடுதல்



பெயர்: எஸ். கௌரி,
வயது: 29
முகவரி: 19/5, மத்திய வீதி, உவர்மலை
திருகோணமலை.
பொழுது போக்கு:
வானொலி,
பேனாநட்பு.



பெயர்: க. அஜந்தகுமார்,
வயது: 17
முகவரி: பெரியதம்பிரான் ஆலய வீதி,
அக்கரைப்பற்று-07.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்: துரை குமுதா,
வயது: 20
முகவரி: காந்திஜீ வீதி,
கொக்குவில் மேற்கு.
பொழுது போக்கு:
வானொலி,
தையல்,
பத்திரிகை.

# கைரேகையும் காதலரும்



ஆயுள் ரேகை சுக்கிர மேட்டை வளைத்துச் சென்று, அரைவட்டமாக இருந்தால், அதாவது கிட்டத்தட்ட சுக்கிர மேடு அகலமாக இருந்தால், உங்கள் காதலர் நல்லவர். உடல் இச்சை இரண்டாம் பட்சம். 'உள்ளக் காதல்' இருக்கும்.



இந்த அமைப்பைக் கவனியுங்கள். 'B' என்பது ஒரு சாதாரண ஆயுள் ரேகை. 'A' என்ற ரேகையைக் கவனியுங்கள். யதார்த்தத்தை விட கட்டை விரல் பக்கம் நெருங்கிச் சென்று சுக்கிர மேட்டை மிகவும் குறுகலாக்கி விட்டதே.

### சுக்கிரமேடு அகலம் குறைந்துவிட்டதல்லவா?



இவர் காதல் மனம் இருந்தும், துன்பக் கதையாக முடியும். இனக் கவர்ச்சியில் நாட்டம் குறையும். உடல் நலம் ஒரு பிரச்சனையாகிவிடும். மற்ற அமைப்புகளையும் சீர் தூக்கிப் பார்க்கவும், அநேகமாக இவர் ஒரு சந்தேகப் பிராணியாக உருமாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.



இந்த அமைப்பு இருக்கிறதா பாருங்கள்! ஆள்காட்டி விரலுக்கும் சனி விரலுக்கும் (நடுவிரல்) இடையில் தோன்றி, சுண்டு விரலுக்கும், மோதிர விரலுக்கும் இடையில் ஒரு மூன்றாம் பிறை நிலா போல முடியும். இதைச் சுக்கிர வளையம் என்பர்.

காதல் மன்னன்! நல்ல ரசிகர். அநேகமாகக் காதலைத் தோல்விக்குக் கொண்டு செல்லமாட்டார்.

வரதட்சணை எதிர்பார்க்கமாட்டார். கல்யாணத்துக்குப் பிறகு, உங்களை ஒரு கணம் தனியே இருக்க விடமாட்டார். வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கப் பிரியப்படுவார். பாலுணர்வு நன்றாக இருக்கும்.

### இந்த வளையம் இல்லையா?


மன்னிக்கவும், அவ்வளவாக பெண்மை இவரை வசீகரிக்காது. 'காதலாவது, கத்தரிக்காயாவது' என்று போய்விடுவார். பொருள் வரவோடு திருமணம் செய்பவர்களில் இவரும் ஒருவர்.



**படத்தைப் பார்த்தீர்களா?**

ஆயுள் ரேகை இரண்டு இருக்கிறது. இரட்டை ரேகை! பார்த்தாகி விட்டதல்லவா? உஷார்! மன்மதலீலை படம் பார்த்திருப்பீர்களே, அந்தக் கதைதான்! இவரைத் திருப்திப்படுத்த, உங்களுக்கும் இதைப் போல இரண்டு ரேகை இருந்தால் ஓ.கே. இல்லாவிட்டால், 'சாமி, போதும்' என்கிற நிலைமை உங்களுக்கு வந்து விடும். பிறகு உங்கள் பிரியம்.

### இவர் குடும்ப சுகத்தில் திருப்தி அளிப்பவரா?



கட்டை விரலின் அடிவாரத்தில் மேற்கண்டபடி, சங்கிலி கோர்த்ததுபோல ரேகை ஒன்று இருந்தால், 'வீரியக் குறைவு' எனவும், பாலின்பத்தில் ஈடுபாடு, போகப் போக குறையும் என்பதும் சாஸ்திர சம்மதமானது.

இது தவிர பலமற்ற சுக்கிர மேடும் ஒரு காரணமாகும். இப்படிப்பட்ட நண்பரைக் காதலராக நீங்கள் அங்கீகரிக்கும் முன் பல தடவை யோசிக்க வேண்டும்.

இதே விஷயத்தை இன்னும் பல வகைகளிலும் நாம் கண்டு பிடிக்கலாம்.



சுட்டு விரல் மேட்டில் தனித்தனியாக இப்படி ரேகைகள் இருக்குமானால், அப்படிப்பட்டவர் இன்ப வாழ்வை விட கலைநயம், அறிவு விருத்தி, இப்படியே சிந்திப்பவராயிருப்பார். நீங்கள் சினிமாவுக்குத் தயாராகும் போது அவர், இலக்கிய நூலைக் குடைந்து கொண்டு இருப்பார். இரவு பத்து மணிக்கு மேல் நீங்கள் விளக்கை அணைத்தால், அவர் டேபிள் லைட்டைப் போட்டு, பாரதம் படிப்பார். உங்களுக்கு இது ஒத்து வருகிறதா? பிறகென்ன, கவலையை விடுங்கள்.




இதே அமைப்பு உங்களுக்கும் இருந்தால் சண்டை வராது. மாறினால் வம்புதான்!

அதுசரி, இந்த விஷயத்தில் திருப்தி அளிப்பவரா என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

சுக்கிரமேடு நன்றாகப் புடைத்தும், நட்சத்திரக் குறி, டைமன் குறி, கட்டை விரல் அடி ரேகை சங்கிலி இல்லாமல் இருத்தல், குருமேடு நன்றாக இருத்தல், இவைகள் எல்லாமே நல்ல குறிகள் தாம். என் என்பதற்குள் எண்ணெயாகி நிற்பார்.

### இல்லற இன்பத்தில் சுயநலக்காரர் யார்?



விரல் நுனிகளும், நகங்களும் கூட சதுரம் சதுரமாக இருக்கிறதா? கவலையை விடுங்கள். உங்கள் 'அவர்' இந்த விஷயத்தில் 'கொடுத்து வாங்கக் கூடியவர்'. சுகம் என்பது 'ஒரு வழிப் போக்கு' மட்டும் அல்ல என்பதை உணர்ந்தவர். விரலும் விரல் நகங்களும் கூர்மையானவைகளாக இருந்தால் சுயநலம் நிரம்பியவர். 'தன் காரியம்' என்றே எதையும் அணுகுவார்.



உணர்வுகளும் உணர்ச்சிகளும் பொதுவானவை என்பதை இவர் அறவே நம்பமாட்டார். தன் இன்பம், தன் கஷ்டம் என்றே இவர் சிந்தனை ஓடும்.

இதற்கும் அப்பாற்பட்டு இன்னொன்று இருக்கிறது.

புத்தி ரேகை வளையாமல் நேராக கையின் குறுக்கே ஓடுகிறதா பாருங்கள். மேலே சொன்னது சரியே.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பாத அழகு



நடப்பதைவிடச் சிறந்த பயிற்சி வேறு எதுவுமே இருக்க முடியாது. நடப்பதனால் நன்றாக மூச்சுவிட முடிகிறது. மூச்சுவிடுவதனால் இதயம் விரிகிறது.

நன்றாக இழுத்து மூச்சு விட்டுக் கொண்டே தடையில்லாது நடந்துசெல்வது. இரத்த ஓட்டத்தைப் பெருக்கி, கால் தசைகளை உறுதிப்படுத்தி, உறுப்புக்களுக்கு உரமூட்டி உடலுக்கு உற்சாகத்தை அளிக்கிறது.

மணல் வெளியிலும், புல்வெளியிலும் வெறும் காலுடன் நடக்க வேண்டும். நகரங்களில் நெடுந்தெருக்களில் நடப்பவர்கள் செருப்பில்லாமல் நடக்கக்கூடாது.

குளிக்கும்போது தவறாது பாதங்களைச் சொரசொரப்பான கல்லில் நன்றாகத் தேய்த்துக் கழுவிச் சோப்புப்போட வேண்டும்.

சோப்பிலுள்ள காரச்சத்து, காலிலுள்ள அழுக்கையெல்லாம் அகற்றிவிடும். சோப்பை உபயோகிக்க விரும்பாதவர்கள் பாசிப்பயறு மாவை உபயோகிக்கலாம்.

தளுக்கு நடை போட்டு நடக்க வேண்டும் என்பதற்காக, பொருந்தாத செருப்பிலே பாதத்தை சிறைப்படுத்துவது கேடு விளைவிக்கும் செயலாகும்.

மலையிலிருந்து வழிந்தோடும் நீரிலும் அலை அடிக்கும் கடலிலும் கால்களை அமிழ்த்திக் கொண்டிருந்தால் பாதங்கள் பார்ப்பதற்குப் பளிச்சென்று மிக அழகாகத் தெரியும்.

கால்களில் புண்கள் இருந்தால் ஆறிவிடும். நீரில் நனைத்த பாதங்களில் ஏறிய குளிர்ச்சியால் ஏற்படும் சந்தோஷ உணர்ச்சி, முகத்தில் சிரிப்பாய் சிந்தி விளையாடும்.

நிற்கும்போதும் நடக்கும்போதும் பாதங்களைச் சரியாக ஊன்றாமல் நடந்தால், நம் பாதம் படாத இடத்தில் தோல் கட்டியாகி உருண்டையாகி காய்ப்பு உண்டாகும்.

இந்தக் காய்ப்பு கால்களின் அழகைக் கெடுத்துவிடும். இந்தக் காய்ப்பு உண்டாகாமல் இருக்க சப்பாத்து அணியக்கூடாது. கால்களைச் சப்பணம் கட்டி உட்காரவே கூடாது.

நிற்கும்போது பாதங்களை ஊன்றி நிற்க வேண்டும். பாதங்களைத் தரையில் ஊன்றி மிக அழுத்தமாக நடக்க வேண்டும். ●

## கன்னமும் 'ரோஜ்'யும்



கன்னங்களில் 'ரோஜ்' தடவும்பொழுது கொஞ்சமாகவே தடவுங்கள். கன்னங்கள் உப்பியிருப்பின் காதிலிருந்து முகவாய்க்கட்டு வரை நல்ல நிறமுடைய பவுடரைத் தடவி, அதன் மீது ரோஜ் தடவவும். எந்த இடத்தில் சிவப்பு வைத்தால், எடுப்பாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள இந்தச் சிறு வழியைக் கையாளலாம்:

கண்ணாடி முன்பு புன்னகை புரியுங்கள். உப்பிய கன்னம் உடையவர்கள், கன்னத்தில் எந்த இடம் மிகவும் குறைவாக உப்புகிறதோ, அதன்மீது 'ரோஜ்' தடவுங்கள. ஒட்டிய கன்னமுடையவர்கள் எங்கு கன்னம் அதிகமாக உப்புகிறதோ, அங்கு சிவப்புத் தடவ வேண்டும்.

அகலமான முகமுடையவர்கள் கன்னங்களின் பக்கங்களில் தடவலாம்.

சதுர முகமுடையவர்கள் கன்னங்களின் மேல் பகுதியில் தடவலாம்.

வட்ட முகமுடையவர்கள் கண்களுக்கு நேர்கீழாகத் தடவலாம்.

நீண்ட முகமுடையவர்கள், கன்னங்களின் மத்தியில் தடவலாம். ●

## தங்கமாலைப் பரிசுப்போட்டி அதிஷ்டசாலிகள்

முரசு–அம்மன் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலைப் பரிசுப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளான தங்கமாலை, தங்க மோதிரம், சமையல் அடுப்பு போன்றவற்றை பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்களை அறிய ஆவலாக இருப்பீர்கள்.

**அந்த சூப்பர் அதிஷ்டசாலிகளின் விபரங்கள் இறுதியில் அறிவிக்கப்படும்.**

ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளில் கடந்த வாரங்களில் 20 பேரின் விவரங்கள் தந்தோம். அடுத்துவரும் 10 பேரின் பெயர் விபரம் பின்வருமாறு:

21. கண்ணன் ஜெயந்தி
பவுண்டரி வீதி, செங்கலடி.
22. பேரின்பமூர்த்தி விக்னேஸ்வரி
பட்டித்திடல், தோப்பூர்.
23. திருமதி.பிலானி மோகன்
இல.9, வீடமைப்புத் திட்டம்,
தேக்கவத்தை, வவுனியா.
24. அ.நஸீபா
'விவாஹில் ஹம்ந்'
பாலநகர், மூதூர்-02.
25. பி.ராதிகா
இல.38, கல்பொத்த வீதி,
கொழும்பு-13.
26. வி.எம்.எஸ்.லோகாம்பாள்
இல.15, தம்பத்தனை தோட்டம்,
அப்புத்தளை.
27. எஸ்.சுசிலா-இல.72, கண்டி வீதி, கம்பளை.
28. பி.மணிமேகலை
இல.49, மகிந்த மாவத்தை, நுவர-எலிய.
29. க.கவிதிலி
இல.174/1 உலுவிஸ் பிளேஸ்,
குடாப்பாடு, நீர்கொழும்பு.
30. எல்.நிரோசனா,
இல.5, பொற்தொழிலாளர் வீதி, மட்டக்களப்பு.

ஏனைய அதிஷ்டசாலிகளின் விவரங்கள் அடுத்த வாரம் வெளியாகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FD

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-02-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 72

புவனா



ஜூலியா கார்லிங்

இங்கிலாந்தின் பிரபலமான விளையாட்டு வீரர்களில் ஒருவர் வில் கார்லிங். 'ரக்பி' விளையாட்டில் சூரப்புலி.

ஏராளமான பெண் இரசிகைகள் அவருக்கு இருக்கின்றனர். அவர்களில் இளவரசி டயானாவும் ஒருவர்.

கார்லிங்கை டயானா கென்சிங்டன் மாளிகைக்கு அழைத்து விருந்து கொடுத்து கெளரவித்தார்.

இதனை எப்படியோ சில பத்திரிகையாளர்கள் மோப்பம் பிடித்து அறிந்துவிட்டனர்.

வில் கார்லிங் இளம் பெண்களை மட்டுமன்றி, நடுத்தர வயதுப் பெண்கள் பலரையும் தன் காதல் வலையில் வீழ்த்தி கரை கண்டவர்.

கார்லிங்குக்கு முடி அழகாக இருக்கும் பெண்களைத்தான் பிடிக்கும். "முடியை கோதிவிட்டபடியே காதல் செய்வதில் எனக்கு தனி விருப்பம்," என்று பகிரங்கமாகவே கூறி, பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியவர் கார்லிங்.

டயானாவின் முடி அலங்காரமும் கார்லிங்குக்கு பிடிக்கும். டயானா பலமுறை முடி அலங்காரங்களை மாற்றியிருக்கிறார்.

அவரது பல்வேறு முடி அலங்கார புகைப்படங்களை கார்லிங் சேகரித்து வைத்திருந்தார்.

டயானாவைச் சந்தித்தபோது தான் சேகரித்துவைத்திருந்த புகைப்படங்களையும் கொண்டு சென்று, அவரிடம் காண்பித்தார்.

கார்லிங் தனது இரசிகராக இருப்பதையிட்டு டயானா அதிக சந்தோசப்பட்டார்.

"நீங்கள் என் இரசிகை, நான் உங்கள் நீண்ட கால இரசிகர்" என்று டயானாவிடம் கார்லிங் கூறினார்.

டயானாமீது ஒரு கண் வைத்திருந்த கார்லிங், அந்தச் சந்திப்பை டயானாவை வசியப்படுத்தும் சந்தர்ப்பமாக மாற்றிக்கொண்டார்.

அந்த நேரத்தில் ஜூலியா என்னும் அழகியை கார்லிங் காதலித்துக் கொண்டிருந்தான்.

ஜூலியாவுடன் எல்லைமீறி களியாட்டம் போட்ட கார்லிங், அவளை மணந்துகொள்ள திட்டமிட்டிருந்தான்.

ஜூலியாவின் தந்தை ஒரு செல்வந்தர். எனவே ஜூலியாவை மணந்து கொண்டால் சொத்துக்களும் கிடைக்கும், சுகமும் கிடைக்கும் என்று கருதியிருந்தான்.

கார்லிங் 'ரக்பி' விளையாட்டில் நிறைய சம்பாதித்தான். அந்தப்பணம் அவனது உல்லாச விளையாட்டுக்களுக்கு போதுமானதாக இருக்கவில்லை.

"கார்லில் ரக்பி விளையாடும் நாட்களைவிட வேறு விளையாட்டுக்களில் ஈடுபடும் நாட்கள் தான் அதிகம்." என்று பத்திரிகைகள் குறிப்பிடுவதுண்டு.

கார்லிங் பற்றிய இவ்வாறான குத்தல் செய்திகளால் இளம் பெண்களிடம் அவனுக்கு மவுசு கூடியதே தவிர குறையவில்லை.

இத்தகைய செய்திகளை தன் ஆண்மைக்கு கிடைத்த விளம்பரங்களாக மாற்றிக் கொண்டான்.



வில் கார்லிங்

### சொத்து மதிப்பு

ஜூலியாவை மணம் முடிப்பதால் கிடைக்கும் சொத்துக்களைவிட, டயானாவை மணந்தால் கிடைக்கும் சொத்துக்கள் ஏராளம்.

அதனால் ஜூலியாவை கத்தரித்து விட்டு, டயானாவை சுருட்டிக் கொள்ள விரும்பினான்.

டயானாவை காதலிக்க கார்லிங் திட்டமிட்டுக் கொண்டிருக்க, பத்திரிகைகளிலும், அதற்கு தோதாக செய்திகள் வெளியாகின.

ஒரு பத்திரிகை பின்வருமாறு எழுதியிருந்தது. "கென்சிங்டன் மாளிகைக்குள் குதூகலம். 'ரக்பி' வீரருடன் டயானா உல்லாசம்.

பிரபல ரக்பி வீரரான வில் கார்லிங்கின் பரம ரசிகையான டயானா அவரை தன் மாளிகைக்கு வருமாறு இரகசியமாக அழைத்தார்.

இளவரசியின் அழைப்பை தட்ட மனம் வருமா? அதுவும் இரகசிய அழைப்பாயிற்றே. இன்பக் கிளு கிளுப்புடன் அழைப்பை ஏற்றார் கார்லிங்.

கார்லிங் சென்றபோது அவரை வரவேற்ற டயானா, யாருடைய தொந்தரவும் இல்லாத அறையொன்றுக்குள் அழைத்துச் சென்றார். அந்த அறையின் பிரமாண்டமான கதவுகள் டயானாவால் தாழிடப்பட்டன. அதன் பின்னர் என்ன நடந்தது என்பதை யாரும் அறிய முடியவில்லை" என்று எழுதியது.

இன்னொரு பத்திரிகை ஒரு படி மேலே போய்: "ரக்பி வீரர் காலிங்கும் டயானாவும் கென்சிங்டன் மாளிகையை காதல் லீலைகள் புரியும் விளையாட்டரங்காக மாற்றிவிட்டனர். சென்ற புதன்கிழமைதான் இந்த மாற்றம் நிகழ்ந்தது," என்று எழுதியது.

"முடி அழகிகளுடன் காதல் புரிவதில் மன்னரான கார்லிங் இப்போது டயானாவின் தலைமுடியை கோதிவிட்டுக் கொண்டிருக்கிறார். சாள்ஸைவிட்டுப் பிரிந்த பின்னர் தனிமையில் வாடிய டயானாவுக்கு கார்லிங்கின் சேவை அவசியத் தேவைதான்!" என்று மற்றொரு பத்திரிகை கிண்டலடித்தது.

### சந்தேகம்

இச் செய்திகளைப் படித்த டயானாவுக்கு பத்திரிகைகள்மீது கோபமாக வந்தது.

நடக்காத சம்பவத்தை இப்படி எழுதித் தள்ளிவிட்டனரே என்று வருந்தினார்.

இச் செய்திகளை கார்லிங்தான் பத்திரிகைகளுக்குக் கொடுத்தாரோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது.

முன்னர் ஜேம்ஸ் ஹெவிற்றின் அனுபவம் இருந்தமையால் கார்லிங் விடயத்தில் எச்சரிக்கையாக நடந்துகொண்டார் டயானா.

அதன் பின்னர் கார்லிங்கை சந்திப்பதை தவிர்க்கத் தொடங்கினார்.

பல பெண்களை காதலித்து ஏமாற்றியவர் கார்லிங் என்ற தகவலும் டயானாவுக்கு எட்டியது.

டயானா உறவை விரும்பாவிட்டாலும் கார்லிங் டயானாவைச் சந்திக்கப் பலமுறை முயன்றான்.

ஒரு முறை டயானா அவனுடன் தொலை பேசி ஊடாக பேசினார்: "தேவையற்ற கதைகளை பத்திரிகைக்ள் கட்டிவிடுகின்றன. அதனால் நாம் ஏன் சந்திக்க வேண்டும்? வீண் குழப்பங்களுக்கும், வதந்திகளுக்கும் இடமளிப்பானேன்?" என்று பக்குவமாக கூறியிருக்கிறார்.

கார்லிங் கெஞ்சிக் கூத்தாடியும் டயானா சந்திக்க மறுத்துவிட்டார்.

"கார்லிங்கை நினைத்தால் பரிதாபமாகவும் இருக்கிறது. மறுபுறம் எரிச்சலாகவும் இருக்கிறது," என்று கார்லிங்கைப் பற்றி தன் சிநேகிதிகளிடம் கூறினாராம் டயானா.

டயானாவுடன் காதல் கைகூடாததால், டயானாவும் தானும் நெருக்கமாக இருந்ததாக கார்லிங்கே சிலரிடம் கதை விட்டதாகவும் டயானாவின் சிநேகிதிகள் கூறுகின்றனர்.

இதன் பின்னர் கார்லிங் பிரிட்டனின் பிலபல உதைபந்தாட்ட வீரரான ஹலிலினேகர் என்பவரது மைத்துணியான அலி கொக்கையின் என்பவருடன் நெருக்கமாகினார்.

இதனை அறிந்த டயானா நகைச்சுவையாக, "அலி கொக்கயினுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் கூறவேண்டும்!" என தன் சிநேகிதிகளிடம் கூறினாராம்.

டயானா கூறியது பலித்தது. நெருங்கி உறவாடிவிட்டு அலி கொக்கையினையும் கத்தரித்துவிட்டார் கார்லிங்.

கார்லிங் விவகாரத்தின்பின்னர் மற்றொரு காதல் வலை காத்திருந்தது டயானாவுக்காக.

**(அடுத்த வாரமும் வரும்)**

## மணக்கத் துடித்த 'ரக்பி' வீரர்






### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | கே.மகேஸ்வரி, 299, பழைய கல்முனை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





> மானம் சிறிதென் றெண்ணி
> வாழ்வு பெரிதென் றெண்ணும்
> ஈனர்க் குலகந் தனில்-கிளியே!
> இருக்க நிலைமை யுண்டோ?
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# இளமையில் கல்

வீரநாதன் என்ற அரசன் பெயரைப் போலவே வீர மானவன். சிறந்த குணங் களும், மக்கள் நலனில் அக்கறையும் உள்ளவன். ஆனால் அவன் படிக்க வில்லை.

அவனது தந்தை அரசனாக இருந்த போது, சிறுவனான வீரநாதன் படிக்கா மல் வேட்டையாடுவதிலும், கேளிக்கை, விளையாட்டு என்று பொழுதைப் போக்கினான். தந்தையும் இதைக்கண்டு கொள்ளவில்லை.

பின், தந்தை இறந்துவிட வீரநாதன் கையில் ஆட்சிப் பொறுப்பு வந்தது.

அந்நாட்டில் புலவர் ஒருவர் பாடல்களை இயற்றிப்பாடி அந்நாட்டு மக்களை மகிழ்வித்து வந்தார். இதனால் அவரை எல்லோரும் வாயாரப் புகழ்ந் தனர்.

அந்தப் புலவரைப் போல தானும் பாடல்களை இயற்றிப்பாடி, மக்கள் தன்னைப் புகழவேண்டும் என வீரநாதன் ஆசைப்பட்டான். எனவே, அரச அவை யில் இருந்த புலவர் ஒருவரை அழைத்து, பாடல்களை தனக்கு இயற்றக் கற்றுக் கொடுக்கும்படி அமர்த்தினான்.

இரண்டு வருடம் அந்தப் புலவரிடம் படித்தும் அரசனால் ஒரு வரிகூட பிழை யில்லாமல் எழுத முடியவில்லை. அவ்வா றானால் பாடல்களை அவனால் எவ்வாறு இயற்ற முடியும்? "இரண்டு வருடமாகப் படித்தும் என்னால் பாடல்களை இயற்ற முடியவில்லை. இதற்கு என்ன காரணம் என்று நாளை வந்து கூறவேண்டும். இல்லா விட்டால் கடுமையான தண்டனை கிடைக் கும்!" என்று புலவரிடம் கூறினான் வீரநாதன்.

'அரசருக்கு ஆரம்ப அறிவே இல்லை. இதை எப்படி அவருக்கு விளங்க வைப்பது? சிலவேளை அப்படிக்கூறினால் கோபத்தில் ஏதாவது செய்துவிடுவாரோ?' எனப் பல வாறு யோசித்துக் கொண்டிருந்தார் புலவர்.

இதைப் புலவரின் பேத்தி கவனித்தாள். உடனே தனது தாத்தாவிடம் வந்து, என்ன காரணம் என்று வினவினாள். புலவரும் அரசவையில் நடந்ததைக் கூறினார். அவரது கேள்விக்குத்தான் பதிலளிப்பதாகக் கூறிய புலவரின் பேத்தி, மறுநாள் புலவருடன் அரண்மனைக்குச் சென்றாள்.

அரண்மனையில் அரசனைப் பார்த்து, "அரசே! தங்களின் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். ஆனால் நான் செய்வதை நீங்கள் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்." என்று துணிச்ச லாகக் கூறினாள். அரசனும் அதற்குச் சம்மதித்தான்.

புலவரின் பேத்தி, அரசனை ஆற்றங் கரைக்கு அழைத்துச் சென்று, கரையில் அமர்ந்து, பிடிபிடியாக மண்ணை எடுத்து ஆற்றில் போட்டாள். இதை வெகுநேரமாக அவள் செய்ய, பொறுமை இழந்த மன்னன், "என்ன செய்கிறாய்?" என்று கேட்டான்.

"இந்த மண்ணை ஆற்றின் நடுவில் போட்டு, அக்கரைப்போக பாலம் அமைக்கி றேன்," என்றாள் புலவரின்பேத்தி.

அதற்கு அரசன், "பாலம் கட்டவேண்டு மானால் சரியாக அடித்தளம் அமைத்துத் தான் மண்போட வேண்டும். இல்லாவிட்டால், எவ்வளவு மண் போட்டாலும் நிற்காது!" என்றான்.

உடனே சிறுமி, "அடிப்படைக்கல்வி இல்லாமலேயே, பாடல்களை இயற்ற முயலும் போது, என்னால் அடித்தளம் இல்லாமல் பாலம் கட்ட முடியாதா?" என்று கேட்டாள்.

அரசனுக்கு அப்போதுதான் எல்லாம் புரிந்தது. இளமையில் கல்லாதது எவ்வளவு பெரிய தவறு என்பதை அப்போதுதான் உணர்ந்தார்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



← போலந்து நாட்டில் அப்பர்வெல்டர் என்ற இடத்தில் தேனீக்கள் வளர்ப்பதற்காக தேனீக்கூடுகள் மனித உருவத்தில் அமைக்கப் பட்டுள்ளன.



→ இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் டிப்பா என்னுமிடத்தில் மேலு என்ற ஒட்டகத்தின் சமாதி இது. இந்த ஒட்டகம் உயிருடன் இருந்தபோது, பாத்திரம் ஒன்றைக் கட்டி வீடுவீடாகச் சென்று பிச்சை எடுக்கும். அதில் கிடைப்பது தான தர்மங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.



← புகழ்பெற்ற ஃபிரெஞ்ச் பொற்கொல்லரான ஃபெபரேஜ் செய்த செயற்கைச் செடி இது. கலைநுணுக்கத்துடன் காற்றில் அசைந்தாடும் நளினமான இச்செடி வைரங்களாலும், பொன்னாலும் செய்யப் பட்டது.



→ அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஜேம்ஸ் ஹிலியாட் என்பவரது வீட்டில் காய்ந்த எலுமிச்சம் பழம் ஒன்று தேனீர் ஏதனம் போன்றிருந்தது.

# அகதா கிறிஸ்டி



அகதா கிறிஸ்டி என்பவர் பல மர்மக் கதைகளை எழுதிய பிரபல ஆங்கில பெண் எழுத்தாளர். இவர் 1890ம் ஆண்டு இங்கிலாந்தின் தார்குவேயில் பிறந்தார்.

இவர் முதலாம் உலகப் போரின்போது, மருத்துவமனை ஒன்றில் மருந்து வழங்குபவராகப் பணிபுரிந்தார். அப்போது, இரசாயனப் பொருட்களின் செயற்திறன், அவற்றின் விஷத்தன்மை ஆகியவற்றை அறிந்து கொண்டார். இந்தத் தொழில் நுட்பங்கள்தான் அவரை பின்னாளில் பெரிய துப்பறியும் எழுத்தாளராக்க உதவியது.

இவர் பல நாடகங்களும், 70க்கும் மேற்பட்ட துப்பறியும் நாவல்களும் எழுதியுள்ளார். இவரது நாவல்கள் அனைத்திலும் 'மர்மம்' நிறைந்திருக்கும்.

இவர் 1976ம் ஆண்டு தனது 86வது வயதில் இயற்கை எய்தினார். இவரது மறைவுக்குப் பின் இவரது கதைகள் திரைப்படமாகவும், தொலைக்காட்சித் தொடராகவும் உருப்பெற்றுள்ளன.

# மூன்று நிமிடங்களுக்குள்...

வெறும் 3 நிமிடங்களுக்குள் 27 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தியாகின்றன. 42 தொன் நிறையுள்ள சீமெந்தும், 1500 லீட்டர் டீசலும், 100 சதுர அடி புகைப்பட, திரைப்படச் சுருள்களும் உற்பத்தியாகின்றன. இவற்றைத் தவிர 300 கிலோ நிறையுள்ள துணிகளும், 2100 ரெடிமேட் உடைகளும் உற்பத்தியாகின்றன.

இவற்றைவிட இந்த 3 நிமிடங்களுக்குள் உற்பத்தியாகும் வேறு சில பொருட்கள் இவை: 3 ஜோடி படுக்கை விரிப்புக்கள், 4 தையல் இயந்திரங்கள், 9 சைக்கிள்கள், 10 புகைப்படக் கருவிகள், 15 மோட்டார் கார்கள், 87 கடிகாரங்கள், 34,800 சோடி கை, கால் உறைகள்.

இவையெல்லாம் எந்த நாட்டில் உற்பத்தியாகின்றன என்று தெரியுமா? தொழில் துறையில் முன்னேற்றமடைந்துள்ள ஜெர்மனியில்தான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.02.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 282
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 280

**பரிசுக்குரியவர்:**
கு. புருஷோத்தமன்,
மட்/ கிரான் மகா வித்தியாலயம், கிரான்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஜெரோம் பிரவீன், சென் அந்தனிஸ் கொலேஜ், வத்தளை. | து. கிருஸ்ணசாமி தர்ஷினி, சென் ஜோசப் த.ம.வி., மஸ்கெலியா. |
| கருணாகரம் சந்திரமோகன், விபுலானந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-01. | ஷாமினா தேவதாசன், கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.04. |
| வி. ஜனகன், சென் பீட்டர்ஸ் கல்லூரி, கொழும்பு-06. | எஸ். சுதர்சன், ஸ்ரீ முத்துமாரியம்மன் த.ம.வி., கம்பளை. |
| ஃபாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | சுகுமாரன் ரூபி, சென் சிசிலியா, பெ.ம.வி., மட்டக்களப்பு. |
| கௌ. மோஷிகரன், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. | ஹேமமயூரி சுந்தரவர்ணன், மகளிர் பாடசாலை, நுவரெலியா. |

# உலகில் பெரிய விஷயங்கள்

**உலகில் வறட்சியான இடம்:**

தென் ஆபிரிக்காவிலுள்ள அரிக்கா என்னுமிடம். இங்கு வருடத்திற்கு இரண்டு சதவீதம்தான் மழை பெய்கிறது. சஹாரா பாலைவனத்திலும் பார்க்க வறட்சி இங்கு அதிகம்.

**உலகில் பெரிய பாலைவனம்:**

ஆபிரிக்காவில் உள்ள சஹாரா பாலைவனம். 3200 மைல் பரவிக் கிடக்கும் இப்பாலைவனம், ஐரோப்பாக் கண்டங்கள் பலவற்றை ஒன்றாய்ச் சேர்த்தால் இடைக்கும் பரப்பளவானது.

**உலகில் வேகமான வெந்நீர் ஊற்று:**

அமெரிக்காவில் எல்லோஸ்டோன் சர்வதேச பூங்காவில் உள்ள 'கிராஸ்ட் கோஸர்' என்ற வெந்நீர் ஊற்று. இது 30 மாடிக் கட்டடங்களின் உச்சிக்குப் போகுமளவுக்கு வேகமாக வெந்நீரை வெளியேற்றுகிறது.

**உலகில் உயரமான அலை:**

கனடா நாட்டின் கரை ஓரத்தில் இருக்கும் 'பே ஒஃப் ஃபன்டி' என்னுமிடத்தில் கடல் அலைகளின் உயரம் 60 அடிக்கும் மேலாக இருக்கும்.

**உலகில் வேகமாக காற்று வீசும் இடம்:**


தென் துருவத்தில் உள்ள அடெலி என்னுமிடத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 100 மைல் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

**உலகில் பெரிய கடல்:**

தென் சீனக்கடல்தான் உலகில் பரப்பளவில் பெரிய கடல். இதன் பரப்பளவு 11 இலட்சத்து 48 ஆயிரத்து 400 சதுர மைல்களாகும். இதன் ஆழம் 4,802 அடியாகும்.

# அபூர்வ நண்பர்கள்

↓ சுறாமீன்களைக் கண்டால் ஏனைய மீன்கள் ஓடி ஒளிந்து கொள்ளும். ஆனால் இந்தப் பயங்கர மீனுடன் 'ரிமோரா' என்ற மீன் பயமில்லாமல் அதன் கூடவே எங்கு சென்றாலும் போகிறது. அதுவும் நீந்தாமல்.



ரிமோராவின் தலைப்பகுதியில் ஒட்டிக் கொள்ளும் பசை போன்ற ஒரு தட்டு உள்ளது. இது சுறாமீனின் தாடைக்குக் கீழே உள்ள பகுதியுடன் சரியாக ஒட்டிக் கொள்கிறது.

ரிமோரா, சுறாமீனுடன் வலியச் சென்று ஒட்டிக்கொண்டிருப்பதை, சுறா மீன் தடுப்பதில்லை. தான் வேட்டையாடும் இரையில் கூட கொஞ்சத்தை ரிமோராவுக்குக் கொடுக்கிறது.

***



↑ 'கேட்டில் எக்ரெட்' என்ற குருவிகள் இந்தியக் காண்டாமிருகங்களுக்கு உற்ற நண்பனாகத் திகழ்கின்றன. இந்தக் குருவிகள் எப்போதும் காண்டாமிருகத்தின்மீது உட்கார்ந்து சவாரி செய்யும். காண்டாமிருகத்தின் எதிரிகள் ஏதாவது தென்பட்டால் உடனே இவை 'கீச் மூச்' என்று சத்தமிட்டு எச்சரிக்கும்.

அத்துடன் காண்டாமிருகத்தின் உடம்பில் உள்ள பூச்சிகளையும் 'கேட்டில் எக்ரெட்' குருவிகள் பிடித்துச் சாப்பிடும். இதனால் இந்தக் குருவிகளை விட வேறு எந்தப் பறவைகள் தன்மீது வந்தமர்ந்தாலும் காண்டாமிருகங்கள் அனுமதிப்பதில்லை.

***

→ முதலையின் வாயில் சிக்கினால் எதுவுமே உயிரோடு திரும்பாது- புளோவர் பறவையைத் தவிர. புளோவர் பறவை முதலையின் திறந்த வாயினூடாக கடவாய்ப் பகுதிவரை உள்ளே செல்லும். இதற்கு என்ன காரணம் தெரியுமா?

புளொவர் பறவைகள் முதலையின் வாயில் சிக்கியிருக்கும் மாமிசத்துணுக்குகளைச் சுத்தப்படுத்துகின்றன. அதனால் முதலைகள் அப்பறவைகளை ஒன்றும் செய்வதில்லை.





படிப்பகம்

www.padippakam.com

மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

# டிசம்பர் பௌர்ணமி

## 14



முன்கதை சுருக்கம்

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.

இனி......

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

**வி**சாலி அழைப்பிதழின் முகப்பில் அச்சாகியிருந்த தன் ஃபோட்டோவையும் நித்தியனின் ஃபோட்டோவையும் இமை கொட்டாமல் பார்த்தாள். ருத்ரமூர்த்தி பக்கத்தில் வந்து நின்று கண் சிமிட்டினார்.

"ஃபோட்டோ எப்படீம்மா இருக்கு?"

"ஃபென்டாஸ்டிக் மாமா...! இந்த அழைப்பிதழை பார்த்துட்டு உங்க சன் என்ன சொன்னார் மாமா?"

ருத்ரமூர்த்தி சிரித்தார்.

"பிரிண்டர்ஸிலிருந்து பத்திரிகைகளை வாங்கிட்டு நேரா இங்கேதாம்மா வர்றேன். இனிமேதான் நித்தியனுக்கு கொண்டு போய்க் காட்டணும்"

"மாமா....!"

"என்னம்மா...?"

"இந்த ஃபோட்டோவோட ப்ளாக்ஸ் எனக்கு வேணும். நான் என்னோட ஃப்ரண்ட்ஸ்களுக்காக தனியா கார்டு பிரிண்ட் பண்ணப்போறேன்."

"ஃபோட்டோ ப்ளாக்ஸ் தானே...? நாளைக்கு இந்தப் பக்கம் வரும்போது, நானே கொண்டு வந்து தர்றேன்."

"நீங்க அதுக்காக சிரமப்பட்டு வராதீங்க மாமா. நாளைக்குக் காலையில் நான் லைப்ரரிக்கு போகும்போது வீட்டுக்கு வந்து கலெக்ட் பண்ணிக்கிறேன். ஃபோட்டோவோட ப்ளாக்ஸ கலெக்ட் பண்ற சாக்கில் உங்க மகனையும் பார்த்த மாதிரி இருக்கும்!"

ருத்ரமூர்த்தி பலமாய்ச் சிரித்தார்.

"அது இனிமே உன்னோட வீடம்மா. நீ எப்ப வேணும்னாலும் வரலாம்."

"உங்க மகன் இப்போ வீட்ல இருக்காரா... இல்லை வெளியே கிளம்பிட்டாரா மாமா?"

"காலையில ஒன்பது மணிக்கு கம்பெனிக்கு போறேன்னு கிளம்பிப் போனான்."

"அப்படீன்னா இப்போ கம்பெனியில்தான் இருப்பார்."

"ஆமா!"

"ஃபோன் பண்ணிப் பார்க்கட்டுமா மாமா?"

"தாராளமா பண்ணும்மா!"

விசாலி ஒரு குதிநடை போட்டுக் கொண்டு டெலிஃபோனை நோக்கிப் போக விஜயராகவன், ருத்ரமூர்த்தியை ஏறிட்டார். "உங்களுக்கு எவ்வளவு இன்விடேஷன் தேவைப்படும் சம்பந்தி?"

"ரெண்டாயிரம்."

"பிசினஸ் சர்க்கிளுக்கும் சேர்த்து ரெண்டாயிரம் போதுமா?"

"போதும்! நான் அதிகமா யாரையும் இன்வைட் பண்ணப்போறதில்லை. உங்களுக்கு எவ்வளவு இன்விடேஷன் வேண்டியிருக்கும்?"

"ஐயாயிரம்!"

விஜயராகவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே விசாலி வந்தாள். இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு ருத்ரமூர்த்திக்கு முன்பாய் வந்து நின்றாள்.

"அங்கிள்....!"

அவர் ஏறிட்டார்.

"என்னம்மா?"

"உங்க மகன் ஆபீஸுக்கு போகலை போலிருக்கே அங்கிள்."

"ஆபீஸுக்கு போறதுக்கு முந்தி ஆடிட்டரைப் பார்க்கணும்னு சொல்லிட்டிருந்தான். ஒருவேளை ஆடிட்டர் ஆபீஸுக்குப் போயிருக்கலாம்."

"அங்கிள்... உங்க சன் ஆபீஸுக்குப் போகாமே ஒ.பி. அடிச்சுட்டு வெளியே சுத்திட்டிருக்கிறதை நானே பார்த்தேன். அவர் ஃபிரண்டோட சிஸ்டர்க்குக் கல்யாணமாம். பட்டுப்புடவை எடுக்கிறதுக்காக வந்திருந்தார்."

ருத்ரமூர்த்தி லேசாய் முகம் மாறினார். "ஃபிரண்டோட சிஸ்டர்க்கு கல்யாணம்னா சொன்னார்?"

"ஆமா.."

"ஃபிரண்டோட பேரு...?"

"என்னமோ ஒரு பேரைச் சொன்னார். முரளியோ முகுந்தனோ.... சரியா ஞாபகமில்லை. பட் புடவை எடுக்கிறதுக்காக அந்தக் கல்யாணப் பொண்ணும் வந்திருந்தா... ஒரு ஃப்ரண்டோட சிஸ்டர் கல்யாணத்துக்கு அவ்வளவு சிரத்தை எடுத்துக்கிட்டு பட்டுப் புடவை கடை வரைக்கும் வந்திருக்காரேன்னு ரொம்பவும் சந்தோஷமாயிருந்தது அங்கிள்."

விசாலி பேசிக்கொண்டே போக...

ருத்ரமூர்த்தியின் இதய மையத்தில் ஒருபுயல் மையமிட்டு உட்கார்ந்து கொண்டது.

★★★

**அ**ழைப்பு மணியின் சத்தம் கேட்டு கதவைப் போய்த் திறந்த முகுந்தன் அந்த



மத்தியான நேரத்தில் வியப்புக்குப் போனான்.

வாசற்படியில் சந்தா.

"வாங்க சிஸ்டர்.. என்ன இந்த நேரத்துல?"

வெய்யிலில் வியர்த்துப்போயிருந்த தன் உள்ளங்கையில் தேக்கி வைத்திருந்த சிறிய பூப்போட்ட கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"முகுந்தன் இன்னிக்கு நீங்கள் நித்தியனைப் பார்த்தீங்களா?"

"இல்லையே... சாயந்திரம் அஞ்சு மணிக்கு மேல இங்கே வர்றதா சொல்லியிருந்தான்... ஏன் என்ன விஷயம்?"

"நான் உடனடியா அவரைப் பார்க்கணும். விஷயம் ரொம்பவும் முக்கியம்."

"ஆபீஸுக்கு ஃபோன் பண்ணிப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன்... அவர் அங்கே இல்லை. அதான் உங்ககிட்ட வந்தேன்."

"ரொம்பவும் டென்ஷனா இருக்கீங்க. மொதல்ல உட்காருங்க சிஸ்டர்."

சாந்தா புதிதாய் வியர்த்துக்கொண்டே உட்கார்ந்தாள். முகுந்தன் அவளுக்கு எதிரே உட்கார்ந்தபடி கேட்டான்.

"என்ன விஷயம் சொல்லுங்க.....!"

"இன்னிக்கு காலையில ஒரு இன்ஸ்பெக்டர் வந்து என்னை மிரட்டிட்டு போனார்."

முகுந்தனின் நெற்றிப்பரப்பு சுருங்கியது. "இன்ஸ்பெக்டர் வந்து மிரட்டிட்டுப் போனாரா... எதுக்கு...?"

சாந்தா விஷயத்தைச் சொல்ல, முகுந்தனின் முகம் கோபச் சிவப்புக்குப் போயிற்று.

"இன்ஸ்பெக்டர் பேர் என்ன சொன்னீங்க?"

"ராஜகணேஷ்."

"எந்த பொலிஸ் ஸ்டேஷன்?"

"பி.ஃபைவ். ஒரு மணி நேரத்துக்குள்ளே ஸ்டேஷனுக்கு வந்து ஸ்டேட்மெண்ட் தரணும்னு சொல்லிட்டுப்போயிட்டார். நான் நித்தியன் கிடைப்பாரான்னு ட்ரைபண்ணிப் பார்த்தேன். கிடைக்கலை. ஹாஸ்டல்ல இருக்கப் பயமாயிருந்தது. வெளியே வந்து கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போய் ரெண்டு மணி நேரம் உட்கார்ந்து பொழுதை போக்கிட்டு இங்கே வர்றேன்."

"நித்தியனை நீங்க மறுபடியும் கான்டாக்ட் பண்ணினீங்களா?"

"வழியில ஒரு டெலிஃபோன் பூத்திலிருந்து அவருடைய ஆபீஸுக்கு ட்ரை பண்ணினேன். என்கேஜ்ட்டோன் கேட்டுக்கிட்டே இருந்தது."

முகுந்தன் எழுந்தான். "இங்கே இருந்து ட்ரை பண்ணிப் பார்க்கலாம்."

பக்கத்து சுவரோர மேஜை மேல் இருந்த டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக்கொண்டு டயலில் எண்களைத் தட்டினான்.

ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ! ருத்ரா கம்பெனி ஹியர்."

"மிஸ்டர் நித்தியன் ப்ளீஸ்..."

சில விநாடிகளுக்குப் பிறகு நித்தியனின் குரல் ரிஸீவரில் கேட்டது. முகுந்தன் வெடித்தான்.

"காலையிலிருந்து எங்கேடா போனே...?"

நித்தியன் மறுமுனையில் சிரித்தான். "அமிஞ்சிக்கரையில் ஒரு ப்ளாட் வாடகைக்கு வந்தது. அதைப் பார்த்துப் பேசி அட்வான்ஸ் குடுக்கப் போயிருந்தேன்."

"ப்ளாட்டா...? எதுக்குடா ப்ளாட்?"

"நாளைக்கு கல்யாணம் முடிஞ்சதும் சாந்தாவைக் கூட்டிக்கிட்டு என்னோட வீட்டுக்கா போக முடியும்? ப்ரோக்கர் கிட்ட ஒரு ப்ளாட் வேணும்னு சொல்லியிருந்தேன். காலையில ஆபீஸுக்கு போகும்போது வழியில் ப்ரோக்கரைப் பார்த்தேன். அமிஞ்சிக்கரையில் ஒரு ப்ளாட் ஒண்ணு வாடகைக்கு வருது... பார்க்கறீங்களான்னு கேட்டார். சரின்னு அவரையும் கார்ல ஏத்திக்கிட்டு கிளம்பிட்டேன். ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் ஆபீஸுக்கு வந்தேன்."

முகுந்தன் படபடத்தான்.

"இங்கே விஷயம் விபரீதமாப் போயிட்டிருக்கு. நீ என்னடான்னா குடித்தனம் நடத்த ப்ளாட் பார்க்க போயிட்டியா?"

"நீ என்னடா சொல்றே?"

"இப்ப... நீ... ப்ரீயா...?"

"ப்ரீதான்...ஏன்...?"

"நீயும் நானும் இப்போ பி.ஃபைவ் பொலிஸ் ஸ்டேஷனுக்கு போக வேண்டியிருக்கு...?"

"எதுக்கு?"

"நேர்ல வந்து சொல்றேன். ரெடியா இரு!" முகுந்தன் ரிஸீவரை வைத்து விட்டு, சாந்தாவிடம் திரும்ப அவள் கவலையாய் கன்னத்தில் கை வைத்திருந்தாள்.

"சிஸ்டர்"

நிமிர்ந்தாள்.

"நீங்க வீட்லயே இருங்க... நித்தியனும் நானும் பொலிஸ் ஸ்டேஷன் வரைக்கும் போய் அந்த இன்ஸ்பெக்டர்கிட்டே பேசிட்டு வந்துடறோம்."

"வேண்டாங்க முகுந்தன். விவகாரம் பெரிசாயிடும்."

"நீங்க பயப்படாதீங்க சிஸ்டர். எனக்குத் தெரிஞ்ச ஒரு வெல்-நோட்டட் லாயரையும் கூட்டிக்கிட்டுத்தான் ஸ்டேஷனுக்கு போறோம். பொலிஸ் எப்பவுமே சட்டம் தெரியாதவங்களைத்தான் மிரட்டிப் பார்க்கும். அந்த இன்ஸ்பெக்டர் ராஜகணேஷை உங்ககிட்ட மன்னிப்பு கேட்க வைக்கிறோம்...போதுமா?"

சாந்தா கண்களில் நீர் கோர்த்தாள்.

"முகுந்தன்.....!"

"சொல்லுங்க சிஸ்டர்."

"நாளைக்கு எனக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்குமா?"

"உங்களுக்கு ஏன் இந்த அவநம்பிக்கை?"

"நடக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தா எனக்கு சந்தேகமாயிருக்கு."

"ஒரு சந்தேகமும் வேண்டியது இல்லை. நாளைக்கு நல்ல நாள். பௌர்ணமிதான். அந்த நாள்ல உங்களுக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்கப் போறது நிச்சயம்... இப்ப நான் நித்தியனைப் பார்க்கத்தான் கிளம்பிட்டிருக்கேன். மொதல்ல இந்தப் பொலிஸ் பிரச்சனைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கணும்... ஒரு மணி நேரத்துல நானும் நித்தியனும் இங்கே வர்றோம். ஆமா நீங்க லஞ்ச் சாப்பிட்டீங்களா?"

"இல்லை! எனக்கு வேண்டவும் வேண்டாம் பசியில்லை..."

"சரி...ஃப்ரிஜ்ல ஃப்ரூட்ஸ் இருக்கு எடுத்துக்குங்க.... கதவை உள்பக்கமாலாக் பண்ணிக்குங்க..."

முகுந்தன் பக்கத்து அறைக்குப்போய் துரித கதியில் டிரஸ் மாற்றிக்கொண்டு கிளம்பினான்.

★★★

**மு**குந்தன் சொன்னதைக் கேட்டு கொதித்துப்போன நித்தியன் பி.ஃபைவ் பொலிஸ் ஸ்டேஷனை நோக்கி காரை வேகமாய் விரட்டிக் கொண்டிருந்தான். பொருமினான்.

"முகுந்தன்! இதெல்லாம் என் அப்பாவோட கைங்கர்யமாத்தான் இருக்கும்னு நினைக்கிறேன்."

"உன்னோட அப்பா இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து போவாரா என்ன?"

"அவர் பணத்துக்காக எதையும் பண்ணக்கூடியவர். மனசுல ஒண்ணை நினைச்சா எப்பாடு பட்டாவது சாதிக்கக் கூடிய ஜாதி."

"சாந்தா அரண்டு போயிட்டா."

"அந்த இன்ஸ்பெக்டர் பேர் என்ன?"

"ராஜகணேஷ்."

"ஒரு பொண்ணைப் பொட்டைத்தனமா வந்து மிரட்டிட்டு போலாம்னு எந்தச் சட்டம் சொல்லுதுன்னு கேட்கலாம்."

கார் பி.ஃபைவ் பொலிஸ் ஸ்டேஷனை நோக்கிச் செலுத்தப்பட்ட ஒரு அம்பைப் போல் பறந்தது.

(பௌர்ணமி தொடரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

## 26

ராஜையா

**இ**ராணுவத்தின் சுயதேவைப் பூர்த்திக்காக நீண்ட கால திட்டம் தயாரித்தார் சதாம்.

போராயுதங்களை சுயமாய் செய்து கொள்வதற்குத் தேவையான பாகங்களையும், தொழில் நுட்பங்களையும் அமெரிக்க தனியார் கம்பெனிகளிடமிருந்தும், மேலை நாடுகளிலிருந்தும் வாங்க ஈராக் அரசு இரகசியமாக 'டம்மி' கம்பெனிகள், போலி வியாபார 'ஏஜென்ஸி'க்களை உருவாக்கியது. இவை வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்கும். ஆனால் யாருக்காக வாங்குகிறது என்பது சதாமைத் தவிர வெளியில் யாருக்கும் தெரியாது.

இப்படி வாங்கிக் குவிக்கப்பட்ட உதிரிப் பாகங்கள் ஈராக்கில் ஒன்று சேர்க்கப்பட்டு, போர்க்கருவிகளாக ஈரான் மீது வீசப்பட்டன...

ஈரான்-ஈராக் போர் சில நாட்களுக்குள் முடிந்துவிடும் என்றுதான் சதாம் நினைத்தார். ஆனால் அது நீண்டு கொண்டே சென்றது.

போர் நிறுத்தம் செய்யுமாறு இரு நாடுகளையும் ஐ.நா.சபை வற்புறுத்தியது. இதை சதாம் உடனே ஏற்க முன்வந்தார். ஆனால் கொமேனி "சதாம் ஆட்சியை தூக்கியெறியாமல் போரை நிறுத்தமாட்டேன்" என்று வீம்பு செய்தார்.

இப்போது உலக நாடுகளின் கோபம் ஈரான்மீது திரும்பியது...

இதனால் ஏற்பட்ட பாதிப்பை சமாளிக்க முடியாத கொமேனி கடைசியில் போர் நிறுத்தத்திற்கு சம்மதிப்பதாய் அறிவித்தார்.

ஓயவே ஓயாது என்று கருதப்பட்ட எட்டாண்டு போர் 1988 ஜூலை 18-ந் தேதி ஒய்ந்தது.

இப்போரில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஈராக் வீரர்கள் உயிரிழந்தார்கள். மூன்று லட்சம் பேர் படுகாயம் அடைந்தார்கள். உள்நாட்டில் பொருளாதார நெருக்கடி தலைவிரித்தாடியது. ஈராக் வாங்கிய வெளிநாட்டுக் கடன், முன் எப்போதும் இல்லாத அளவு ஏறியிருந்தது.

ஜனாதிபதி சதாம் இப்பிரச்சனைகளை ஒரு பக்கம் சிரமத்துடன் சமாளித்துக் கொண்டே இன்னொரு பக்கம் அடுத்தபோருக்கான தயாரிப்பு வேலையில் இறங்கினார்....

அவரது அடுத்த குறி குவைத் அல்ல! இஸ்ரேல்...!

'பென்டகன்' அமெரிக்க இராணுவத் தலைமையகம். அடுக்கு மாடிக்கட்டடம். அதன் ஏழாவது மாடியில் மரச் சுவர்களால் தடுக்கப்பட்ட அறை.



அமெரிக்க அரசின் கொள்கைகளை வகுக்கும் இரண்டு உயர் அதிகாரிகள் அந்தப் புகைப்படத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகங்கள் கேள்விக் குறியால் இறுகிப்போயிருந்தன

அந்தப் புகைப்படம ஈராக்கை வேவு பார்க்கும் அமெரிக்க செயற்கைக் கோள் எடுத்து அனுப்பியது. புகைப்படத்தில் இஸ்ரேல் இருக்கும் திசை நோக்கி ஈராக் எல்லைப்பகுதியில் ஏவுகணைத் தளங்கள் புதிதாக அமைக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

சந்தேகமில்லை...! இஸ்ரேலைத் தாக்க சதாம் முடிவு செய்துவிட்டார். அதற்கான ஏற்பாடுகளை இரகசியமாகச் செய்து வருகிறார்...!

அவர் ஏன் இஸ்ரேலைத் தாக்கமுடிவு செய்தார்? பாலஸ்தீனத்தை விடுவிக்கவா? அல்லது தன் அணு உலையைத் தாக்கி அழித்ததற்காக இஸ்ரேலை பழி வாங்கவா? என்று தீர்மானிக்க முடியாமல் மூளையை குடைந்து கொண்டிருந்தார்கள், அமெரிக்க அதிகாரிகள்.

சதாம் உசேனின் சமீப கால நடவடிக்கைகள் அவர்களை ரொம்பத்தான் கலங்கடித்து வருகின்றன...

எட்டாண்டுகளாய் 'இழுத்துக்கோ-பறித்துக்கோ' என்று நீண்டுகொண்டே சென்ற ஈரான்-ஈராக் யுத்தம் சில மாதங்களுக்கு முன்தான் ஒய்ந்திருந்தது. இந்தப் போரில் அமெரிக்கா ஈராக்குக்கு ஆதரவு கொடுத்தது. அமெரிக்க தாசரான மன்னர் ஷாவை ஆட்சியிலிருந்து விரட்டியடித்தாலும், அவர் அமெரிக்காவில் ஒளித்து வைத்திருக்கும் சொத்துக்களை ஈரான் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வற்புறுத்தி, ஈரானிலிருந்த அமெரிக்க தூதரகத்தையும், தூதரக அதிகாரிகளையும் பிடித்து வைத்துக்கொண்டதாலும் கொமேனி மீது கடுப்பாகியிருந்த அமெரிக்க, இப்போரில் ஈரான் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று விரும்பியது. இதனால் சதாம் தன் இராணுவ பலத்தை அதிகரித்துக் கொண்டபோது அதை அமெரிக்கா ஆட்சேபிக்கவில்லை.

ஆனால், யுத்தம் முடிந்தபிறகு, சதாம் இராணுவ வலிமையை தானாகவே குறைத்துக் கொள்வார் என்று அமெரிக்கா எதிர்பார்த்தது...

இராணுவ வலிமையை கட்டிக்காக்க அதிகச் செலவு பிடிக்கும். போர் பாதிப்பு காரணமாக ஏற்கனவே தள்ளாடிக் கொண்டிருக்கும் ஈராக் பொருளாதாரம் இதற்கு இடம் கொடுக்காது. ஆகவே, பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சதாம் தன் படைப் பிரிவுகள் பலவற்றை கலைத்து விடுவார் என்ற எதிர்பார்ப்புடன் அது காத்திருந்தது. ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது.

சதாம் ஈராக்கின் இராணுவ பலத்தை குறைத்துக் கொள்ளாதது மட்டுமல்ல; மேலும் மேலும் வலுப்படுத்திக் கொண்டும் வந்தார்...

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# 15 உதட்டில் ஒரு முத்தம்

**இதுவரை**

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு இறக்கிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
அமைச்சரை கொலை செய்ய
செல்லும் கைலாஷ்
மாட்டிக்கொள்கிறான்.
மின்சார வயரைப் பிடித்து
தற்கொலை செய்கிறான்.
அடுத்தத்திட்டம் தயாராகிறது.

**இனி....**

புதுடில்லி.

கார்களுக்கு நடுவே நடந்து வரும் விக்ரமை நிழலிலிருந்து ஜலால் கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஹல்லோ விக்ரம்!"

விக்ரம் நிமிர்ந்தான். "நீயா?"

"என்னை நினைவிருக்கிறதா?" ஜலால் விக்ரமை நெருங்கினான்.

"ஏன் நினைவில்லாமல்? அரவிந்த் 'நம் பொது எதிரி என்று சில நாட்களுக்கு முன் வாய்ச்சவடால் அடித்தவன் தானே நீ?"

"அரவிந்தைப் பற்றி ஒரு கெட்ட செய்தியை நீ விரைவிலேயே கேட்கப் போகிறாய். விக்ரம்... அப்போது மகிழ்ந்து எனக்குப் பரிசு தரப்போகிறாய்."

"இப்போது இங்கே எதற்கு வந்தாய்?"

"நானும் சற்று நேரத்தில் பாருக்குள் வரப்போகிறன்... இந்தா இந்த ஐயாயிரத்தைப் பிடி. பாக்கெட்டில் வை. நான் உள்ளே வந்து வாங்கிக்கொள்கிறேன்."

"எதற்காக?" என்றான் விக்ரம் குழப்பத்துடன்.

"என். நண்பன் ஒருவன் என்னைச் சந்திக்க இங்கே வருவான். என்னிடமிருக்கும் பணத்தையெல்லாம் உரிமையுடன் கடனாக எடுத்துப் போவதே அவன் வாடிக்கை. அவன் வரும்போது இந்தப் பணம் என்னிடம் இருந்தால் ஆபத்து... ஒரு சின்ன ஹெல்ப்தானே... ப்ளீஸ்?"

விக்ரம் அந்த ஐம்பது ரூபாய்க் கட்டை தன் பாக்கெட்டில் செருகிக் கொண்டு பர்மிட் ரூமுக்குள் நுழைந்தான்.

ஐந்து நிமிடம் இடைவெளி கொடுத்து, ஜலால் அதே பர்மிட் ரூமுக்குள் நுழைந்தான். விக்ரம் உயரமான ஸ்டூலில் உட்கார்ந்து கவுண்டரில் தன் கோப்பையை உறிஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அடுத்த ஸ்டூலில் ஏறி, அமர்ந்து பீர் ஆர்டர் பண்ணினான்.

விக்ரம் பாக்கெட்டிலிருந்து, பணக் கட்டை எடுத்து கவுண்டரின்மீது வைத்தான். "இந்தா உன் பணம்."

பார் சிப்பந்திகள் பார்க்கிறார்கள் என்பதை நிச்சயித்துக் கொண்டு, அந்தப் பணத்தை எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டான், ஜலால்.

"ஜலால் அரவிந்தைப்பற்றி ஏதோ சொல்ல ஆரம்பித்தாயே?"

"உன் விருப்பப்படி எல்லாம் நடக்கும், விக்ரம். நான் உத்தரவாதம்," என்றான் ஜலால் சற்று உரத்த குரலில். அரவிந்த் இனி உன் வழியில் குறுக்கிட மாட்டான்."

விக்ரம் மடக் மடக் என்று பீரைக் குடித்தான். "பார்க்கப் போகிறேனே, உன் கை வண்ணத்தை!" என்றான் சற்றே கேலியாக.

ஜலால் அமைதியாகப் புன்னகைத்தான்.

***

காற்றைக் கிழித்தது யமஹா.

மோட்டார் சைக்கிளில் அரவிந்தின் முதுகோடு பசை போட்டு ஒட்டியிருந்தாள் ஜ்யோதி. அவளுடைய சகலமும் அவன்மீது அழுந்தியிருக்க, அவனுடைய இரு கைகளுக்கடியிலும் தன் கை கொடுத்து வளைத்து தோளைப் பிடித்திருந்தாள்.

காற்று சீறி, அவள் கூந்தலையும், உடைக்குள் புகுந்த உடம்பையும் கலைத்தது.

"அரவிந்த் ஐ லவ் யூடா!" என்று காதைக் கடித்தாள்.

அவன் சிலிர்த்து, "ஆக்ஸிடெண்ட் ஆகிவிடும். பேசாமல் இரு," என்றான்.

ஜ்யோதி பேசாமல் இல்லை.

ஒரு சிக்னலில் சிகப்பில் காத்திருந்த போது, "நீ இவ்வளவு சீண்டுகிறாயே, இங்கே நான் ஒரு ஜில்ஜிட்டா செய்யட்டுமா?" என்றான் அரவிந்த். ஜ்யோதியின் முகம் திடுக்கிட்டுக் கோணிச் சிரித்ததை இரசிப்பதற்குள் சிகனல் மாறிவிட்டது.

டில்லியிலிருந்து விடுபட்டு ஹரியானா போகும் பாதையில் பைக் எண்பது கிலோ மீட்டரில் பறந்தது.

"எங்கே அழைத்துப் போகிறாய் அரவிந்த்?"

"இங்கே ஒரு பார்க் இருக்கிறது. இருபது ஏக்கரில் பெரிய பார்க். அடர்த்தியாய் மரங்கள். நிறைய நிழல்கள். அதிகம் பேர் வருவதில்லை."

"ஹை"

திடீரென்று சூரியன் கறுப்புக் கண்ணாடி அணிந்தது. மேகங்கள் சூழ்ந்து சற்று நிச்சயமில்லாமல் யோசித்து, திடீர் முடிவு செய்து, மின்னலைக் கிறுக்கி, 'குபீர்' என மழை பொழியத் தொடங்கியது.



"நிறுத்தாதே!" என்று கிரீச்சிட்டாள், ஜ்யோதி. "நிறுத்தாதே! மழை எவ்வளவு ஜாலி. நான் எதிர்பார்க்காத போனஸ்... ஹூ ஹே......" என்று குழந்தைபோல் கூவிக் கொண்டு அரவிந்தோடு தீற்றிக் கொண்டாள்.

மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் மழையிலிருந்து வெளியே வந்து விட்டார்கள். சூரியன் தொண தொணவென்று வெப்பமாக இருந்தது.

பார்க்கை அடைந்ததும் ஐஸ் விற்பவன் அவர்களை அதிசயமாகப் பார்த்து, "மழை பெய்ததா என்ன?" என்றான்.

"இல்லை. இரண்டு பேரும் எச்சில் துப்பிக்கொண்டோம்."

"ஜ்யோதி! பாவம், அவன்."

பச்சை இலைகளைப் பரவசமாகக் குலுக்கும் மரங்கள். வால் நீண்ட பட்சிகள். பூக்கள் உதிர்ந்த புல்தரை கொலுசுக்காலும், ஷூக்காலும் மட்டும் வெளியே தெரிந்த புச்செடிக்கூட்டம். "ஏன் இப்படி நான்கு இன்ச் தள்ளியே நடக்கிறாய் அரவிந்த்? இப்படி என் இடுப்பில் கையை வளைத்துப் போட்டுக் கொண்டு..."

"ஜில்ஜிட்..."

"நோ! இங்கே வேண்டாம். பையா, நான் கத்துகிற கத்தலில் தோட்டக்காரன் எங்கேயிருந்தாலும் ஓடி வந்து விடுவான். இன்னும் உள்ளே போகலாம். இதை விட இரகசியமான இடம் பார்க்கலாம்."

இடுப்புயர செடிக் கூட்டங்களுக்குப் பின்னே, அவர்களைப் பார்வையிலிருந்து தவறவிடாமல் நடந்து வரும் ஜலாலைப் பார்க்கும் நிலையில் அவர்கள் இல்லை.

"அரவிந்த் நாம் பேசாமல் இங்கேயே தங்கி விடலாமா? எனக்கு டில்லி திரும்பவே பிடிக்கவில்லை."

"என்ன பேத்துகிறாய்?"

"டில்லியில் எனக்குச் சரியாகத் தூக்கம் வருவதில்லை. கண்களை மூடினால் கெட்ட கனவுகள் துரத்துகின்றன."

"கனவுகள் உன் மனதில் இருக்கும் அச்சத்தின் வெளிப்பாடுகள். மனதை சந்தோஷமாக வைத்துக்கொள். யாரைப் பற்றியும் எதைப்பற்றியும் கவலைப்படாதே!"

"அப்படித்தான் அரவிந்த் ஒவ்வொரு நாளும் நான் ஆசைப்படுகிறேன். ஆனால், அந்த பாழாய்ப் போன விக்ரம் எப்படியோ திருட்டுத்தனமாக என் மனதில் நுழைந்து அமைதியைக் கெடுத்து விடுகிறான். அவன் உனக்கு ஏதோ கெடுதல் செய்து விடுவான் என்று என் உள்ளத்தில் எப்போதும் ஒரு அச்சம் ஓடிக் கொண்டேயிருக்கிறது."

"ஆரம்பித்து விட்டாயா?"

"ஸாரி, உன் மூடைக்கெடுக்க வேண்டும் என்பது என் விருப்பமில்லை. ஆனால்..."

"ஆனால்களும், அதனால்களும் இனிமேல் வேண்டாம். இங்கே பார்... எவ்வளவு ரம்மியமான இடம்."

குல்மோஹர்கள் சூழ்ந்த, ஜ்யோதி விருப்பப்பட்டது போன்றதொரு இரகசிய இடம் வந்துவிட்டது.

"கமான் பேபி..."

உட்கார்ந்தார்கள். அடர்ந்த மரங்கள் குடை விரித்தன. பிரேமையான தனிமை தித்தித்தது.

"யாரோ மரத்தில் ஏறும் சத்தம் கேட்கவில்லை?" என்றாள் ஜ்யோதி.

"உன் சந்தேகமும், நீயும்!"

"ஏதாவது குரங்காயிருக்கும். பார் எப்படி நனைந்திருக்கிறாய்? ஈரம் உடம்புக்கு ஆகாதுடா..." என்று அரவிந்த் அவள் சட்டையில் கை வைக்க, அவனைக் கீழே தள்ளினாள் ஜ்யோதி. அவனுடைய ஈரச்சட்டை பொத்தான்களை விடுவித்த மார்பு ரோமத்தை விரலால் சுருட்டி இழுத்தாள்.

"ஹா" என்று மல்லாந்து படுத்து கைகளை விரித்தான் அரவிந்த். ஜ்யோதி அவன் முகத்தை உதடுகளால் தேய்த்து விலக்கிய போது, மரக்கிளையில் ஓர் அசைவு.

'என்ன' என்று அரவிந்த் யோசிப்பதற்குள், அரவிந்தின் முகத்தில் இரக்கமில்லாத அமிலம் பீய்ச்சப்பட்டது. 'ஹோ' என்றலறி ஜ்யோதியின் மடியில் அவன் துள்ளி விழுந்தான். புரண்டான்.

ஜ்யோதிக்கு ஒரு கணம் என்ன நடந்தது என்று புரியவில்லை. அர விந்த் தள்ளினான். துடித்தான். எழும்பி விழுந்தான். அமானுஷ்யமாகக் கூச்சலிட்டான். புல் தரையில் புரண்டு வேரில் மோதினான்.

"அரவிந்த்... அரவிந்த்... என்ன ஆயிற்றுடா?" ஜ்யோதி அழுதாள். அண்ணாந்து பார்த்தாள். மரக்கிளைகளை விலக்கி ஒருவன் அவசரமாக இறங்கிக் கீழே குதிப்பது தெரிந்தது. "சோர் சோர்" என்று கூவினாள். திருடன் திருடன் என்று கூவுவது எவ்வளவு முட்டாள் தனம் என்று அவளுக்குப் புரியாத நிலையில் இருந்தாள்.

அரவிந்தை மடியில் அள்ளிப் போட்டு, அவன் முகத்தைத் திருப்பியதும் அதிர்ந்தாள் பூங்கா எங்கும் எதிரொலிக்கும்படி கூவினாள்.

***

"ஐயாம் ரியலி ஸாரி," என்றார் டாக்டர். அவர் முகத்தில் சோகமும் சோர்வும் தென்பட்டன. "ஆஸிட் ஊற்றப்பட்டிருக்கிறது. முகத்தில் இடதுபக்கம் ஹெவியாக டேமேஜ் ஆகியிருக்கிறது. கண்ணில் படாமல் தப்பித்தது உண்மையான அதிர்ஷ்டம். எப்படியும் பிளாஸ்டிக் சர்ஜரி செய்தாக வேண்டிய நிலைமை."

ஜ்யோதி ஹோவென்று அழுதாள். "வெண்ணெய் முகம், வெண்ணெய் முகம் என்று கண்வைத்தான் பாஸ்டர்ட்!" என்று பற்களைக் கடித்துக் கதறினாள்.

"மகளே என்ன ஆயிற்று?" என்று கேட்டுக் கொண்டு உள்ளே வந்தார் ஹேம்நாத். ஒன்றிரண்டு பார்ட்டிகளில் அவரைச் சந்தித்திருக்கிறாள். அமைச்ச ரின் பர்சனல் செகரட்டரி என்று அரவிந்த் அறிமுகப்படுத்தியிருந்தான். அவருடைய கடுகடுப்பு, சிடுசிடுப்பு எல்லாவற்றையும் வைத்து அவரை 'சுருக்க அவதார்' என்று பெயர் வைத்திருப்பதாகக் கூட அரவிந்த் சொல்லியிருக்கிறான். பர்சனல்

**சுபா**

ஃபோன் கால்களை அனுமதிக்காமல் ராங் நம்பர் என்று வைத்துவிடும் அராஜகன்! இப்போது விவரம் அறிந்ததும், பறந்தடித்துக் கொண்டு ஓடி வந்திருக்கிறார்.

"அரவிந்த் முகத்தில் ஆஸிட் ஊற்றி விட்டார்கள், சார்."

"மைகாட்! அரவிந்த் முகத்தில் ஏன்? அவன் என்ன தப்பு செய்தான், முகத்தில் அமிலம் ஊற்றுமளவிற்கு அவனுக்கு எதிரிகள் யாரும் இருக்க முடியுமா மகளே?"

"இருக்கிறான். விக்ரம்! அரவிந்த் முகத்தை நான் வெறுக்க வேண்டும் என்று சவால் விட்டுப் போனவன்...."

"இரு அவசரப்படாதே.. விக்ரம் ஊற்றியதை நீ பார்த்தாயா?"

"ஆஸிட் ஊற்றியவன் முகத்தை நான் பார்த்தேன். என்னால் எப்போதும் அவனை அடையாளம் காட்ட முடியும். அது விக்ரமில்லை. வேறொருத்தன். ஆனால் விக்ரம் செய்த ஏற்பாடாகத்தான் இருக்கும்."

ஜ்யோதியின் முகத்தில் அழுகையும், ஆவேசமும் சேர்ந்து பிரதிபலித்தன.

"ராஸ்கல்! என் மேல் இருக்கும் ஆத்திரத்தை எல்லாம் அரவிந்தின் மீது காட்டிவிட்டான், ராட்சஸன். அவனை நான் சும்மா விடப்போவதில்லை... கடவுளே... கடவுளே..."

ஜ்யோதி நெற்றியில் அறைந்து கொண்டு அழுதாள்.

(○—வரும்—○)

---

# கவியரசுவின் சுயசரிதை 34

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

ஒவ்வொருவர் கையிலும் 'அண்ணாவின் மன்னன்' கட்டுரை வெளிவந்த 'தென்றல்' இதழ் இருந்தது. "படித்துப்பாருங்கள். அண்ணாவுக்கு ஆபத்து," என்று ஒவ்வொருவரிடமும் அந்த இதழைச் சிலபேர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு மிகவும் வேண்டியவர்கள், அவனிடமிருந்து தொடர்ந்து உதவி பெற்றுக்கொண்டிருந்தவர்கள் சிலர்கூட அந்தக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தான் அவனுக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது. 'கட்டுரையைப் படித்துவிட்டுப் பலபேர் கோபமாக இருக்கிறார்கள்' என்றே அவன் நினைத்தான்.

அங்கிருந்த சாப்பாட்டுப் பகுதியில் சாப்பிட உட்கார்ந்தான். இரண்டொருவர் குத்தலாகவும் மறைமுகமாகவும் பேசுவதைக் கேட்டான். அவர்கள் பேச்சில் அவன் அந்த ஆண்டு வெளியிட்ட தென்றல் பொங்கல் மலரும் அடிபட்டது. பொங்கல் மலர்களில் வழக்கமாக அண்ணாதுரையின் மூவர்ணப் படம் போடுகிற அவன் அந்த ஆண்டு அவர் படத்தைப் போடாமல் சம்பத்தின் படத்தை மூவர்ணத்தில் வெளியிட்டு 'எல்லாம் நிறைந்தவர்'- என்று தலைப்பிட்டு கவிதை எழுதியிருந்ததை அவர்கள் மறைமுகமாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். சாப்பிட்டுவிட்டு வெளிக் கொட்டகையில் வந்து அமர்ந்தான். இசைத்தட்டுகளை ஒருவர் ஒலிபரப்பிக் கொண்டிருந்தார். கண்ணனைப் பற்றிச் சில பாடல்கள் அவன் மனதில் வேறு அர்த்தம் தொனிக்கும்படியான கருத்துக்கள் உள்ள சில பாடல்கள்.

அவை ஒலிபரப்பப்படும் போது சிலர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டார்கள். யாரும் அவன் அருகில் வந்து அமரவில்லை. அப்போது சம்பத்தின் ஆதரவாளர்கள் சிலர் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அவனுக்குத் தெம்பு வந்தது. அவர்களும் மிகுந்த உற்சாகத்துடனேயே காணப்பட்டார்கள்.

மற்றவர்களுக்குக் கேட்கும்படியாகச் சத்தம் போட்டுப் பேசினார்கள். அவன் அருகிலேயே வந்து உட்கார்ந்து, இருக்கும் சூழ்நிலையை விவரித்தார்கள், "பெரிய ஏற்பாட்டோடு வந்திருக்கிறார் கருணாநிதி. அதோ பாருங்கள்; மதுரை, திருச்சி அடியாட்கள். என்ன நடக்கிறதென்று பார்த்துவிடுவோம். இங்கிருந்து பேசவேண்டாம். சம்பத் தங்கியிருக்கும் ரூம், நகரச் சத்திரத்தில் திறந்திருக்கிறது. மேயர் முனுசாமி அங்கிருக்கிறார். அங்கே போகலாம்!" என்றார்கள். அவனை அழைத்துக் கொண்டு எல்லோரும் புறப்பட்டார்கள்.

இரவு 7.30 மணி இருக்கும். காலையில் முடிந்திருக்கவேண்டிய செயற்குழு-முடியாமலேயே நீண்டுகொண்டு போவதாகச் செய்தி வந்தது. ஆகவே சத்திரத்தில், முனுசாமி ஒரு கட்டிலில் சாய்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவன் ஒரு சிறிய பேப்பரில் குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தான்.

"கவிஞர், கவிஞர்"- என்றொரு குரல் கேட்டது. அந்தக் குரலில் தோன்றிய பதற்றத்தில் அவனும் பதறி எழுந்தான்.



பரபரப்போடு உள்ளே நுழைந்தார் ஆர்.எஸ். பாண்டியன்.

"செயற்குழுவில் அடிதடி நடக்கிறது. சம்பத்தை எல்லோரும் அடிக்கிறார்கள்!" என்று சொன்னார். அவன் கலங்கிவிட்டான், அங்கிருந்த காரை எடுத்துக்கொண்டு செயற்குழு நடக்குமிடத்திற்குச் சென்றார்கள். செயற்குழுவில் கலந்துகொண்டிருந்த எம்.பி.சுப்பிரமணியன் (எம்.எல்.ஏ.) இறங்கி வந்தார். மதுரை சண்டியர் ஒருவர் சம்பத்தின் சட்டையைப் பிடித்ததாகவும் கருணாநிதி சத்தம் போட்டுத் திட்டியதாகவும் இரண்டு நடிகர்கள் முண்டாபனியனோடு வந்து நின்றதாகவும் அண்ணாதுரை அழுததாகவும் அவர் சொன்னார்.

"உனக்காவது சொத்து சுகம் இருக்கிறது சம்பத். அரசியலை விட்டால் வேறு எங்களுக்குத் தொழில் ஏது?" என்று அன்பழகன் பரிதாபமாகக் கேட்டாராம். கட்சியில் இந்தக் குழப்பம் வந்ததனால் 'வசூல் வேலை' தடைப்படுகிறது என்று பலபேர் ஆத்திரமாக இருந்தார்களாம். "இவர்களை சும்மாவிடக்கூடாது!" என்றார் சுப்பிரமணியம். "எவனுக்கு என்ன யோக்கியதை என்பதைப் பார்த்து விடுவோம்!" என்றான் அவன்.

மாடியில் இருந்து எட்டிப்பார்த்தார் மதுரை சண்டியர். ஒரு கனைப்புக் கனைத்தார். அவன் சத்தம் போட்டுச் சிரித்தான். உஸ், நீங்கள் பேசாமல் நகரச் சத்திரத்திற்குப் போங்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் செயற்குழு" முடிந்துவிடும். நாங்கள் வந்துவிடுகிறோம்' என்றார் சுப்பிரமணியம். கோவிந்தசாமி இறங்கி வந்தார். அவனைக் காரில் ஏற்றி அனுப்பினார்.

அந்த இடம், வேலூரிலேயே ஒரு ஒதுக்குப்புறம். அதனால் அங்கே கூட்டம் சேரவில்லை. இப்படிச் செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டே செயற்குழுவுக்கு அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பது போல் தோன்றிற்று. இரவு 9 மணிக்குக் கட்சியில் தான் வகித்துவந்த அவைத் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு சம்பத்தும் எம்.பி. சுப்பிரமணியமும் மற்றைய நண்பர்களும் சத்திரத்திற்கு வந்தார்கள். அதற்குள் செயற்குழுச் செய்தி பதவி சம்பத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் அங்கே வந்துவிட்டார்கள். 50 பேருக்கு மேலிருக்கும். அவ்வளவுபேரும் கட்சியின் பொறுப்பான அங்கங்கள், கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை நாராயணன், சேலம் மாவட்டச் செயலாளர் குப்புசாமி, சென்னை மாவட்டச் செயலாளர் மணிவண்ணன், மேயர் முனுசாமி, ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,எம்.பி. சுப்ரமணியம் எம்.எல்.ஏ., ஏ.செல்வராஜ் எம்.எல்.ஏ., மதியழகன், க.ராஜாராம், ஆர்.எஸ்.பாண்டியன், கோவை செழியன், உ.பில்லப்பன் டி.கே.பொன்னுவேலு முதலியோர் அவர்களுள் சிலர். ஒவ்வொருவரும் நெருப்பாக நின்றார்கள். மறுநாள் பொதுக்குழுவைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று ஒருவர் யோசனை சொன்னார்.

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# அம்மாவின்ர ரமணாக்குட்டி......

வெண்ணிலா சூரியகுமாரன் — வன்னி

வெள்ளவத்தை பிள்ளையார் கோவிலுக்குப் போய் கும்பிட்டுவிட்டு வீடு திரும்பிய அம்மாவுக்காக அந்தச் செய்தி காத்திருந்தது. அப்பா படுக்கையில் படுத்திருந்தபடியே முகம் பொத்தி அழுது கொண்டிருப்பதையும் சதாசிவ மாமா கவலையான முகத்துடன் நிற்பதையும் கண்ட போதே அம்மாவுக்கு ஏதோ விபரீதம் என்று தோன்றிவிட்டது.

மாமா தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னபோது, அம்மாவின் தலையில் இடி விழுந்தது போலிருந்தது.

“குளறாதை மோனை... குரல் எடுத்துக் கத்தாதை... அயலுக்கு காட்டிக் குடுத்திடாதை... இப்பதான் தகவல் வந்தது. உடனும் ஓடி வாறன்...”

‘திக்’கென்று இதயம் அதிர அம்மா ஏங்கிப்போய் நின்று விட்டாள். அடிவயிற்றிலிருந்து குரல் கதறலாய் எழுந்து தொண்டைக்குள் வந்து சிக்கியபடி நின்று விட்டது. கதறி அழுதால் பக்கத்து மதிலோடு நிற்கும் பொலிஸ்காரன் “ஏன் அம்மா அழுகிறது...!” என்று கேட்டுவரக்கூடும். காவலரண் கடமையில் நிற்கும் அந்தப் பொலிஸ்காரன் அம்மாவுடன் சில நாட்களாக அறிமுகமாகியிருந்தான். அவன் தவிர பக்கத்து வீட்டு பியசேனவும் நந்தாவதியும்கூட வந்து விசாரிக்கக்கூடும். அம்மா அழக்கூடாது... அம்மா அழ ஏலாது.

அம்மா அப்படியே வாய்பொத்தி சுவரோடு சரிந்து நிலத்தில் அமர்ந்தாள். அடிவயிறு பகபகவென எரிந்தது. இந்த செய்தி உண்மைதானா?

“எப்ப நடந்தது...?” குரல் வாய்க்குள் அடங்கியது. கண்களில் பொங்கிய கண்ணீர் தன்பாட்டில் வழிந்தது. அம்மா வாயை அழுத்தமாய் மூடிக்கொண்டாள்.

பத்து மாதம் இந்த வயிற்றில் உறங்கிய ‘அம்மாவின்ர ரமணாக்குட்டி’ இப்போ நிரந்தரமாய் உறங்கி விட்டானா...? அம்மாவின்ர செல்லக்குழந்தை அவன். ஐந்தாவதாய் பிறந்த கடைசி மகன். துருதுருவென்று அலைபாயும் கண்களோடு அவனிடம் அப்படியென்ன முரட்டுத்தனம்!

அம்மாவை என்ன பாடுபடுத்தியிருக்கிறான். அவனை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அம்மா வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பாள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறைப்பாடு. இரண்டாம் வகுப்பில்... “உங்கட ரமணன் என்ர பென்சிலை முறிச்சுப்போட்டான் அன்ரி.”

கண் கசக்கி அழுத அந்தப் பையனை சமாதானப்படுத்தி புதுப்பென்சில் கொடுத்து அம்மா அனுப்பி வைப்பாள்.

நான்காம் வகுப்பில்... “உங்கட ரமணன் எனக்கு அடிச்சு தள்ளி விழுத்திப் போட்டான் அன்ரி....!”

அடிபட்ட பையனின் முழங்கை இரத்தம் கசிய வீங்கியிருக்கும். அந்தப் பையனின் அம்மா சண்டைக்கு வருவாள். “அப்படியென்ன ஒரு கண்டறியாத பிள்ளை வளர்ப்பு...?” என்று நொடிப்பாள்.

அம்மாவுக்கு கவலையும் கோபமும் மனதைப் பிசையும். நான்கு பிள்ளைகளும் ஒழுங்காய் இருக்க இவன் மட்டும் ஏன் இப்படி வளர்கிறான்...? படிப்பு ரமணாவுக்குப் பதியவில்லை. விளையாட்டில்தான் ஆர்வம் அதிகம். காலில் சக்கரம் பூட்டியதுபோல துடியாட்டம்.

கொய்யாமர உச்சியில் நிற்கும் அவனைப் பார்த்து மனம் பதைபதைக்கும்.

“அப்பன்... இறங்கி வாடி... என்ர குஞ்சல்லே...!” அம்மா கெஞ்சுவாள். அண்ணாமாரும், அக்காமாரும் அவனின் பக்கம் தான். கடைசித் தம்பி என்று அத்தனை செல்லம்.

“சின்னனில அப்பிடித்தான், குழப்படி செய்யுங்கள். வளர வளர எல்லாம் மாறிடும். சும்மா ஏன் கவலைப்படுறீங்கள்?” பெரியண்ணா அடிக்கடி சொல்வான்.

பெரியண்ணாவின் தோளில் ஊஞ்சலாடியபடி சிரிக்கின்ற ரமணாவை என்னதான் செய்வது...?

மற்ற நான்கு பேருக்கும் வெளிதேசத்தில் வாழ்க்கை அமைந்துவிட்டது. ரமணாவையும் கூப்பிட்டபோது, ஏன் அவன்போக மறுத்தான்....?

அவன்... அந்தத் துடுக்கான பிள்ளை அம்மாவைக் கூடபிரிந்து போனான். அம்மா உலகத்துக் கோவில்கள் எல்லாவற்றிலுமே நேர்த்தி வைத்தாள்.

அப்பாவும், அம்மாவும் யாழ்ப்பாணத்தில் தனித்து வாழ்ந்தார்கள். ஐந்து பிள்ளைகளில் ஒருவர்கூட அவர்களுடன் இருக்கவில்லை. இடப்பெயர்வுடன் அப்பாவும் அம்மாவும் புதுக்குடியிருப்பில் வந்து இருந்தார்கள். இந்த இடத்தை விட்டு எங்கேயும் போக அவர்களால் முடியவில்லை.

அப்பாவுக்குக் கால் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுவிட்டதால், வைத்தியம் செய்வதற்காக மூன்று மாதங்களுக்கு முன்பு கொழும்பு வந்தார்கள். வெளிநாட்டிலிருந்து மாறிமாறி காசு அனுப்புகிறார்கள். வைத்தியம் செய்து அப்பாவுக்கு சுகமான பிறகு வன்னிக்குத் திரும்பிவிடவேண்டும். அம்மா அதற்குத்தான் ஆவலாய் இருந்தாள். மற்றப்பிள்ளைகளும் அதையே விரும்பினார்கள். தொலை



பேசியில் ரமணாக்குட்டியைப் பற்றியே கதைப்பார்கள். ரமணா பற்றி அம்மாவுக்கும் நிறைய சொல்வதற்கு இருந்தது.

ரமணா இப்போது மாறிவிட்டான். முன்பு மாதிரி குழப்படி இல்லை; அமைதியும் நிதானமுமாய் மாறிவிட்டான். ரமணாக்குட்டிக்கு இப்ப இருபத்தாறு வயதாகிறது. நிமிர்ந்து பார்த்து கதைக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டான். இரவு நேரங்களிலும் பயமில்லாமல் திரிகிறான்.

முன்பிருந்த கவலை மாறி, இப்போது வேறு கவலை அம்மாவைப் பிடித்துக் கொண்டது. கொழும்பில் உள்ள ஒரு கோவிலையும் தவறவிடாமல் அம்மா போய் வருகிறாள். மாலை நேரங்களில் மாடிமுன் விறாந்தையில் நின்று தெருவை வெறித்துப் பார்ப்பாள். புதிதாய் முளைத்த சோதனைச் சாவடிகள்... தூர காலி வீதியின் வாகன இரைச்சல்கள்... நெருக்கமாய்த் திரியும் மனிதர்கள்... அம்மாவின் மனதில் அமைதி இல்லை.... அப்பாவுக்கு விரைவில் சுகமாகி வன்னிக்குத் திரும்ப வேண்டும்.

அந்த எதிர்பார்ப்பில் இருந்த அம்மாவுக்கு இன்றைக்கு அந்தச் செய்தி கிடைத்து விட்டது. மாமா சொன்னதைக் கேட்டதும் அம்மாவின் முகம் அதிர்ச்சியில் உறைந்து போனது. அம்மா முகத்தை மூடிக்கொண்டு மெல்லிய குரலில் அழத் தொடங்கினாள். சதாசிவம் மாமா பதறிப்போய்... “இஞ்ச... அழாத... குரல் காட்டாத... என்ன செய்யிறது...? எல்லாம் எங்கட பலன்...”

என்று அம்மாவின் தலையை பரிவோடு தடவினார். அம்மாவின் அழுகை இன்னும் அதிகமானது.

நிச்சயம் அந்த பொலிஸ்காரன் வந்து விசாரிக்கப் போகிறான். இந்த சில்வா வீதியில் பகலிலும் சனநடமாட்டம் அதிகம்... யாராவது கவனித்து விடக்கூடும்.

அம்மா அழுத கண்களோடு நிமிர்ந்து, “எப்ப நடந்தது?” என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

“முந்தாநாள் நடந்தது. இண்டைக்கு நாலு மணிக்கு முள்ளியவளையில எல்லாம் செய்யினமாம்.”

அம்மா பரிதவித்தாள். “அய்யோ...!” என்று தன் கரங்களால் ஓங்கி தலையில் அறைந்து கொண்டாள்.

“இப்ப இரண்டு மணியாகுதே... என்ர ரமணாக்குட்டி... என்ர செல்லம். என்ர குஞ்சை நான் பார்க்கவேணும்...!” அம்மா கெஞ்சிய குரலில் மன்றாடினாள்.

“நீ எப்பிடி இவ்வளவு தூரம் தனிய போவாய்... நீ போய் சேர்றதுக்குள்ள எல்லாம் செய்திடுவினம். இப்பிடி அழுத முகத்தோட உன்னால பிரயாணம் செய்யவும் ஏலாது...”

மாமா ஆதரவாய் சொன்னார். அப்பா அழுகின்ற அம்மாவையே கலக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அம்மா மறுபடி சுருண்டு கொண்டாள். நாலைந்து ‘நாளாய் வயிறு காந்திக் கொண்டே இருந்ததே... இதுக்குத்தானா...? வாயில் சோறு வைத்தால்கூட இறங்காமல் தொண்டைக்குள் நின்றதே... இதுக்குத்தானா...?’

‘நெஞ்செல்லாம் படபடவென்று அடிச்சுச் கொண்டிருந்ததே... இதுக்குத்தானா... அய்யோ... என்ற பூங்குஞ்சின்ர முகத்தைக்கூட காண ஏலாமல் போயிட்டுதே...’ இடையில எத்தினைதூரம்... அம்மா பொருமிப் பொருமி அழுதாள்.

‘இந்நேரம் ரமணாக்குட்டியை ஊர்வலமாய் கொண்டுபோவினம்... இப்ப மேடையில வைச்சிருப்பினம்...’

பாட்டு காத்தில கேட்கும்...’

‘இப்ப பூப்போடுவினம்...’

‘அய்யோ இப்ப நாலு மணியாகுதே... என்ர குஞ்சை விதை குழியில வைச்சிருப்பினம்...’

‘ஒரு பிடி மண் பிள்ளையின்ர முகத்தில விழும்...’

“அய்யோ...” என்று அம்மாவின் குரல் திடீரென பெரும் கதறலாய் எழுந்தது. அந்த மாலைநேர அமைதியை அந்தப் பரிதாப கதறல் கலைத்துக் கிழித்தது.

வாசலில் மணி ஒலிக்க நந்தாவதியின் பதற்றமான குரல் கேட்டது.

“அன்ரி...அன்ரி...!”

அம்மா திடுக்கென்று வாய் மூடினாள். கண்ணுக்குள் நிறைந்த நீரை உள்வாங்கினாள். முகத்தை அழுத்தமாய் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

அப்பாவும் மாமாவும் திகைத்துப்போய் பார்த்துக் கொண்டிருக்க, அம்மா போய் வாசல் கதவைத் திறந்தாள்.

“என்ன அன்ரி சத்தம்...?”

“ஒன்றுமில்லை நந்தா... நெஞ்சு வலி வந்துவிட்டது...”

“மருந்து எடுத்தால் நல்லது..” நந்தாவதி ஆதரவுடன் சொல்ல,

“வீட்டில் மருந்து இருக்கிறது. பயமில்லை.” என்று அம்மா அமைதியாய் சொன்னாள்.

நந்தாவதி போனதும் அம்மா வாசல் கதவு சாத்திவிட்டு உள்ளே வந்தாள். கண்களை உயர்த்தி நேரம் பார்த்தாள்.

நாலரை மணியாகியிருந்தது.

அம்மாவின்ர ரமணாக் குட்டியின்ர முகத்தை இப்போது மண் மூடியிருக்கும்.

அம்மாவின் கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர் சத்தமில்லாமல் கன்னங்களில் வழிந்தது. O

# “காதலும் பொய்யே....?”

யோகன் — அவுஸ்திரேலியா

படிப்பை விட விளையாட்டு என்றால் பிரவீனுக்கு உயிர். அதுவும் ‘கிரிக்கெட்’ என்றால் சாப்பாடும் தேவையில்லை. அன்றும் அவன் விளையாட்டு மைதானத்திலிருந்து தான் திரும்பிக்கொண்டிருந்தான். ஊர் எல்லையிலுள்ள பிள்ளையார் கோவிலடியால் வந்துகொண்டிருந்தான். அப்போதுதான் அவளைக் கண்டான்.

கையில் விளக்கு ஒன்றை ஏந்திக்கொண்டு அந்த விளக்கு காற்றில் அணைந்துவிடாதபடி மறுகையினால் மறைத்தவண்ணம் ஆலயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்த கண்களை வேறு திசை திருப்ப முடியவில்லை. பிரவீன் அப்படியே நின்றான்.

இத்தனைக்கும் அவள் பெரிய அழகியென்றுகூடச் சொல்லமுடியாது. கறுப்பாகவேயிருந்தாள். ஆனால் சற்று அகன்ற அழகான விழிகள். கூரான மூக்கு. உதடுகள் மட்டும் தடித்து சிவந்திருந்தன. மிக நீளமான கூந்தலை அள்ளி முன்பக்கத்துத் தோளிலே போட்டிருந்தாள். நிலம் பார்த்து மெதுவாக நடந்துகொண்டிருந்தாள். அக்காட்சியைப் பார்த்தவன் அசந்துபோனான்.

அன்று இராத்திரி அவனுக்குத் தூக்கம் வரமறுத்தது. ‘இத்தனைநாள் இவள் எங்கிருந்தாள்? நிச்சயமாய் ஊருக்குப் புதிதாய்த் தானிருப்பாள்.’

எப்படியோ அவளைப் பார்த்துப் பழக வேண்டும், பேசவேண்டும் என்ற எண்ணங்கள் அவனுக்குள் தலை தூக்கின.

அடுத்தடுத்த நாட்கள் அதேயிடம். அதே நேரம். காத்திருப்புக்கள், கால் கடுப்புக்கள் தொடர்ந்தன.

ஒருநாள் அவளைச் சந்தித்துப் பேசியே விட்டான் பிரவீன். பெயர் தேனுகா. இடம் வவுனியா. உதவி அரசாங்க அலுவலகத்தில் பணிபுரியும் தமயனுக்கு மாறுதல் கிடைக்க, தமயனுக்கு உதவியாக அவளும் வந்திருக்கிறாளாம். அந்தத் தேனுகாவில் அவன் கிறங்க ஆரம்பித்தான்.

விடுமுறை முடிந்தது. பாடசாலை தொடங்கியது. பாடசாலை சென்ற பிரவீனுக்கு இனிய அதிர்ச்சி. அங்கே அவர்கள் வகுப்பில் தேனுகா இருந்தாள். அவளை ‘ராகிங்’ செய்வதற்கு மாணவர்கள் முயன்று கொண்டிருந்தார்கள்.

வகுப்பறையில் பிரவீனைக் கண்டதும் அவளுக்கும் ஆச்சரியமாய் இருந்திருக்க வேண்டும். அவள் மெதுவாகச் சிரித்தாள். அவன் தேனுகாவின் அருகில் சென்றான். ஏற்கனவே தெரிந்திருந்த முகங்களானதால், இருவரும் சரளமாக உரையாடினார்கள். இதனைக் கண்ணுற்ற அவனின் நண்பர்கள் வாய் பிளந்து பார்த்தார்கள்.

“யாரடா அது?” அவனைத் துளைத்தார்கள்.

திடீரென அவனுக்கு எதுவும் சொல்ல வரவில்லை. ஏதோ ஒரு உஷார். அவளுடன் கதைத்த பெருமிதம். வவுனியாவில் இருக்கும் மாமியின் மகள் என்று சொல்லி வைத்தான்.

அவன் அப்படிச் சொன்னதை அறிந்தும் தேனுகா அதைவெறுக்கவில்லை. அங்கீகரிப்பதுபோல் மௌனமாகவே இருந்தாள்.

ஒரே வகுப்பறை, ஒரே பரிசோதனைக் கூடம். எப்பவோ மனதில் பதிந்துபோன உருவங்கள். அத்தனையும் காரணிகளாய் அமைந்து அவர்களை ஒருவர்மீது ஒருவர் மையல் கொள்ள வைத்திருந்தது. பிரவீன்-தேனுகா இருவரும் காதலர்களாகிப் போனார்கள். அவர்களின் காதல் இமயம் போல் வளர்ந்தது. காதல் அப்படி வளர்ந்தாலும் படிப்பொன்றும் அப்படிக் கெட்டுப் போகவில்லை.

பிரவீனை விடத் தேனுகா அக்கறையாகப் படித்தாள். உயர்தரப்பரீட்சை முடிவுகள் வெளிவந்தது. இருவரும் பரீட்சையில் தேறியிருந்தார்கள். ஆனால் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பு இருவருக்கும் கிட்டவில்லை.

பிரவீனின் குடும்பம் வசதி படைத்த குடும்பம் அல்ல. அவனின் அப்பா ஒரு சாதாரண ஆசிரியராக இருந்தார். அவருக்கு



ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தார். அவருக்குக் குழந்தைக் குட்டிகள் கிடையாது. அவர் பிரவீனை அவுஸ்திரேலியா அழைத்துப் படிப்பிக்க ஒப்புக்கொண்டார். எல்லோருக்கும் கிடைக்காத அரியவாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது.

அவனுக்குத் தேனுகாவைப் பிரிவது எளிதாக இல்லை. இதனால் உடனே அவன் தேனுகாவைப் பார்த்துப் பேசினான். இருவரும் ஒருமுடிவுக்கு வந்தார்கள்.

அதன்படி பிரவீன், தேனுகாவின் அம்மாவிடம் போனான். மகளின் மேலுள்ள உண்மைக் காதலைத் தாய்க்குப் பக்குவமாகத் தெரியப்படுத்தினான். தான்போய் அழைக்கும்வரைக்கும் தேனுகா தனக்காகக் காத்திருப்பாள் என்றும், அதுவரை அவளை எதற்காகவும் வற்புறுத்தக்கூடாது என்றும் உறுதியாகத் தெரிவித்தான். அந்த உறுதி மொழிகளோடு பிரவீன் அவுஸ்திரேலியா வந்து சேர்ந்தான்.

கொஞ்சம் ஆர்வமும் திறமையும் இருந்து விட்டால், அவுஸ்திரேலியாவில் யாருமே எதையுமே படித்து முடித்துவிடலாம். அந்தளவு படிப்பதற்கு வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

பிரவீன் சிட்னி யூனியில் படித்துக் கொண்டிருந்தான். மருத்துவத்துறையில் அவன் பயின்று கொண்டிருந்தான். அவனின் காதலும், காகிதம், தொலைபேசி போன்ற தொலைத் தொடர்புகளால் விருத்தியாகிக் கொண்டிருந்தது.

தேனுகாவிற்கு அதிஷ்டம் அதிகமாகவே வேலை செய்தது. தன் காதல் நாயகன் அழைப்பதற்கு முன்னரே அவளுக்கு அவுஸ்திரேலியா வருவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஓரிரு வருடங்களுக்கு முன் அவளின் சகோதரன் ஒருவன் அவுஸ்திரேலியாவிற்கு அகதியாகச் சென்றிருந்தான்.. அப்போதிலிருந்து கிடைக்காமலிருந்த வதிவிடவுரிமை இப் போது அவனுக்குக் கிடைத்தது. இதனால் தாயையும் சகோதரி தேனுகாவையும் அவன் ‘ஸ்பொன்சர்’ பண்ணினான்.

பிரிந்தவர்கள் கூடினால் பேசவும் வேண்டியதில்லை. பிரிந்திருந்த காதலர்கள் கூடினால்? அவர்களின் சந்தோஷத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. பிரவீன்-தேனுகா இருவரும் அவுஸ்திரேலியாவில் சேர்ந்தார்கள். அந்தச் சந்தோஷத்தை அடைந்தார்கள்.

பலபரீட்சைகள் எழுதிய பின்னர் தேனுகாவிற்கும் அதே சிட்னி யூனியில் இடம் கிடைத்தது. யூனியெங்கும் பிரவீன், தேனுகா காதல் பிரசித்தமாகிவிட்டது. மாணவர்கள் அவர்களை தம்பதியினர் போலவே நோக்கினர். அந்தளவு ஓர் இறுக்கமான பிணைப்பில் அவர்கள் இணைந்திருந்தார்கள்.

தாக்கத்திற்கு எதிர்த்தாக்கமொன்று இருப்பது விதி. இன்பத்திற்குப் பின் துன்பம் வருவது இயற்கை. தேனுகாவிற்கும் சோதனை வந்தது.

பிரவீன் மருத்துவனாக வெளியேறினான். இதற்குத்தான் காத்திருந்தவர்போல் அவனை அவுஸ்திரேலியா அழைத்த சித்தப்பா அவனுக்குக் கல்யாணம் பேசினார். கல்யாணம் பேசினார் என்றும் சொல்ல முடியாது. தனது சினேகிதனின் பெண்ணைச் செய்யச்சொல்லி வற்புறுத்தினார்.

“தம்பி உன்னை நான் அழைத்துப் படிப்பித்ததற்காக இதைச்சொல்லவில்லை, நல்லவைகளை உனக்கு நான் சொல்லித் தெரிந்துகொள்ளும் அளவிலும் நீ இல்லை, நீ காதலிக்கின்றேன் என்று சொல்கிறாய், அந்தப் பெண்ணுக்குப் படிப்பு முடியவே இன்னும் சில வருடங்களாகும். அதுவும் அவள் உன்னைப்போல் ஒரு டொக்டர் என்றாலும் பரவாயில்லை, ஆனால் இப்போ உனக்கு நான் பார்த்திருப்பவள் ஒரு டொக்டர், அவுஸ்திரேலியாவில் காணி, சொந்த பங்களா, கார் என்று வசதி படைத்தவள், நீ ஆயுள் பூராவும் இங்கு உழைத்தாலும் இந்தளவு சொத்துக்களை உன்னால் சேர்க்க முடியாது. இந்தச் சொத்துக்கள், வங்கிப் பணம் அத்தனையும் உன்னையே சேரும். உனக்குத் தேவையில்லாவிட்டாலும் உன் தங்கைகளை சீரும் சிறப்புமாக வாழ வைக்க பிரயோசனப்படும். ஆகவே நன்றாக யோசி, யோசித்து ஒரு முடிவுக்கு வா, உன் முடிவை உடனே சொல்லவேண்டும் என்றும் இல்லை. ஆனால் பதில் சாதகமாக இருந்தால் போதும்!” சித்தப்பா நீண்ட விளக்கத்துடன் அவனுக்குப் போதனை செய்தார்.

பிரவீன் இரண்டு நாட்கள் குழம்பினான். பின் தெளிவாகி ஒரு முடிவுக்கு வந்தான். அந்த முடிவுக்குப் பின்னர், அவன் தேனுகாவை ஒலிம்பிக் பார்க்கிலே சந்தித்தான்.

“கதைக்க வேணுமென்றழைத்தீர்கள். ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? சொல்லுங்கள் பிரவீன்?” அவள்தான் தொடங்கினாள்.

“தேனுகா நான் சித்தப்பா மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறனென்று உனக்குத் தெரியும். அவரின் பேச்சைத் தட்ட மாட்டன் என்றும் தெரியும்.....”

“இதிலென்ன சந்தேகம்? விஷயத்தைச் சொல்லுங்கள் பிரவீன்.” எதிர்பார்க்காத முடிவுக்காக அவசரப்படுத்தினாள்.

“அந்தச் சித்தப்பா எனக்கு வேறு இடத்தில் கல்யாணம் பேசி முற்றாக்கிப் போட்டார். என்னால் அவரின் வாக்கை மீறமுடியவில்லை, ஆனால் இது எனக்காக அல்ல என் தங்கைகளின் எதிர்காலத்திற்காகத்தான் தேனுகா. நீதான் என்னை மன்னிக்க வேணும்.”

வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருக்கும் பிரவீன் வார்த்தை, வார்த்தையாக தன்னை நியாயப்படுத்திக் கொண்டிருந்தான்.

தேனுகா இடிந்துபோனாள். கண்கள் பொங்கி நீர் திரண்டது. சட்டென அதை மறைத்து முகத்தில் புன்னகையை வரவழைத்தாள்.


“நீங்கள்தான் என்னை மன்னிக்க வேணும் பிரவீன். நானும் உங்களிடம் இதை எப்படிச் சொல்றதென்றுதான் இருந்தன். நல்லதாப்போச்சு, எனக்கும் பேராதெனியா யூனியில் லெக்சரரா இருக்கிற அத்தானை பேசியிருக்கிறார்கள். நான்தான் நீங்கள் உடைந்து போவீர்களென்று பொறுத்திருந்தன். இப்போது நல்லதாகி விட்டது நன்றி!” என்று விடைபெற்றவள் நகர முயன்று கொண்டிருந்தாள்.

பிரவீன் பிரமை பிடித்தவன்போல் யோசித்தபடி அமர்ந்திருந்தான்.

பல வருடங்களாக பழகிவிட்டு திடீரென தூக்கியெறிய முனைந்த ஒருவனை ஒரு பொய்யின்மூலம் தான் உடனடியாகத் தூக்கியெறிந்த திருப்தி அவளுள் எழுந்தது.

உண்மையில் அந்தத் திருப்தி அவளின் நெஞ்சின் ஆழத்திலிருந்து எழவில்லை. நகரும் பொழுது அவளின் கண்கள் கசிய ஆரம்பித்திருந்தது.

www.padippakam.com



# பழியும் வழியும்

## இலக்கிய நயம்

காதலை-அவள்
மறைத்து வைத்தாள்!

ஆனால் அது
ஊரெல்லாம்
ஓடிப் பரவிவிட்டது!

காதலனை-அவள்
இதயத்துக்குள்தான்
ஒளித்து வைத்திருந்தாள்!

ஆனால்-காதலன்
பெயரை
ஊரறிந்துவிட்டது!

காதல்-ஒரு
சூரியன்!

சூரியனை யாரால்
நிரந்தரமாக
மறைக்க முடியும்?

காதல்-ஒரு
பூ!

பூவின் வாசனையை
மறைக்கவா முடியும்?

காதல்-ஒரு
ஜீவமழை!

மழையின் வருகையை
யாரும் அறிவிப்பதில்லை
தானாகவே தெரிந்துவிடும்!

யாருக்கும் தெரியாது
என்று நினைத்தபடிதான்
காதலர்கள்-தங்கள்
காதலை வளர்க்கிறார்கள்!
யாவருக்கும் அது
தெரிந்து போகிறது!

காதலர்கள்
ஒருவருக்கொருவர்
மனதை
திருடிக் கொள்கிறார்கள்!

அந்த் திருட்டு
அம்பலமாகிவிடுமோ
என்றுதான்
பயந்து கொண்டிருக்கிறார்கள்!

அவர்கள்
சந்திக்கும் போதுகூட
ஊர்பார்க்குமோ
என்றுதான் தங்கள்
மூளையின் ஒரு பகுதியில்
சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்!

எந்தத் திருடர்களும்
தங்களைத் தாமே
பிர்கடனம் செய்வதில்லை!

எந்தத் திருடர்களும்
என்றோ ஒரு நாள்
இனம் காணப்படாமல்
இருப்பதில்லை!

காதல் இனிதானது
அழகானது!

சுத்தமான காற்று
நெஞ்சு முழுக்க
நிறையும்போது
ஏற்படும் உற்சாகத்தைவிட
காதல் நினைவுகளை
சுவாசிக்கும்போது
ஏற்படும் சுகம்
உற்சாகமானது!

காதலர்கள்
ஒருவருக்கொருவர்
கள்வர்களாக
இருப்பது மெய்!
ஆனால்-காதல்
பொய்யில்லாதது!
காதல்
கள்ளமில்லாதது!

காதல்
திருட்டில் ஆரம்பிக்கிறது!
காமம்
இருட்டில் ஆரம்பிக்கிறது!

காதலுக்கு
கண்கள் உள்ளன!
திருடியதே
கண்கள்தானே!

காமத்துக்கு
கண்கள் இல்லை!
இருட்டில்
கண் எதற்கு?

வெறும் காமம்
குருட்டுத்தனமானது!

காதலுடன் கலந்த
காமம்
திகட்டல் இல்லாதது!

ஆகவே-காதல்
பாவச் செயலல்ல!

காதலர்கள்
பாவிகளுமல்ல!

ஆனாலும் ஊரார்
அவர்களை
சபிக்கிறார்கள்!

பெற்றோர்கள்
அவர்கள் மனதை
கிழிக்கிறார்கள்!

தோளுக்கு மேல்
வளர்ந்தால் பெண்
தோழி!-ஆண்
தோழன்!

புரிந்து கொள்ளாத
பெற்றோர்கள்
முரட்டுத்தனமாய்
போர் தொடுக்கிறார்கள்!

எடுத்துக்கூறத்தெரியாமல்
முட்டி மோதி
உறவை
கெடுத்துக் கொள்கிறார்கள்!

பழி கூறினால்
காதல்
ஒழிந்துபோகும்
என்று ஊரார்
நினைக்கின்றனர்!

வழி மறித்து நின்றால்
காதலர்கள்
பயந்து போவார்கள்
காதலை
மறந்து போவார்கள்
என்று பெற்றவர்கள்
நினைக்கின்றனர்!

அங்குதான் அவர்கள்
கோணம்
கோணலாகிறது!

எரிக்க எரிக்க
எழும்
பீனிக்ஸ் பறவையாய்,
எதிர்க்க எதிர்க்க
காதல் எழும்!

ஊருக்கு
ஒளித்து காதலித்தது
வெட்கம்!

பெற்றோருக்கு
மறைத்து காதலித்தது
ஒரு மரியாதை!

தமக்கு தரப்பட்ட
மரியாதையை
காப்பாற்றுவது
ஊராரினதும்
பெற்றவர்களதும்
கையில்தான் உள்ளது!

காதலர்களை
தங்கள் எதிரிகளாக
அவர்கள்
பிரகடனம் செய்தால்.
காதலர்களும்
போருக்கு
தயாராகிவிடுவார்கள்!

காதல் கற்பூரம்
எதிர்ப்புத்தான்
தீ!

கற்பூரம் பற்றி
எரியத் தொடங்கினால்
அணைப்பது முடியாது!

அவளுக்கும்
அப்படித்தான் நடந்தது!

ஊரார் எதிர்த்தனர்
உறவினர் கொதித்தனர்
பெற்றவர் குதித்தனர்!

ஒளித்துக் காதலித்தவள்
ஊர் நகைத்தபின்
வெளிப்படையாகவே
காதல் உலா வந்தாள்!

'மறந்துவிடு-அவனை
மறந்துவிடு' என்று
கூறியபோதுதான்
ஒரு நொடியும்
மறந்துவிடாதபடி
அவன் நிறைந்து போனான்!

அவள் நினைத்தாள்:
"காதலா-உனை
நான் மறந்தாலும்
இவர்கள்
ஞாபகப்படுத்தி விடுகிறார்கள்!

உனை இவர்கள்
தூற்றும்போதெல்லாம்
எனக்குள் நீ
போற்றப்படுகிறாய்!

எங்கள் காதலுக்கு
கல்லெறிவதாக
நினைத்துக்கொண்டு,
கல்லின் மேல் எழுத்தாக
எங்கள் காதலை
நிலைக்கச் செய்கிறார்கள்!

எங்கள் சிறகுகளை
முறிப்பதாக
நினைத்துக்கொண்டு
கொம்பு
சீவி விடுகிறார்கள்!

தண்ணீர் ஊற்றுவதாக
நினைத்துக் கொண்டு
தீக்குள்
நெய் வார்க்கிறார்கள்!

பழி சொல்வதாக
நினைத்துக்கொண்டு
காதல் வளர
வழி காட்டுகிறார்கள்!

ஊராருக்கு நன்றி
உங்களால்தான்
எம் காதல் பூ
வாடாமல் இருக்கிறது?

உங்களால்தான்
எம் காதல்
உரமேறியிருக்கிறது!

ஊரார் எம்
காதலுக்கு உரமாக
எருப்போட்டனர்!

என் அன்னை
எம் காதலுக்கு
கடும் சொல்லால்
நீருற்றினாள்!

இன்று எம்
காதல்
செழித்து நிற்கிறது!"

அவள் நினைப்போடு
திருவள்ளுவர் தரும்
குறளும்
உடன்பாடு காண்கிறது:

"ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்
நீராக நீளும் இந்நோய்"

அதிகாரம்: 115, குறள்:1147

தருவது
ரசிகன்

---

# சிந்தியா பதில்கள்

*** 'ஃபயர்' படம் பற்றி உமது அபிப்பிராயம்?**

சி.தங்கமலர், கண்டி.

*தடுக்கப்படவேண்டிய படமல்ல! தடுத்ததால் பிரபலம் அதிகமாகியுள்ளது!*

○+

*** சிந்தியா! சென்ற வாரம் கடி ஜோக் இல்லையே?**

ஏ.சுதர்சன், கல்லாறு.

*"நடராசர் ஏன் ஒரு காலை மட்டும் தூக்கி ஆடுகிறார்?"*

*"இரண்டு காலையும் தூக்கினால் கீழே விழுந்துவிடுவாரே!"*

○+

*** வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிய அனுபவம் உண்டா சிந்தியா?**

செல்வி எ.பாத்திமா, களுத்துறை.

*நாவடக்கம் காப்பதால் வாங்கிக் கட்டிய அனுபவம் கிடைக்காமல் தப்பித்துவருகிறேன். ஒரு குட்டிக் கதை பார்ப்போமோ?*

*ஒரு புகழ்பெற்ற மதகுரு சொற்பொழிவு ஆற்றுவதற்காக ஊர் ஒன்றுக்குப் போயிருந்தார். அங்கு தங்கியிருந்தபோது கடிதம் அனுப்ப தபால் நிலையம் தேடினார்.*

*பழைய காகிதங்களைப் பொறுக்கி விற்கும் சிறுவன் ஒருவன் தட்டுப்பட்டான். அவனிடம் "தம்பி! இந்த ஊரில் தபால் நிலையம் எங்கிருக்கிறது?" என்று கேட்டார். சிறுவன் வழிகாட்டினான்.*

*மதகுரு, நன்றியுடன், "தம்பி! இச் சிறு வயதிலேயே உழைத்துச் சாப்பிடும் உன்னைப் பாராட்டுகிறேன். என் ஆசிர்வாதங்கள்!" என்றார்.*

*"நீங்கள் யார்?" என்று கேட்டான் சிறுவன்.*

*தன்னை அறிமுகம் செய்த மதகுரு, "தம்பி! நீயும் வந்து என் உரையைக் கேள். உன் பாவங்கள் விலகும். உனக்கு சொர்க்கத்துக்கு வழி காட்டுகிறேன்..." என்று கம்பீரமாகக் கூறினார்.*

*அதற்கு சிறுவன் என்ன சொன்னான் தெரியுமா?*

*"அட போங்கய்யா...! தபால் நிலையம் போவதற்கே உங்களுக்கு நான்தான் வழி காட்டினேன். நீங்கள் எப்படி எனக்கு சொர்க்கத்துக்கு வழிகாட்ட முடியும்?"*

*மதகுரு பதில் சொல்ல முடியாமல் முழித்தார்.*

○+

*** விளையாட்டு வேறு, அரசியல் வேறு என்பதை ஒப்புக் கொள்கிறீரா?**

சி.தர்மன், ஹெந்தளை.

*இந்தியாவில் அது சரி. இங்கு அது பிழை! ஏனெனில் இங்கு நடப்பது மதிப்பிடக்கரிய உயிர்களை அர்ப்பணித்து உரிமைப் போராட்டம்! இதில் அரசியல் என்றும் விளையாட்டு என்றும் தனியாகப் பிரிப்பதற்கு முடியாது. உதாரணமாக இலங்கை கிரிக்கெட் அணி திறமையான அணிதான். ஆனால் அணியின் வெற்றியும், பிரபலமும், இங்கு நடக்கும் அவலப் போரை உலக அரங்கில் மறைக்க ஓரளவு உதவுவதை மறுக்க முடியாது.*

○+

*** பிரேமதாசாவின் மறுபிறவி பற்றி உமது அபிப்பிராயம்?**

செ.தவச்செல்வி, கொழும்பு-09.

*வடிகட்டிய முட்டாள்தனம். இதனை பத்திரிகைகளும் உண்மைபோல எழுதியது துரதிஷ்டம்! இவ்வாறான மூடத்தனங்களை அம்பலமாக்க வேண்டியதும் பத்திரிகைகளது கடமை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்!*

○+

*** மும்பாய் நடிகைகளின் ஆதிக்கம் தமிழ்ப்பட உலகில் அதிகமாகிவருகிறதே?**

எஸ்.சித்திக், மடவளை.

*அவர்களால்தான் சாதிக்க முடியும் என்று தமிழ்ப்பட இயக்குநர்களும், தயாரிப்பாளர்களும் நம்புவதுதான் காரணம். இக்கரைக்கு அக்கரை பச்சை!*

○+

*** சிந்தியா! குழந்தை பிறக்கவில்லை என்பதற்காக ஆண் ஒருவரை ஆண்மை இல்லாதவர் என்று கூறுவது சரியா?**

எம்.எஸ்., கம்பளை.

*தவறு! நமது சமூகத்தில் நிலவும் மிகப்பெரும் தப்பெண்ணத்தில் அதுவும் ஒன்று! எம்.ஜி.ஆர். ஆண்மை நிறைந்தவர்தான். ஆனால் மூன்று திருமணம் முடித்தும் பிள்ளைப் பாக்கியம் அவருக்கில்லாமல் போய்விட்டது!*

○+

*** ஜொள்ளான கதை ஒன்று கூறுங்களேன்?**

ஆ.திவாகர், மட்டக்களப்பு.

*ஜொள்ளர் திவாகருக்காக இது.*

*ஜெரோம் டியென்ஜல் என்னும் புகழ்பெற்ற அமெரிக்கப் பாதிரியார் தவறான பழக்கவழக்கங்கள் பற்றியும், மனதைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது பற்றியும் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.*

*அப்போது ஒரு இளைஞன் எழுந்து: "இளம் பெண்ணுடன் தூங்குவது தப்பான காரியமா ஃபாதர்?" என்று கேட்டார்.*

*அதற்கு பாதிரியார் சிரித்தபடியே கூறினார்: "இளம் பெண்ணுடன் தூங்குவது பாவமில்லை. ஆனால் நீங்கள் தூங்குவது இல்லையே?"*

○+

*** சக்தி தொலைக் காட்சியில் 'ஜன்னல்' நாடகத்தை நிறுத்தி விட்டனரே?**

மு.லோகநாயகி, கொழும்பு-13.

*சக்தியில் ஒளிபரப்பாகும் நாடகங்களில் நேயர்களை வெறுப்பேற்றும் நாடகம் 'ஆஹா மாதவி'. அதனை நிறுத்துவதற்குப் பதிலாக, பலரது ஏகோபித்த பாராட்டுப் பெற்ற ஜன்னலை நிறுத்திவிட்டனர். நாடகங்களை ஒளிபரப்பிவிட்டு திடீரென்று நிறுத்துவதால் அவற்றை தொடர்ந்து பார்ப்பவர்கள் ஏமாற்றமடைகின்றனர். இவ்வாறு நேயர்களை சோதிக்கும் செயலை தொலைக்காட்சிகள் நிறுத்தவேண்டும். 'நாம் விரும்பினால் ஒளிபரப்புவோம். விரும்பினால் நிறுத்துவோம்!' என்னும் நேயர்களை மதிக்காத மனப்போக்கு மாற வேண்டும். இது அரச, தனியார் தொலைக்காட்சிகள் அனைத்துக்கும் பொருந்தும்.*

○+



*** சிந்தியா! வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வருகையால் என்ன இலாபம்?**

வி.கமலநாதன், கொழும்பு-15.

*அழைத்தது அரசல்லவா! அரச ஆதரவுப் பிரசாரத்திற்கு மேலும் ஒருவர் கிடைத்திருக்கிறார்.*

○+

*** இலங்கை கிரிக்கெட் அணி வீரர் மகாநாமாவை இங்கிலாந்து அணிக் கப்டன் வேண்டுமென்று இடித்தாரே. பார்த்தீரா? இதுதான் அவர்களது நாகரிகமா?**

சு.நசூர்தீன், கல்கிசை.

*நாகரிகம் அல்ல; நிறவெறித் திமிர்! திருப்பி இடித்திருக்க வேண்டும் மகாநாமா!*

○+

*** "அடாவடித்தனம் புரிந்த ஐ.தே.கட்சி சுதந்திரத் தேர்தல் பற்றி பேச முடியாது" என்று ஜனாதிபதி கூறியுள்ளாரே?**

எம்.நகுலன், வத்தளை.

*ஒருவன் கொலை செய்தான் என்பதால், இன்னொரு கொலை நடக்கும்போது மூச்சு விடக்கூடாது என்று கூறுவது என்ன நீதி? ஐ.தே.கட்சியின் தேர்தல் அடாவடித்தனங்களைக் கூறிக்கூறியே தமது கட்சியினருக்கு உருவேற்றிவிட்டனர் பொதுஜன முன்னணியினர்.*

○+

*** சிந்தியா! கேள்வி கேட்பது, பதில் சொல்வது- எது சுலபம்?**

எம்.இந்திராணி, பசறை.

*காஸ்டேர் என்னும் அறிஞர் கூறியதைப் படிப்பது உங்களுக்குப் பிடித்தமாயிருக்கும்.*

*"ஒருவர் கூறும் பதில்களில் இருந்து, அவரது புத்திசாலித்தனத்தைச் சொல்லிவிட முடியாது. எழுகின்ற கேள்விகளாலேயே அவரது புத்திசாலித்தனம் புலப்படும்!"*

○+

*** ஹலோ சிந்தியா! உமக்கு மிகவும் பிடித்த பொருள் என்ன?**

கே.ராம்நாத், திருமலை.

*மெழுகுவர்த்தி!*

○+

*** 'தலைமுறை'யில் இயக்குநர் அதியமானின் நடிப்பு எப்படி?**

எஸ்.விஜிதா, பதுளை.

*பார்த்திபனை இம்மியும் பிசகாமல் பின்பற்றியிருக்கிறார்! தலைமுறையில் என்னைக் கவர்ந்தவர்கள் இரண்டுபேர். ராஜ்கிரண். அடுத்தவர் வில்லனாக அறிமுகமாகி அசத்தியுள்ள இயக்குநர் ராஜ்கபூர்.*

○+

---

ஸ்போர்ட்ஸ்

# நம்பிக்கை இழக்கவில்லை

அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் கார்ல்டன் அன்ட் யுனைட்டட் கிண்ணத்திற்காக முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் விளையாடிவருகிறது.

இலங்கை அணி விளையாடிய முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வியுற்றது. இதுபற்றி அவுஸ்திரேலிய அணியின் ஒருநாள் போட்டிகளுக்கான கேப்டன் ஸ்டீவ் வோவ் கூறும்போது,

"உலக சாம்பியனான இலங்கை அணியின் வீரர்கள் நம்பிக்கை இழந்து வருவதால்தான் தோல்வியைச் சந்தித்து வருகிறார்கள்," என்று கருத்துத் தெரிவித்தார்.

ஸ்டீவ் வோவின் இந்தக் கருத்தை இலங்கை அணியின் கேப்டன் அர்ஜுன ரணதுங்க திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

"எங்களது தோல்விக்கு அவுஸ்திரேலிய இரசிகர்களே முக்கிய காரணம். அவர்கள் நடந்துகொள்ளும் முறை எங்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவே அமைந்துள்ளது." என்றும் ரணதுங்க தெரிவித்தார்.

# தமிழக வீரர் களத்தில்

இந்தியா சென்றுள்ள பாகிஸ்தான் அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் இந்திய அணியில் நவ்ஜோத் சிங், சித்து மற்றும் அஜய் ஜடேஜா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.



எஸ்.ரமேஷ்

இவர்களுக்குப் பதிலாக அணியில் 2 புதுமுகங்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழக துடுப்பாட்ட வீரர் சடகோபன் ரமேஷ் மற்றும் மேற்கு வங்காள சகல துறை வீரர் லஷ்மண் ரத்தன் சுக்லா ஆகிய இருவருமே அப் புதுமுகங்கள்.

"இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காகவே மூத்த வீரர்களான சித்துவும், ஜடேஜாவும் நீக்கப்பட்டு, புதியவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்!" என்று இந்தியக் கிரிக்கெட் அணித் தேர்வுக்குழுத் தலைவர் அஜித் வடேகர் கூறியுள்ளார்.

உண்மையில், சித்துவும் ஜடேஜாவும் நியூஸிலாந்து சுற்றுப் பயணத்தில் சரியாக ஆடாததே முக்கிய காரணமாகும். இவர்களுடன் நியூஸிலாந்து சென்ற ரொபின் சிங் (ஜூனியர்), தேபஷிஸ் மொஹந்தி ஆகியோரும் நீக்கப்பட்டுள்ளனர்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்விலிருக்கும் அஜித் அகர்கரும் இடம் பெறவில்லை. முதலாவது டெஸ்ட் தமிழ்நாடு, சென்னையில் இம் மாதம் 28ம் திகதி முதல் பெப்ரவரி 1ம் திகதிவரை நடக்கிறது. இப்போட்டியில் பங்கு கொள்ளும் வீரர்களின் விபரங்கள் வருமாறு:

முகமட் அஸாருதீன், நயான் மொங்கியா, சௌரவ் கங்குலி, சச்சின் டெண்டுல்கர், ராகுல் ட்ராவிட், வி.வி.எஸ். லட்சுமண், ஜவகல் ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத், அனில் கும்ப்ளே, சுனில் ஜோஷி, ரிஷிகேஷ் கனிட்கர், ஹர்பஜன் சிங், ரத்தன் சுக்லா, எஸ். ரமேஷ்.

# விளையாடத் தடை

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் ரிக்கி பொண்டிங் 3- ஒருநாள் போட்டிகளில் விளையாடக்கூடாது எனத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அவருக்கு 5 ஆயிரம் (நம்நாட்டு மதிப்பில் சுமார் 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா) அவுஸ்திரேலிய டொலர் (ஒத்திவைக்கப்பட்ட) அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சிட்னி நகரிலுள்ள இரவு நேரக் கேளிக்கை விடுதி ஒன்றில் குடிபோதையில் பொண்டிங் குழப்பம் விளைவித்தமைக்காகவே அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

இவருடைய குடிப்பழக்கம் தொடர்பாக, அறிவுரை வழங்கி, ஆற்றுப்படுத்துவோரிடம் இவர் அறிவுரை பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கடந்த 18ம் திகதி குடிபோதையில் ரிக்கி பொண்டிங் நடந்து கொண்ட விதம், ஒரு கிரிக்கெட் வீரருக்குள்ள மதிப்பினை மாசுபடுத்துவதாக அமைந்தது!' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கார்ல்டன் அன்ட் யுனைட்டட் கிண்ணத்திற்கான முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் 3 போட்டிகளில் பொண்டிங் தொடர்ந்து விளையாடவில்லை. அடுத்து அவுஸ்திரேலிய அணி விளையாடும் போட்டியில் ரிக்கி பொண்டிங் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 46

# தீர்க்கதரிசி எரேமியா

ஆண்டவரின் பரிபூரணமான அருட்கடாட்சத்தைப் பெற்ற இறைவாக்கினர் எலிசா, சிரியாவின் படைத் தளபதியான நாகமானுடைய தொழுநோயை நீக்கினார். அவர் கூறியபடி, யோர்தான் நதியில் நாகமான் ஏழுதடவைகள் மூழ்கி எழுந்ததும் அவரைப் பீடித்திருந்த நோய் முற்றாக நீங்கிவிட்டது. எல்லையற்ற மகிழ்ச்சியில் மூழ்கிய நாகமான், தன்னுடன் கொண்டு வந்திருந்த விலைமதிப்பற்ற வெகுமதிகளை எலிசாவிடம் கொடுத்தார். ஆனால் அவர் அவற்றில் ஒரு துரும்பின் அளவினதான பொருளையும் ஏற்க மறுத்துவிட்டார்.

இஸ்ரயேலின் ஆண்டவரைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் தான் இனிமேல் வணங்கப்போவதில்லை என்று நாகமான் எலிசாவிடம் வாக்குறுதி அளித்தார். அத்துடன் ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். அதே இடத்திலுள்ள புனித மண்ணை ஒரு கழுதை சுமக்கும் அளவு எடுத்துக்கொண்டு சிரியாவுக்குக் கொண்டு செல்ல எலிசாவிடம் அனுமதி கோரினார். அதற்கான அனுமதியை எலிசா வழங்கினார்.

நாகமான் கொடுக்க முற்பட்ட பெருந்தொகை பெறுமதியான வெகுமதியை எலிசா ஏற்க மறுத்தமையினால் அவருடைய பணியாளர்கள் சிலர் ஏமாற்றமடைந்தனர். அவர்களுள் ஒருவனான கேகசி என்பவன், எலிசாவுக்குத் தெரியாமல், நாகமானைப் பின்தொடர்ந்து சென்றான். இடையில் நாகமானைக் கண்டு, எலிசா கூறியதாகப் பொய் சொல்லி, எண்பது கிலோ வெள்ளி, பட்டாடைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டான். அவற்றைத் தன் வீட்டில் மறைத்து வைத்துக்கொண்டான்.

இவ்வாறு நடந்தவற்றை எலிசா தனது ஞானத்தால் கண்டுகொண்டார். கேகசி வந்ததும் அவனிடம் எலிசா, நடந்தவற்றைக் கூறி, இவ்வாறு துரோகச் செயல் புரிந்தமையால் அவனுக்கும் அவனுடைய பரம்பரையினருக்கும் தொழுநோய் பிடிக்கும் என்று சாபமிட்டார். அதே நேரத்தில் கேகசியின் உடல் முழுவதும் நீறு பூத்ததுபோல் ஆகி தொழுநோயாளியானான்.



## எலிசாவின் மறைவு

இவைபோன்று எண்ணற்ற அற்புதங்களை ஆண்டவரின் அருளால் செய்த இறைவாக்கினர் எலிசா இறுதிக் காலத்தில் நோய் வாய்ப்பட்டார். இஸ்ரயேலை யோவாசு மன்னர் ஆட்சிபுரிந்த காலத்தில் எலிசா மரணமானார்.

இஸ்ரயேலருக்கும் சிரியாவுக்குமிடையில் அடிக்கடி போர் மூண்ட வண்ணமே இருந்தது. மக்கள் வகை தொகையற்று அழிந்தொழிந்தனர். இஸ்ரயேலரும் யூதா மக்களும் ஆண்டவருடைய கட்டளைகளைப் புறக்கணித்து வந்தமையினால் ஆண்டவருடைய தண்டனைகளும் அவர்கள்மீது இறங்கவே செய்தன. ஆட்சிபுரிந்த மன்னர்களும் ஆண்டவருக்கு விரோத மான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர். நாட்டில் பஞ்சமும் பிணியும் தொடர்ந்து தலைவிரித்தாடின.

மக்களை இரட்சிப்பதற்காக ஆண்டவர் தனது திருக்குமாரனான இயேசுகிறிஸ்து நாதரை பூவுலகுக்கு அனுப்புவதற்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தீர்க்கதரிசியான எரேமியாவின் கதையை இனிக்கூறுகிறோம்.

கிறிஸ்துவுக்கு முன் 640ம் ஆண்டு முதல் 609ம் ஆண்டுவரை யூதாவை ஆட்சி புரிந்த யோசியா மன்னரின் காலத்திலேயே எரேமியா வாழ்ந்தார். யோசியா ஆமோன் மன்னரின் மகன்.

இஸ்ரயேல் மக்களும் யூதாமக்களும் ஆண்டவருக்கு விரோதமான செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள். இதனால் கோபங்கொண்ட ஆண்டவர், மன்னர்களையும் மக்களையும் எவ்வாறு தண்டிக்கப் போகிறார் என்பதனை மக்களுக்கும் மன்னருக்கும் எச்சரிக்கையாக விடுக்க ஆண்டவராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் எரேமியா. இவர் பென்யமின் நாட்டின் அனத்தோத் என்ற இடத்திலிருந்த குருவான இலிக்கியா என்பவரின் மகன்.

## இளைஞனிடம் இறைவாக்கு

யூதாவின் மன்னராக யோசியா ஆட்சிபீட மேறும்போது அவருக்கு வயது ஆக எட்டு. இவர் முப்பத்தொரு ஆண்டுகள் எருசலேமிலிருந்து ஆட்சி புரிந்தார். அவருடைய முதாதையர் சிலரைப்போல் அல்லாது நேர்மையாக நடந்தார். சிதைவுற்றிருந்த ஆண்டவரின் இல்லத்தைத் திருத்தி அமைப்பதற்கும் வேண்டியவற்றைச் செய்தார். இவர் ஆட்சிப்பொறுப்பேற்று பதின்மூன்றாம் ஆண்டில், மிகச் சாதாரண இளைஞனாகத் திரிந்த எரேமியாவுக்கு இறைவனின் அருள் வாக்கு உரைக்கப்பட்டது.

எருசலேமுக்கு வடக்கே அனதோத் என்ற ஊரின் ஒரு புறத்தே ஒரு மரத்தடியில் எரேமியா அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே ஒரு சிறிய ஒளிதோன்றியது. அவ்வொளி வரவரப் பெரிதாகி எரேமியாவின் கண்களைக் கூசவைத்தது. தன் வாழ்நாளில் எப்போதுமே ஏற்பட்டிராத ஒரு புதுவகை உணர்ச்சி அவரை ஆட்கொண்டது. சுற்றுமுற்றும் பார்த்தார்; எவரையும் காணவில்லை. இதனால் எரேமியா சற்றுப் பயந்தார்.

# இராஜகுமாரன்

ஒளியினூடே ஓர் ஒலி எழுந்தது.

"எரேமியா! அச்சங்கொள்ளாதே! வாழ்க்கை நெறிகளிலிருந்து திசைமாறி எமக்குத் தீயதெனப் பட்டதையெல்லாம் செய்து வரும் எமது மக்களுக்கு நல்வார்த்தை கூறி எச்சரித்து அவர்களை வழிநடத்தும் பொறுப்பினை உன்னிடம் ஒப்படைத்துள்ளோம். நீ உன் தாய் வயிற்றிலிருக்கும்போதே உன்னை இப்பணிக்கெனத் திருநிலைப்படுத்தியுள்ளோம்.

அஞ்சாமல் மக்களிடம் செல்! எமது வார்த்தைகளை எத்தயக்கமுமின்றி மக்களுக்கும் மன்னருக்கும் எடுத்துக்கூறு. எப்போதும் நாம் உன்னிடமே இருப்பேன்!"

ஆண்டவருடைய வார்த்தைகளைக் கேட்டதும் எரேமியா சற்று அதிர்ந்துதான் போனார். இருப்பினும் அவ்வார்த்தைகளில் இருந்த அமுதூறும் பேரானந்தத்தில் அவர் மூழ்கினார். சற்றுத் தயங்கியபின்,

"ஆண்டவரே! நானோ வயதில் சிறியவன்; அனுபவமற்றவன்; எவரிடம் எதனைப் பேசுவது என்று தெரியாதவன். இப்பாரிய பணிக்கு இந்த எளியவனைத் தேர்ந்தெடுத்தீர்களே!"

ஆண்டவர் மேலும் கூறினார்:

"உனக்குப் பேசத் தெரியாது என்று ஏன் கூறுகிறாய்? நாம் உன்னோடிருந்து நீ பேச வேண்டிய வார்த்தைகளை உனக்கு அவ்வப்போது உன் வாயில் ஊட்டுவோம்!"

இவ்வாறு கூறியதும் எதிரே வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒளிப்பிளம்பின் மத்தியிலிருந்து ஒரு கரம் எரேமியாவின் வாயை நெருங்கி வந்து தொட்டது. எரேமியாவின் உடல் முழுவதும் மின்னல் தாக்கியது போன்ற உணர்வு தென்பட்டது.

"இஸ்ரயேல்- யூத மக்களுக்கு நாம் கூறும் செய்திகளை எடுத்துச் சொல். இந்த நாட்டை வடக்கிலிருந்து பேரழிவு வந்து ஆட்கொள்ளப் போகிறது. இதனை எதிர்கொள்ள மக்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று மக்களிடம் கூறு! மக்கள் கொதிப்படைந்தாலும் மிரண்டாலும் நீ அஞ்சாதே!"

ஆண்டவரின் எச்சரிக்கையான வாக்கினைக் கேட்ட எரேமியா மிகவும் சோகமடைந்தார். மிகவும் மென்மையான சுபாவங் கொண்ட அவரால், செழிப்பும் வணப்பும் மிக்க நாடு நகர்ப் புறங்கள் சின்னாபின்னப்படப்போவதை அறிந்ததும் மிகவும் வேதனை அவரை ஆட்கொண்டது. சில நாட்கள் சஞ்சலப் பட்டிருந்த எரேமியாவை, மக்களிடம் தைரியமாகச் செல்லுமாறு ஆண்டவர் தூண்டினார்.

## பைத்தியக் காரன்

எரேமியா எருசலேம் நகரத் தெருக்களில் ஒவ்வொரு மூலையிலும் நின்றவாறு மக்களைக் கூவி அழைத்தார். வடக்கே இருந்து பெரும் படை புறப்பட்டு வந்து பேரழிவை ஏற்படுத்தப் போகிறது என்று கூறினார். மக்கள் தன்னைப் பின்பற்றாமல், பிறதெய்வங்களை நாடிச் சென்று கொண்டிருப்பதாலும், நேர்மையான வழிகளை விட்டு விட்டு, ஆண்டவருக்கு விரோதமாக நடப்பதனாலும் இத்தகைய பேரழிவே நாட்டுக்கு ஏற்படப்போகிறது, என்று மக்களிடம் தெரிவித்தார்.

பொதுமக்களோ எரேமியாவின் கூற்றை நம்ப மறுத்தனர். "பைத்தியக்காரன் பிதற்றுகிறான்!" என்று எரேமியாவின் காதில் படும்படியே பலர் அவரைத் திட்டித் தீர்த்தனர். அவரைப் பிடித்து அடி-உதை கொடுக்கவும் பலர் திட்டமிட்டனர். ஆனால் எரேமியா மக்களின் கிண்டல், கேலி, ஆத்திரப்பேச்சு எதற்கும் விட்டுக்கொடுக்காமல், ஆண்டவர் தனக்கிட்ட பணியைத் தொடர்ந்தார்.

ஆண்டவருடைய இல்லத்தின் முன் நின்றவாறு குருமாரையும் வழிப்போக்கர்களையும் அழைத்து ஆண்டவருடைய எச்சரிக்கையை மிட்டு எரேமியா எடுத்துரைத்தார். இறைவனுக்கு மாறான தீயசெயலை அகற்றிவிட்டு மனம் மாறி நல்வழி சென்றால் இறைவனால் ஏற்போடப்போகும் பேரழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று கூறினார். இறைவனின் இல்லமும் அழிக்கப்படும் நிலையும் உருவாகலாம் என்றார்.

எரேமியாவின் கூற்று பலரை எரிச்சலூட்டியது. அவரைப் பிடித்து அரசன் முன் நிறுத்தி மரணதண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்றார்கள் பலர். அவர் கூறுவதில் உண்மை இருக்கலாம் என்று வேறு பலர் கருதினார்கள். (தொடர்ந்து வரும்)

**திருமறை (44) விடை:** ஈசபேல்

**பரிசு பெறுவோர்:**

1. செல்வன் தேவருக்ஷன் புஸ்பராதன், சவுதம் தமிழ் மகா வித்தியாலயம், தெமோதர.
2. சண்முகநாதன் சுமித்திராதேவி, மாரியம்மன் கோயில் வீதி, ஆரையம்பதி-02.
3. ருக்ஷானா ஃபௌசி, காலிவீதி, களுத்துறை (தெற்கு).
4. ஏ. பேரின்பராஜா, சென் ஜோன்ஸ் பிரிவு, கந்தப்பொல.
5. ஏ.சீ.எம். முஸம்மில், இல.37, பிரதான விதி, குளியாப்பிட்டி.

**திருமறை 46 வினா:-**
அ. யோசியா ஆட்சிபீடமேறும்போது அவர் வயதென்ன?
ஆ. எத்தனை வருடங்கள் ஆட்சி புரிந்தார்?

பெப். 06க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 46—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

# பயோ டேட்டா

| | |
|---|---|
| பெயர் | : தொல்லை தவிர்ப்புக் குழு! |
| தொழில் | : அரசுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்ப்பது! |
| உப தொழில் | : சீருடையினரிடம் விளக்கம் கேட்பது! |
| சாதனை | : சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழர்களின் புகைப்படம் கோரவைத்தது! |
| விரும்புவது | : பத்திரிகைகளில் செய்திகள்! |
| விரும்பாதது | : பத்திரிகைகளில் விமர்சனங்கள்! |
| தவிர்க்கமுடியாதது | : தொடரும் கைதுகள் |
| எடுக்க முடியாதது | : நடவடிக்கை. |

# துரையப்பாவின் மறுபிறவி



யாழ்ப்பாணத்தில் ஓர் அதிசயம், ஆனால், உண்மை.

துரையப்பாவின் மறுபிறவி தோன்றியுள்ளது.

பிறந்து ஒரு வருடமாகாத குழந்தை துஷ்யந்தன் என்பவரே துரையப்பாவின் மறுபிறவியாக அவதரித்துள்ளார்.

முதல் வார்த்தையாக இக்குழந்தை 'அம்மே' என்று அழைத்ததாம். திரு. துரையப்பா திருமதி சிறிமாவோ அம்மையாரின் விசுவாசியாக இருந்தவர் என்பது தெரிந்ததே. அதனால்தான் அதனை இப்போதும் மறக்காது 'அம்மே' என்று அழைக்கிறதாம்.

'உன் பெயர் என்ன' வென்று கேட்டால்... "ஊ..ஊ.... து...அப்....அப்...அப்பா" என்று அழைத்தது. குழந்தைக்கு நாக்குத் தடிக்காத காரணத்தால் துரை என்று உச்சரிக்க முடியவில்லை. அதனால் துரையப்பா என்பதற்கு பதிலாக 'அப்பா' எனச் சொல்கிறது என்று கண்டு பிடித்துள்ளனர்.

அடிக்கடி இக் குழந்தை வானத்தை அண்ணாந்து பார்க்கிறது. வானம் நீல நிறம் என்பது தெரிந்ததே. (தெரியாதவர்கள் அண்ணாந்து பார்த்துக் கொள்ளவும்) சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக இருந்தவர் துரையப்பா. அக்கட்சிக் கொடியின் நிறம் நீலம். வானத்தை பார்த்ததும் கட்சிக் கொடி என்று நினைத்து மறுபிறவி துரையப்பா குதூகலிக்கிறார்.

துரையப்பா சிலைக்கு அருகே குழந்தையை தூக்கிக்கொண்டு சென்றனர். உடனே குழந்தை அழத்தொடங்கியது. தன் சிலையின் நிலையைக் கண்டு பொறுக்க முடியாமல் அழுதிருக்கிறது. வேறு குழந்தைகள் இப்படி சிலையைப் பார்த்து அழுததில்லை என்பதால், இக்குழந்தை துரையப்பாவின் மறுபிறவி என்பதற்கு மேலும் ஆதாரம் கிடைத்துள்ளது.

துரையப்பாவின் வீட்டிற்கு குழந்தையை கொண்டு சென்றனர். தத்தித் தத்தி சென்ற குழந்தை அங்குள்ள கட்டிலைக் கண்டதும் ஏறிப்படுத்துக்கொண்டது. அக்கட்டிலில்தான் துரையப்பா தூங்குவது வழக்கம்.

துரையப்பாவின் படத்தைச் காட்டி 'இது யார்?' என்று கேட்டனர். குழந்தை உடனே சிரித்தது. கேள்வி கேட்பவர்களின் அறியாமையை நினைத்தே மறுபிறவி அப்படிச் சிரித்தது.

பின்பு தன் விரலை தன் நெஞ்சில் தட்டி, 'நா','நா' என்று கூறியது. துரையப்பா நான்தான் என்பதையே அவ்வாறு மழலை மொழியில் கூறியதால், கண்டவர்கள் யாவரும் மறுபிறவி என்பதை ஒப்புக்கொண்டனர்.

## மறுபிறவி கடத்தல்

'துரையப்பாவின் மறுபிறவி'யான துஷ்யந்தன் திடீரென்று காணாமல் போயுள்ளார்.

இந்த மறுபிறவி எதிர்காலத்தில் தமக்கு போட்டியாக வந்துவிடும் என்று கருதும் கட்சியினர் யாராவது இவரைக் கடத்திச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் கிளப்பப் படுகிறது.

தன்னைத் துரோகி என்று சுட்டிக் காட்டிய கட்சி ஒன்று, இன்று தன் பாதையில் நடைபோடுவதை 'மறுபிறவி' சுட்டிக்காட்டலாம் என்று பயந்து, இவரை அந்தத் தமிழ்க் கட்சி அகிம்சை முறையில் கடத்திச் சென்றிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

சமீபத்தில் தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர், மறுபிறவியை பார்வையிடச் சென்றிருந்தார்.

அப்போது அவரைப் பார்த்து மறுபிறவி முறைத்துள்ளது. இதன் பின்னரே மேற்படி கடத்தல் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

யாழ் குடாநாடெங்கும் மறுபிறவியை வலைவீசி தேடிவருகின்றனர். தேர்தல் நெருங்குவதால் மறுபிறவி பிரசாரத்திற்கு வரக்கூடும் என்று சில கட்சிகளுக்கு கிலி பிடித்துள்ளது.

## தலைவர்கள் கலக்கம்



துரையப்பா மறுபிறவியாக தோன்றியிருப்பதை அடுத்து, தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலருக்கு கலக்கம் பிடித்துள்ளது.

தாமும் எதிர்காலத்தில் மறுபிறவியாக தோன்றினால், தம்மையும் அறியாது 'அம்மே' என்று கூறிவிடுவோமோ என்றே கலக்கமடைந்துள்ளனர் என உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

தாம் அரசுக்கு ஆதரவில்லை என்று குறிப்பிட்ட கட்சிகள் சில தற்போது கூறிவருகின்றன. இப்பிறவியில் தாம் கூறும் பொய், மறுபிறவியில் அம்பலமாகிவிடக்கூடாது என்றே மேற்படி கட்சிகளின் தலைவர்கள் கலக்கம் அடைந்துள்ளனராம்.

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)





அருள் ஜுவலர்ஸ்


பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

433631


# முன் தோன்றிய மூத்தகுடி






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


➡ பலகோடி வருடங்களுக்கு முன்னரே அழிந்தொழிந்து போன டைனோசர் போன்ற மிகப்பிரமாண்டமான பிராணிகள் பற்றி பல தகவல்கள் இப்பொழுதும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. படத்தில் காணப்படுவதும் இதே ரகத்தைச் சேர்ந்த ஒரு விலங்கின் மாதிரித் தோற்றம்தான். இதன் பெயர் 'ஸ்ரெகோசெளரஸ்'

இப்பிராணி ஏறத்தாழ 9 மீட்டர் (30 அடி) நீளமும் 3.3 தொன் எடையும் கொண்டது. ஆனால் இதன் மூளையின் எடை 70 கிராம் (2 1/2 அவுன்ஸ்) மட்டுமே. இது அதன் எடையில் 0.002% சத விதமாகும். மனித மூளையானது மனித எடையில் 1.88% சதவிதமானதாகும்.

ஆங்காங்கே காணப்படும் புதை வடிவங்களை ஆய்வாளர்கள் ஆராய்ந்து கொண்டிருப்பதனால் புராதான காலத்தில் உலகில் வாழ்ந்து மறைந்து போன உயிரினங்களின் உருவங்களை இப்போது செயற்கையாக உருவாக்கி-இன்று வாழும் மனிதருக்குக் காட்டுகிறார்கள்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர் முட்டைகளில் ஆகப் பெரிய முட்டையின் அளவு 12 மீட்டர் (40 அடி) நீளமுடையது.

சுமார் 8 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பிராணியின் முட்டை, பிரான்ஸ் நாட்டின் அய்க்ஸ்-என் மாகாணத்தில் டுரான்ஸ் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. இம்முட்டை உடைந்து போயிருந்தது.

அது உடையாமலிருந்திருந்தால் 30 செண்டி மீட்டர் (ஒரு அடி) நீளமுடையதாகவும் 25.5 செண்டி மீட்டர் (10 அங்குலம்) விட்டம் கொண்டதாகவும் இருந்திருக்கும். இதற்குள் 3.3 லிட்டர் (5.8 பைன்ற்) கரு இருந்திருக்க வேண்டும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.



## ஆடை


➡ தனது ஆடை அலங்கார விடயத்தில் ஆர்வமும், புதிய இரசனைகளும் உள்ளவர் டயானா. டயானா உயிருடன் இருந்தபோது, அவர் அணியும் ஆடைகளைப் பார்த்து தாமும் அதுபோல அணிந்து கொண்டனர் பல கோடிப்பெண்கள். எந்தவிதமான ஆடை அணிந்தாலும் எடுப்பாக இருக்கும் உடல்வாகு கொண்டவர் டயானா. ▫

⬅ குதி உயர்ந்த பாதணிகள் நூற்றுக்கணக்கான சோடிகள் அவரிடம் இருந்தபோதும், அவர் சிலகாலம் அவற்றை அணிய மறுத்தார்.

இளவரசர் சாள்ஸ் டயானாவும் சமமான-5 அடி 10 அங்குலம்-உடையவர்கள். அவ்வாறிருக்கும்போது டயானா மட்டும் உயரமான குதியுடைய பாதணியை அணிந்தால் இளவரசரை விட ஒரு சில அங்குலங்கள் உயரமுடையவர் என்பதைக் காட்டவேண்டிய நிலை ஏற்படலாம் என்பதால் தன்னடக்கத்துடன் அவர் நடந்து கொண்டார்.

சாள்ஸ் உடன் பிணக்குத் தோன்றிய பின்னர் மறுபடி குதி உயர்ந்த காலணிகளை அணியத் தொடங்கினார்.

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் 1997, ஜூன் மாதம் நடைபெற்ற 'கண்ணி வெடித் தடுப்பு'த் தொடர்பான பிரசார இயக்கம், பற்றிய செய்தியாளர் மாநாட்டின் போது, மிகச் சிறப்பான முறையில் 'சானல் கோட்' பாதணியுடன் இளவரசி டயானா காணப்படுகிறார்.



## தளராமை

⬇ எந்தப் பணியையும் மிகவும் மெதுவாகச் செய்பவனை 'ஆமை' என்று கூறுவார்கள். ஆமையின் வேகம் மிகக் குறைவுதான். ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்ல மிகவும் மெதுவாக ஊர்ந்தே செல்லும். நடப்பதில் மட்டுமல்ல, உணவினை உட்கொள்வதிலும் அவசரமில்லாமல் மெதுவாகவே உண்ணும். ஆனால் ஒரே தடவையில் அதிகமான உணவுப் பொருட்களை விழுங்கிவிடும். இத்தனைக்கும் ஆமைகளுக்கு வாயில் பற்களே கிடையாது. வாயின் தாடைகளின் ஓரங்கள் மிகத் தடிப்பாக இருப்பதனால் செடி கொடி தளிர்களை உதடுகளாலேயே மென்று விழுங்கும்.

அப்போது தளராது முயன்று நீர் தேடத் தொடங்கும். கள்ளி போன்ற செடிகளில் நீர்ப்போசிப்பு அதிகம் இருப்பதால்-இச்செடிகளை ஆமைகள் கண்டுவிட்டால் [illegible] போஷாக்கான உணவுடன் தாகத்துக்கான தண்ணீரும் இதில் கிடைத்துவிடுகிறது.

கள்ளிச் செடியைக் கடித்து உண்பதுடன், ஆமை நீர் அருந்தும் காட்சியே இதுவாகும். ▪



## 2வது பிறந்தநாள் வாழ்த்து

**26.11.1998**

கைதடி வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவயோகநாதன்-குளோசினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா தனது இரண்டாவது பிறந்தநாளை சுவிஸ், சூரிச் மாநிலத்தில் உள்ள தனது இல்லத்தில் 26.11.98 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, கைதடி வடக்கு அப்பம்மா, மாமா, மாமி, மச்சான்மார், நீர்வேலி அம்மப்பா, அம்மம்மா, மச்சாள், மச்சான், மாமா, சித்தி, சித்தப்பா, அண்ணாமார், பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சௌமியாக் குட்டியை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா-சிவயோகநாதன், சூரிச், சுவிஸ்.

செல்வி சௌமியா சிவயோகநாதன்

↘ ரஷ்ய நாட்டின் ஜனாதிபதி போறிஸ் நிக்கோலாயாவிச் யெல்ட்சினுக்கு 67 வயதாகிறது. அடிக்கடி திடீர் நோய்கள் அவரை வந்து தாக்குகின்றன. இதனால் யெல்ட்சின் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார். உலகிலுள்ளநாட்டு ஜனாதிபதிகளுள் இவர்தான் 10க்கு மேற்பட்ட தடவைகள் மருத்துவமனையில் படுக்கையில் கிடந்துள்ளார். இது ஓர் உலக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

போறிஸ் யெல்ட்சின் வியக்கத்தக்க மற்றுமோர் உலக சாதனையை நிலைநாட்டியிருக்கிறார். முன்னாள் சோவியத் யூனியனுக்கான-1989 மார்ச் 26ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மொத்தம் 51 இலட்சத்து 18 ஆயிரத்து 745 வாக்குகளைப் பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்டவரைவிட 3 இலட்சத்து 92 ஆயிரத்து 937 மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டினார்.

உலகிலேயே வேறு எந்த அரசியல்வாதியும் இவ்வளவு மொத்த வாக்குகளைப் பெற்றதில்லை. இதற்கு முன்னர் பிறிதொரு அரசியல்வாதி பெற்ற மொத்த வாக்குகள் 4,726,112 மட்டுமே. ▪



## வைத்திய சாதனை



## நிலம், நீர்

⬆ முன்னர் ஒரு காலத்தில் 'ஜேம்ஸ் பொண்ட்' படத்தில் பார்த்தவையெல்லாம், இப்போது நிஜமாகவே பாவனைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

நிலத்திலும் அதே சமயம் நீரிலும் ஒரே வேகத்தில் செல்லக் கூடிய வாகனம் 'ஹொவர்கிராஃப்ட்' எனப்படுவது. நூற்றுக்கணக்கானோரை ஏற்றிக் கொண்டு இவை பிரயாணம் செய்யக்கூடியவை.

இப்பொழுது சிறிய 'ஹொவர்கிராஃப்டு'கள் பாவினைக்கு வந்துள்ளன. இவற்றை பிரேஸில் மற்றும் நியூஸிலாந்து விமானத்தளங்களின் உபயோகத்துக்காக இந்நாடுகள் கொள்முதல் செய்துள்ளன.

விமானங்கள் ஏதாவது கோளாறு காரணமாக கடலில் மோதி விழ நேர்ந்தால் ஒடிச் சென்று மீட்புப்பணியினை ஆரம்பிக்க இவ்வாகனங்கள் பெரிதும் உதவி புரியுமாம்.

கடலில் ஒடிச் செல்லும் அதே வேகத்தில் கடற்கரையிலுள்ள சொதுசொதுப்பான மணலிலும் கற்கள் நிறைந்த இடங்களிலும் வேகமாக ஒடக்கூடியவை இவை.

இத்தாலி நாட்டிலுள்ள வெனிஸ் நகரில் பாதைகள் பெரும்பாலும் கிடையாது. நீரோடைகள்தான் தெருக்களாகப் பயன்படுகின்றன. படகுகளில் தான் மக்கள் போக்குவரத்து. இதனால் இந்நகரத் தீயணைக்கும் படையில் ஹொவர்கிராஃப்ட்தான் வாகனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான ஒரு கடற்கலம் இலங்கை கடற்படையினராலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. ▬



படிப்பகம்

இப்பத்திரிகை கொழும்பு [illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் 20, [illegible] அச்சகத்தில் ஜனவரி 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.